விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 வைகாசி 30 வியாழக்கிழமை (13.06.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 176

# இலங்கை மீதான அடுத்த கட்டம் என்ன?

## அவதானிக்கிறது அமெரிக்கா



இலங்கை மீதான அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பாக உன்னிப்பாக அவதானம் செலுத்தி வருவதாக ஐ.நாவில் போர்க் குற்றங்களை கையாளும் அமெரிக்க தூதுவர் ஸ்ரீபன் ஜே ராப் தெரிவித்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

### கடும் வாதப் பிரதிவாதங்களின் பின்

## காணிச் சுவீகரிப்பு வழக்கு யூலை 15க்கு ஒத்திவைப்பு

வலிகாமம் வடக்குக் காணிச் சுவீகரிப்பு தொடர்பில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சில சட்டத்தரணிகளால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள உயர் நீதிமன்ற நீதியரசர் ஸ்ரீபவன் மற்றும் நீதியரசர் சத்தியா கெட்டிகே முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

நீதியரசர் ஸ்ரீபவன், காணிச் சுவீகரிப்புச் சட்டத்தின் பிரிவு 38 காப்புரை (a) பந்தியின் கீழ் சுவீகரிப்பிற்கு உட்படுத்தும் காணியின் உடைமையை உடனடியாக எடுக்கும் அறிவித்தலை மீள்பரிசீலனை செய்யுமாறு அரச தரப்பில் ஆஜராகிய பிரதி சொலிசிட்டர் ஜெனரல சவிந்திர பொணான்டோவிற்கு அறிவுரை கூறினார்.

காணிச் சுவீகரிப்புச் சட்டத்தின் பிரிவு 2இன் கீழான அறிவித்தலிற்குப் பின்னர் செய்யப்படும் பிரிவு 4இன் கீழான அறிவித்தலை வழங்குமாறும் அதன் பின்னராகக் காணி உரிமையாளரின் ஆட்சேபனைகளிற்கு இடமளித்து அதன் பிரகாரம் காணிச் சுவீகரிப்பு நடைமுறையை மேற்கொள்ளுமாறும் நீதியரசர் ஸ்ரீபவன் அறிவுரை கூறினார். எனினும் மனுதாரர் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி குமாரவடிவேல் குருபரன் பிரிவு 2 (02ஆம் பக்கம் பார்க்க)

## குருதிக் கொடையாளர் அலரி மாளிகையில் நாளை கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

குருதிக் கொடையாளர்கள் தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் மூவாயிரத்து 500 பேர் அலரி மாளிகையில் கௌரவிக்கப்படவுள்ளனர். யாழ்ப்பாணத்திலிருந்து 137 பேர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

உலகக் குருதிக் கொடையாளர் தினம் யூன் 14 ஆகும். தமது மௌனமான ஈடிணையற்ற சேவையின் மூலம் எண்ணற்ற பெறுமதியான உயிர்களைப் பாதுகாத்துக் கொண்டிருக்கும் குருதிக் கொடையாளர்களையும் இரத்ததான முகாம் ஒழுங்கமைப்பாளர்களையும் ஊக்குவிப்பதற்கும் பாராட்டுவதற்கும் தேசிய ரீதியான வைபவம் யூன் 14-ம் திகதி அன்று இலங்கைக் குடியரசின் ஜனாதிபதி தலைமையில் அவரின் வாசஸ்தலமான அலரி மாளிகையில் இடம்பெறவுள்ளது.

இதற்குத் தேசியமட்டத்தில் மூவாயிரதது (20ஆம் பக்கம் பாாக்க)

## இந்தியாவை முந்திய இலங்கை!

சர்வதேச சமாதான சுட்டியில் இந்த வருடம் இந்தியாவை பின்தள்ளி இலங்கை முன்னிலையில் உள்ளது.

162 நாடுகளுக்கு இடையிலான சமாதான தரவரிசையில் இலங்கைக்கு 108ஆவது இடம் வழங்கப்பட்டுள்ளது. எனினும் இதில் இந்தியா 147ஆவது இடத்தில் உள்ளது.

வன்முறைகள் இல்லாத சமாதானமாக வாழக்கூடிய சூழ்நிலை உள்ளிட்ட 22 சுட்டிகளின் அடிப்படையில் இந்த தரப்படுத்தல் இடம் பெற்றுள்ளது.

இதில் சுவிட்சர்லாந்து முதலாம் இடத்திலும், டென்மார்க் மற்றும் நியூசிலாந்து என்பன இரண்டாம் மூன்றாம் இடங்களிலும் உள்ளன. பிரித் (02ஆம் பக்கம் பாாக்க)

## மீனவர்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

மன்னாரிலிருந்து கொழும்பு, காலி, பொத்துவில் வரையான கடல் மற்றும் கரையோரப் பகுதிகளில் சீரற்ற காலநிலையுடன் கூடிய காற்று வீசுவதால் மீனவர்கள் கடலுக்குச் செல்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இப்பிரதேசங்களில் மணித்தியாலயத்திற்கு 70 கிலோமீற்றர் வரை (20ஆம் பக்கம் பார்க்க)

### 13ஆவது திருத்தத்தில் மாற்றம் வேண்டாம்

## பேராயர் சம்மேளனம் விடுத்த கோரிக்கை அரசால் நிராகரிப்பு

அரசியல் அமைப்புச் சட்டத்தின 13வது திருத்தச் சட்டத்தில் எந்த மாற்றங்களையும்' செய்ய வேண்டாம் என கத்தோலிக்க பேராயர்கள் சம்மேளனம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களை சேர்ந்த 12 பேர் விடுத்திருந்த கோரிக்கையை அரசாங்கம் முற்றாக நிராகரித்துள்ளது.

நாட்டின் தேசிய பாதுகாப்பு சம்பந்தமாக அரசசார்பற்ற நிறுவனங்களுடனோ, மத அமைப்புகளுடனோ எவ்விதமான இணக்கப்பாடுகளுக்கும் செல்வதில்லை என அரசாங்கம் திட்டவட்டமாக தீர்மானித்துள்ளது. இதனடிப்படையில் இந்த கோரிக்கையை நிராகரிக்க நேர்ந்ததாக அரசாங்கத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை மக்களின் கருத்துக்களை கேட்டறியாது, இந்தியாவினால், 13-வது அரசியல் அமைப்புத் திருத்தச் (20ஆம் பக்கம் பார்க்க)

## அரச ஆதரவுடனேயே ரணில் மீது தாக்குதலாம்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பயணித்த வாகனங்களின் மீது அரசாங்கத்தின் ஆதரவுடனேயே பலப்பிட்டியில் வைத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று அக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல குற்றஞ் சாட்டியுள்ளார்.

இந்த தாக்குதலுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடா (20ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாரத்துடன் கூடிய தீர்வே தமிழ் மக்களின் அபிலாஷை!

### சிறிதரன் எம்.பி தெரிவிப்பு



தமிழருக்குஒருதாயகம்உண்டு. ஒருதேசம்உண்டு. அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை உள்ளது.அவற்றை அடிப்படையாக ஏற்றுக்கொண்டு அவற்றைப் பாதுகாக்கக்கூடிய அதிகாரங்கள் உள்ள, தமிழர்கள் தம்மைத்தாமே ஆளக்கூடிய அதிகாரங்களைத் தரக்கூடிய ஒரு தீர்வே தமிழர்களின் அபிலாஷையாகும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ்.ம்ாவட்ட பாராளுமன்ற (19ஆம் பக்கம் பார்க்க)

## பனையால் விழுந்து வயோதிபர் பலி

(யாழ்ப்பாணம்)

பனையால் தவறி விழுந்த வயோதிபர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று முற்பகல் 10 மணியளவில் உரும்பிராய் வடக்கில் இடம்பெற்றுள்ளது.

இதில் கோண்டாவில் வடக்கு குமரகோட்டத்தினைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான வீரகத்தி நாகலிங்கம் (வயது 63) என்பவரே பலியானவராவார்.

இவரது சடலம் நேற்று மதியம் 1.35 மணியளவில் பிரேதப் பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மரண விசாரணை அதிகாரி ந.பிறேமகுமாரின் மரண விசாரணையின் (20ஆம் பக்கம் பார்க்க)

கனடா: கணவன் - மனைவி ஒரு மாதத்தில் பறக்கலாம்
படிக்க, உழைக்க சட்ட ஆலோசனை
அரிய வாய்ப்பு 2 குடும்பங்களிற்கே
திசைகாட்டி பிறைவேற் லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 2219016, 021 5689090
(சி 3602)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## தவறிவிட்டது

குட்செட் வவுனியா எனும் முகவரியினை- யுடைய தங்கராசா - சுதர்சன் ஆகிய என்னுடைய சாரதி அனுமதிப் பத்திரம் (A 662 6462) மற்றும் விசேட அடையாள அட்டை, முக்கிய ஆவணங்கள் அடங்கிய மணிப்பர்ஸ் உடுவிலுக்கும் மாவிட்டபுரத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 077 215 2102

(c-3607)



## பதவி வெற்றிடம்

- KORD மெசின் மைண்டர் (1 Colour, 4 colour வேலை செய்யக் கூடியவர்)
- Computer Designer (1 Colour, 4 Colour செய்யக் கூடியவர்)
- Marketing Officer (Printer அனுபவம் உள்ளவர்)

தொடர்புகளுக்கு:

எவகிறீன் அச்சகம்

693, K.K.S Road, Jaffna. 021 221 9893, 077 8418 172

(3013)


# காணிச் சுவீகரிப்பு வழக்கு...

அறிவித்தலும் முழுக் காணிச் சுவீகரிப்பு நடைமுறையும் இரத்து செய்யப்படவேண்டும் என வாதிட்டார். பிரிவு 2 அறிவித்தலில் சுவீகரிக்கப்பட வேண்டிய காணி முறையாக அடையாளங் காணப்படவில்லை என்றும் குறிப்பாக ஜெனிவா மனித உரிமைப் பேரவையில் அரசாங்கம் உயர் பாதுகாப்பு வலயங்களே இல்லை எனக் கூறியமைக்கு மாறாக அரசாங்கம் செயற்படுவது மனுதாரர்களது நியாயமான எதிர்பார்ப்புக்களுக்கு எதிரானது எனவும் சட்டத்தரணி குருபரன் வாதிட்டார்.

மனுதாரர்கள் தமது மனுவில் சில மாற்றங்களைச் செய்ய் வேண்டி இருப்பதனாலும் அரச தரப்பு மேலும சிலவிளக்கங்களை இராணுவத்திடமிருந்து பெற நேர அவகாசம் கோரியமையினாலும்வழக்கு 15 யூலை 2013 இற்கு ஒத்திவைக்கப்பட்டது.

மனுதாரர்கள்சார்பில் சட்டத்தரணிகள் ஜெ.ஜெயரூபன், வி. திருககுமரன்,விமணிவண்ணன் மற்றும் சுபாஜினி கிஸோஅன்ரன்ஆகியோரின் அனு சரணையுடன் சட்டத் தரணி கு. குருபரன் ஆஜராகினார்.

சட்டமா அதிபர் சார்பில் பிரதி சொலிசட்டர் ஜெனரல் சவிந்திர பெர் னாண்டோ மற்றும் சிரேஷ்ட அரச சட்டத்தரணி நெரின் புள்ளே ஆகியோர் ஆஜராகினர். (எ-11)

# இந்தியாவை...

த்தானிய 46-வது இடத்திலும், ரஷ்யா, அமெரிக்கா போன்ற நாடுகள் 98-ம், 99 மற்றும் 100-ம் இடங்களிலும் உள்ளன. இதேவேளை ஆசிய நாடுகளை பொறுத்தவரையில் பூட்டான் 45-வது இடத்தில் உள்ளமை சிறப்பம்சமாகவும்.

தெற்காசிய நாடுகளின் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்விலும், பூட்டான் முதலாம் இடத்திலும், பங்களாதேஷ் இரண்டாம் இடத்திலும் இலங்கை மூன்றாம் இடத்திலும் உள்ளன. (எ-11)


## விற்பனைக்கு

சுழிபுரம் மத்தியில் அமைந்துள்ள 2பரப்புக் காணியில் புதிதாக அமைத்த 2கடையும், வீடும் விற்பனைக்கு உண்டு.

கீரிமலை வீதி விளானில் அமைந்துள்ள கடையும் வாடகைக்கு உண்டு.

தொடர்புக்கு: 0772236014, 0213002442

(3026)











## தர்ஷா பயிற்சியகம்

மகளிர்க்கான மூன்று மாத கால பயிற்சி

17.06.2013 காலை 9 மணிக்கு

Cake Icing - 8 விதமான Icing வகைகள். மாச்சீனி மலர்கள் செய்யும் முறைகள்

Hair Style - 50 விதமான கொண்டைகள் போடும் முறை, 5 விதமாக முடிவெட்டும் முறைகள்

Dressing - 12 விதமாக சாறி கட்டும் முறை. தமக்குத் தாமே Make up செய்யும் முறை

Focial - 10 விதமாக Focial, Mahendi, Nailart, Eye brow Threading

மேலதிக விபரங்களுக்கு - 021 7201 341

19, கஸ்தூரியார் வீதி, முதலாம் ஒழுங்கை

யாழ்ப்பாணம் (உதயன் பத்திரிகைக்கு அருகாமை)



(3019)



UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

VACANCY

Applications will be received by me up to 12th July 2013 from suitably qualified candidates for the following post:

**1. POST - PUBLIC HEALTH INSPECTOR, GRADE III**
(University of Jaffna)

**Qualifications:**

Should have passed the public Health Inspectors Examination conducted by the Department of Health.

| | | |
|---|---|---|
| Salary Scale | : | U-MT1 (IIIA) Rs.Rs.16535-7x155;10x185-19470 p.m |
| Selection | : | By Interview |
| Age Limit | : | Not more than 45 Years (*Note - Age limit is not applicable for applicants in the Government/Departments/State Corporation and statutory bodies.) |

**Statutory Benefits :**

1. Allowance approved by the University Grants Commission.
2. Membership in Universities provident Fund and Pension Scheme in the University System.
3. Gratuity payments
4. Employment Trust Fund Benefits
5. Free Medical care

Application forms may be obtained from the office of the Senior Assistant Registrar / Establishments Branch (Non Academic Section), University of Jaffna, Thirunelvely, Jaffna, either in person or by post on a payment of Rs.100/= per application form.

Those who wish to obtain application forms by Post are requested to send a Money Order / Postal Order drawn in favour of **"Bursar, University of Jaffna, Thirunelvely, Jaffna"** together with a self - addressed Rs.5.00 stamped envelope of 23x10 c.m in size.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/Postal Order for Rs.100 to the applications forms drawn in favor of the Bursar University of Jaffna.

Duly completed application form should be sent under registered cover to reach the **Senior Assistant Registrar/Establishments Branch (Non Academic Section), University of Jaffna, Thirunelvely, Jaffna on or before 12.07.2013**

Applications sent on the specified form only will be accepted. Applications received after the closing date or illegible and incomplete applications will be rejected without intimation.

Those who are in Public Service / Corporations / Statutory Bodies should forward their applications through their respective Heads of Departments / Corporations/Boards.

Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for the appointment if the applications routed through the Head of Department is not received.

**REGISTRAR**
**12.06.2013**

(C-3606)



உ

குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



இலங்கை மனவளக்கலை மன்ற அறக்கட்டளை வழங்கும் சிறப்பு யோகா வாழ்வு பற்றிய பயிற்சிகள்

அருட்தந்தை தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்களால் வடிவமைக்கப்பட்ட முழுமை நல வாழ்வுக்கு மனவளக்கலை யோகா பயிற்சிகள்

- எளியமுறை உடற்பயிற்சிகள்
- எளியமுறை காயகல்பப் பயிற்சி
- எளிய முறை தியானப்பயிற்சிகள்
- அகத்தாய்வு எனும் தற்சோதனை பயிற்சிகள்

மனிதன் இன்று மன அமைதியின்றி குழப்பங்களுடனும் பல சவால்களுடனும் வாழ்ந்து வருகின்றான். இவற்றையெல்லாம் நீக்கி மனிதனின் சிந்தனையை விருத்தி செய்து மன அமைதி, நோய் எதிர்ப்பு சக்தி, குடும்ப அமைதி போன்ற அனைத்தையும் ஒருங்கே பெற்றுக் கொள்ளக் கூடியதாக் வடிவமைக்கப்பட்ட அற்புதமான பயிற்சியே மனவளக்கலை யோகா பயிற்சி.

அனேகரின் வேண்டுகோளுக்கிணங்கவும் பயிற்சி பெற்றவர்களின் பாராட்டுகளுக்கு இணங்கவும் இவ்வாறான அரிய பயிற்சியினை மீண்டும் ஆரம்பிக்கின்றோம். ஏற்கெனவே பயிற்சியைப் பெற்றவர்களும் இதில் பயின்று பயன் பெற்றுக் கொள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

காலம் - 15.06.2013, 16.06.2013 பிற்பகல் 4.30 மணி - 17.06.2013, 18.06.2013, 19.06.2013, 20.06.2013 பிற்பகல் 5.00 மணி

இடம் - நாச்சிமார் கோயில் திருமண மண்டபம் கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

அகத்தாய்வு II (தற்சோதனை பயிற்சிக்கு)

காலம் - 15.06.2013, 16.06.2013 (சனி, ஞாயிறு) காலை 8.30 - மதியம் 1.30

இடம் - வண்ணார்பண்ணை தவமையம்

அகத்தாய்வு I பயிற்சி முடித்தவர்களுக்கு அகத்தாய்வு II பயிற்சி வழங்கப்படவுள்ளது. இதில் சினம் தவிர்த்தல், கவலை ஒழித்தல் ஆசை சீரமைத்தல் நான் யார் என்ற தத்துவ ரீதியான விளக்கங்களும், தவநிலையில் உயர்நிலை ஆசிய துரியாதீதம் என்ற தவமும் கற்றுக் கொடுக்கப்படும். இவற்றில் பங்கு கொண்டு பயன் பெறுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நிகழ்ச்சி நிரல்

இறைவணக்கம், குருவணக்கம், தொடக்கவுரை - மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி சி.முருகானந்தவேல் (இலங்கை மனவளக்கலை மன்ற அறக்கட்டளை) அவர்கள். அறிமுகவுரையும் பயிற்சி வழங்கலும் மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி S.இந்திரா அவர்கள்

வாழ்க வளமுடன்.

இலங்கை மனவளக்கலை மன்ற அறக்கட்டளை
வண்ணார்பண்ணை தவமையம்,
நாச்சிமார்கோயிலடி
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு -
077 772 6732, 077 123 5646
071 440 3268, 077 736 8745

[3016]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## சாமர்த்தியம்

யாரையும் ஏமாற்றவும் கூடாது; ஏமாந்து போகவும் கூடாது; இதற்கு மிகவும் சாமர்த்தியம் அவசியம்.

ஒரு ஊரிலே பெரிய வீணை வித்துவான் இருந்தார். உண்மையிலே வீணை வாசிப்பதிலே மிகவும் கெட்டிக்காரன்.

அவரது வீணை வாசிப்பை கேட்டு விட்டு ஒரு மகாராஜா என்ன செய்தார் தெரியுமா? ஆள் உயரத்துக்கு ஒரு வீணையை தயார் செய்து அதை அவருக்கு பரிசாகக் கொடுத்தார்.

அதன்பின் அவர் எந்த ஊருக்குச் சென்றாலும் அந்த வீணையைத் தன்னுடன் எடுத்துச் சென்று கச்சேரிகளில் வாசிப்பார். அவர் வீணை வாசிப்பதில் நம்பர் வன் என்று கூறலாம்.

அதேபோல் கடம் வாசிப்பதில் தேர்ச்சி பெற்றவர் ஒருவர் இருந்தார். அவர் காலத்திலே கடம் வாசிப்பதில் நம்பர் வன் என்று கூறினார்கள்.

இருவரும் ஒரே நேரத்தில் கச்சேரி நடத்துவதில்லை. இவர்கள் இருவரையும் எப்படியாவது ஒரே மேடையில் வாசிக்க வைக்க வேண்டுமென்று மக்கள் விரும்பினர்.

இரு துருவங்களை எப்படி ஒன்றிணைக்க முடியும்?

ஒரு கிராமத்தில் கௌரவத்திற்கு ஆசைப்பட்ட பண்ணையார் இருந்தார். அவர் வீட்டிலே ஒரு கல்யாணம். அக் கல்யாணம் அவரது மகளுக்காகும்.

இந்தக் கல்யாண கச்சேரிக்கு எப்படியாவது அந்த இரு வித்துவான்களையும் கொண்டு வந்து கச்சேரியில் அமர்த்த வேண்டும் என நினைத்தார்.

ஆனால், இவர் வருகிறார் என்றால் அவர் வரமாட்டார். அவர் வருகிறார் என்றால் இவர் வரமாட்டார். என்ன செய்வதென யோசித்தார்.

"சரி இருவரும் வரும் விடயத்தை ஒருவருக்கொருவர் கூறாது, பொய் சொல்லி அழைத்துக் கொள்வோம்.

கச்சேரி ஆரம்பமாகும் சமயத்தில் இருவரையும் மேடையில் அமர வைத்து விடுவோம். எல்லோர் முன்னிலையிலும் அவர்கள் சண்டை பிடிக்கமாட்டார்கள் என்றொரு முடிவுக்கு வந்தார். கூறியபடி ஏற்பாடுகளும் முடிவு பெற்றன.

இருவரும் தனித்தனியாக அழைத்து வரப்பட்டு வெவ்வேறு வீடுகளிலே தங்க வைக்கப்பட்டனர்.

அன்று மாலை இசைக்கச்சேரி நடைபெற இருந்தது.

ஆனால், இருவரும் அழைத்து வரப்பட்ட சிறிது நேரத்தில் இவரது திருகுதாளம் சாதுவாகத் தெரிய வரத்தொடங்கியது.

ஊரிலே இதற்கென சிலபேர் இருப்பார்கள்... ஒருவருக்கொருவர் பற்ற வைப்பதற்காக...

வீணை வித்துவான் கட வித்துவானை எப்படி "கட்" செய்யலாமென யோசித்துப் பார்த்தார்.

உடனே பண்ணையாரை அழைத்து... "இதோ பார்! அந்த 'கட' வித்துவானோடு நான் வாசிப்பதற்கு எனக்கு ஒன்றும் கஷ்டமில்லை. இருந்தாலும் ஒரு விடயத்தை உங்களுக்கு சொல்ல வேண்டியது எனது கடமை.

அவர் எத்தனை "கடம்" கொண்டு வந்துள்ளார் என்பதை கவனித்தீர்களா?" என்று கேட்டார்.

"கவனித்தேன்! இரண்டு கொண்டு வந்திருக்கிறார்" என்றார்.

"அது எதற்கென்றால், ஒரு கடம் உடைந்தால், மற்றதை உபயோகப்படுத்துவதற்கு... ஒரு சுபகாரியத்திலே மேடையிலே பானை உடைந்தால் அது நல்ல சகுனமா? யோசித்து பாருங்கள்" என்றார்.

நீங்கள் கூறுவது நியாயம்தான். ஆதலால், தருவதாக பேசிய பணத்தைக் கொடுத்துத் திருப்பினார்.

உடனே கடவித்துவான் இந்தப் பண்ணையாரைப் பார்த்து "நீங்கள் சொல்வது சரி... இருந்தாலும் நானும் ஒரு விடயத்தை உங்களிடம் சொல்ல வேண்டியது எனது கடமை" என்றார்.

என்னவென அவர் வினவினார்.

"அந்த வீணை வித்துவானின் வீணை ஆள் உயரம் வரை உள்ளது. அதை அவர் மட்டும் தூக்க முடியாது. அந்த வீணை மேலே பட்டுத்துணி போர்த்தி முன்பக்கம் இருவரும் பின்பக்கம் இருவருமாக மொத்தம் நான்கு பேர் தூக்கிக் கொண்டு மேடைக்கு வருவார்கள். அது பார்ப்பதற்கு பாடையைத் தூக்கும் ஞாபகம் வரும்.

"சுபமுகவர்த்தம் நடக்கும் வேளையிலே இது தேவைதானா– நன்றாக யோசித்துப் பாருங்கள்" என்று கடவித்துவான் கூறினான்.

இதைக்கேட்ட பண்ணையார் சற்று யோசித்தார்.

"என் வீட்டுக் கல்யாணத்துக்கு கச்சேரியே வேண்டாம்" என்று கூறிவிட்டு அவரையும் கணக்கு தீர்த்து அனுப்பி விட்டார்.

இந்த மூன்று பேரில் யார் கெட்டிக்காரன் என்று நினைக்கிறீர்கள்? ஒன்றுக்கொன்று சளைத்ததில்லையே...

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையிலேயே வடக்கு மாகாண தேர்தல் நடைபெற வேண்டும்

## ஆஸி. பிரதிநிதியிடம் யாழ். ஆயர் சுட்டிக்காட்டு

13 ஆவது திருத்தச் சட்டம் நீக்கப்படக்கூடாது. அதன் அடிப்படையிலேயே வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என யாழ்ப்பாணத்திற்கு நண்பகல் வருகை தந்த அவுஸ்திரேலிய நாட்டு அரசியல் ஆலோசகரிடம் யாழ்மறைமாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தர நாயகம் ஆண்டகை சுட்டிக் காட்டியுள்ளார்.

யாழ். ஆயர் இல்லத்தில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போது அவுஸ்திரேலிய நாட்டுப் பிரதிநிதி 13 ஆவது திருத்தச் சட்டம் குறித்து ஆயரிடம் கேள்வி எழுப்பிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்த சந்திப்பு தொடர்பில் ஊடக வியலாளர்களுக்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கு வருகை தந்த அவுஸ்திரேலியா நாட்டின் தெற்காசிய நாடுகளுக்கான அரசியல் ஆலோசகர் மைக்கில்மன் யாழ். குடாநாடு உள்ளிட்ட வடபகுதியின் தற்போதைய நிலைவரம் குறித்து அறிந்து கொள்ள இன்று (நேற்று) யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து என்னுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இதன்போது இலங்கையில் தற்போது பெரும் பிரச்சினையாகவுள்ள 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் என்னுடைய கருத்தைக் கேட்டிருந்தார்.

அதற்குப் பதிலளிக்கும் போது 13 ஆவது திருத்தச் சட்டம் தேவை என கத்தோலிக்க ஆயர் சங்கம் ஏற்கனவே தெரிவித்துள்ளது.

மக்களுடைய சமாதானத்திற்கும் ஒற்றுமைக்கும் அது தேவை என கூறியிருப்பதனால், 13 ஆவது திருத் தச் சட்டத்தை நீக்கக் கூடாது என பதிலளித்தேன். அதை வைத்துக் கொண்டு தான் வடக்குத் தேர்தலை நடத்த வேண்டும் எனவும் வலியுறுத்தினேன்.

இதையடுத்து யாழ். குடாநாட்டின் தற்போதைய நிலைவரம் குறித்து பேசிய போது இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்டு நான்கு வருடங்கள் கடந்துள்ள போதும், இன்னும் மீள்குடியேற்றம் பூர்த்தியாக்கப்படவில்லை. மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கான வாழ்வாதார உதவிகள் உரிய முறையில் வழங்கப்படவில்லை.

பலவிதமான துன்பங்களை அனுபவித்துக் கொண்டு தான் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ் மக்கள் தற்போதும் வாழ்ந்து வருகின்றனர்.

இடம்பெயர்ந்த மக்களின் வாழ்விடங்கள் விடுவிக்கப்பட்டு மீள்குடியேற்றம் இடம்பெறும் என எதிர்பார்த்திருந்த நிலையில், அரசாங்கத்தின் பாதுகாப்புத் தேவைகளுக்காக இராணுவத்தினர் தமிழ் மக்களின் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை சுவீகரிப்பதற்கான அறிவித்தல்களைசுட்சிட்டுத்தியுள்ளனர்.

சொந்த இருப்பிடங்களை விட்டு, வெளியேறிய மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்துக் கொண்டும் வருத்தப்பட்டுக் கொண்டும் இருக்கின்றனர்.

மேலும் யாழ். மாவட்டத்திலுள்ள கரையோரப் பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்கள் அவுஸ்திரேலியாவுக்கு சட்ட விரோதமாக படகின் மூலம் பயணம் செய்து வருகின்றனர். இதில் பலர் உயிரையும் இழந்தும் விடுகின்றனர். இதற்கு பிரதான காரணம் அவர்களுக்கு இங்கு தொழில் வாய்ப்பு இன்மையே. பிரதான வாழ்வாதார தொழிலாக அவர்கள் செய்து வரும் கடற்றொழிலை இந்திய இழுவைப் படகுகள் ஒரு புறமும் தென்னிந்திய மீனவர்கள் ஒருபுறமும் பாதிப்படைச் செய்கின்றனர்.

இதனால் இவர்கள் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர்.

தவிர இங்குள்ள இளைஞர்கள் எவ்வேளையும் கைது செய்யப்பட்டு விசாரணைகளுக்குட்படுத்தப்படலாம் என்ற அச்ச நிலையுள்ளதாலும் உயிரைப் பணயம் வைத்து நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர்.

தமிழர்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வு தொடர்ந்து கேள்விக் குறியாக இருந்து வருவதும், இந்த அவல நிலைக்கு முக்கிய காரணம் எனவும் தான் தெரிவித்ததாக ஆயர் கூறினார்.

மேலும் யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்ட பின்பு இராணுவப் படைக் குறைப்பு இடம்பெறும் என எதிர்பார்த்திருந்தோம். இருப்பினும் அது நடைபெறவில்லை. பல சந்தர்ப்பங்களில் வட பகுதியிலிருந்து இராணுவம் குறைக்கப்படவில்லை என்பதை ஏற்றுக் கொண்டுள்ளனர் எனப் பல விடயங்களை அவுஸ்திரேலியாவின் ஆலோசகருக்கு தான் சுட்டிக் காட்டியதாக ஆயர் தெரிவித்தார். (அ-6)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 40 | 60 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 80-120 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 140 | 80 | 120 | 120 |
| தக்காளி | 120 | 120 | 120 | 100 |
| மரவள்ளிக் கிழங்கு | 60 | 50 | 60 | 160 |
| கோவா | 140 | 120 | 100 | 120 |
| கரட் | 160 | 140 | 120 | 160 |
| பூசணி | 50 | 40 | 40 | 40 |
| புடோல் | 40 | 60 | 60 | 60 |
| வாழைக்காய் | 50 | 40 | 60 | 40 |
| சின்ன வெங்காயம் | 220 | 100-160 | 140-180 | 120-200 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 | 80 | 80 |
| பாகற்காய் | 120 | 120 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 70 | -- | 100 |
| பயற்றங்காய் | 80 | 80 | 60 | 80 |
| லீக்ஸ் | 160 | 160 | 160 | 160 |
| பீற்றூட் | 100 | 70 | 90 | 100 |
| கறிமிளகாய் | 250 | 160 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 450 | 250 | 400 | 400 |
| போஞ்சி | 160 | 140 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 30 | 30 | 40 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 120 | 80 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 35 | 30-40 |
| இராசவள்ளி | 100 | 100 | 120 | 100 |

# இராசி பலன்

*13.06.2013*
*(வைகாசி 30, வியாழக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு*
*பஞ்சமி முழுவதும்*
*பூசம் காலை 6.11 மணிவரை*
*இராகுகாலம் 1.22-2.52 மணிவரை*
*சுபநேரம் 7.22-8.52 மணிவரை*

**மேடம்** வெளியுலகத் தொடர்புகள் அதிகரிக்கும், பெற்றோரின் ஆதரவால் பெருமைகள் காண்பீர்கள், அலைச்சல்கள் ஏற்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்

**இடபம்** நாடி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழ்வீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரசு வழியில் அனுகூலம் உண்டு, பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**மிதுனம்** இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், தன வரவுகள் திருப்திகரமாக அமையும், பேச்சில் கனிவு பிறக்கும், மாமன் மைத்துனர் வழியில் நல்ல செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்** நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நண்பர் ஒருவர் உங்கள் இல்லம் தேடி வரலாம், கனிவாகப் பேசி காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள், கற்பனை மிகுதியான நாள்.

**சிங்கம்** மாலை நேரம் ஆசைப்பட்டபொருள் வாங்கி மகிழ்வீர்கள், திடீரென கேட்கும் செய்திகளால் திருப்தியடையலாம், தாராளமாகச் செலவு செய்வீர்கள்.

**கன்னி** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள், திடீர் பண வரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், போசன நன்மையுண்டு.

**துலாம்** வளர்ச்சி பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும், மனதில் உற்சாகமும், மகிழ்ச்சியும் அதிகரிக்கும்.

**விருச்சிகம்** எதிர்பார்த்த காரியமொன்று இன்று நடைபெறலாம், பயணங்களால் பலனுண்டு, சொத்துக்கள் சம்பந்தமாக இருந்த பிரச்சினைகள் சுமுகமாக முடியும், தொழில் முயற்சிகளுக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர்.

**தனுசு** திட்டமிட்ட பணிகளில் சிறு தடை, தாமதங்களைச் சந்திக்க நேரிடலாம், பயணத்தால் மன உளைச்சல் ஏற்படலாம் ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் செலவுகள் ஏற்படலாம்.

**மகரம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், சொந்த பந்தங்களின் வருகையுண்டு, பேச்சில் கனிவு பிறக்கும், காரிய சித்தியுண்டு, குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**கும்பம்** புதிய பொருட் சேர்க்கையுண்டு, உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.

**மீனம்** யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி பெறுவீர்கள், வியாபார விருத்தியுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயிர்க்கொட்டிகளின் தாக்கம் அதிகரிப்பு

## விழிப்புடன் இருக்க அறிவுறுத்து


(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் தற்போதைய கால நிலையில் மயிர்க் கொட்டிகள் அதிகரித்துள்ளமையால் மக்கள் கவனமாக இருக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளனர்.

பொதுமக்கள் விழிப்புணர்வுடன் இருப்பதோடு, குழந்தைகளை கவனமாக பாதுகாக்குமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

அண்மைக் காலமாக மயிர்க்கொட்டிகளின் தாக்கத்திற்குட்பட்டு சிகிச்சைக்காக வந்தவர்களில் அதிகமானவர்களின் பார்வை பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலையின் கண் வைத்திய நிபுணர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, மயிர்க்கொட்டிகள் விடயத்தில் அவதானமாக இருக்குமாறும், தற்செயலாக கண்களில் மயிர்க்கொட்டிகளின் தாக்கம் ஏற்படும் பட்சத்தில் காலம் தாழ்த்தாது உடனே யாழ். போதனா வைத்தியசாலை கண் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையை பெற்றுக் கொள்ளுமாறும், வீட்டின் சுற்றுப் புறங்களை சுத்தமாக வைத்திருக்குமாறும் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் கேட்டுள்ளார். (அ-2)



நன்றி: மிரர்

# காணாமற் போனோரை தேடினால் நீங்கள் காணாமற்போக நேரிடும்

## இராணுவ புலனாய்வு பிரிவினர் எச்சரித்தனர்; லலித், குகன் வழக்கில் ஜனப்பிரிய சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

**நாம் வடக்கில் காணாமற் போனோரை தேடியறியும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பொழுது, எமது பணியை கைவிட்டுவிட்டு கொழும்புக்கு செல்லுமாறும் அவ்வாறு செல்லாவிடின் நீங்கள் காணாமற் போகச் செய்யப்படுவீர்கள் எனவும் லலித், குகன் காணாமற் போவதற்கு முன்னதாகவே பல தடவை இராணுவ புலனாய்வு பிரிவினர் எச்சரித்துள்ளனர் என லலித், குகன் காணா மற் போன வழக்கின் ஆறாவது சாட்சியும் முன்னிலை சோஷலிச கட்சியின் உறுப்பினருமான ஜனப்பிரிய குமாரகே தெரிவித்தார். மக்கள் போராட்ட இயக்கத்தின் அமைப்பாளர்களான லலித், குகன் காணாமற் போன வழக்கு நேற்றையதினம் யாழ்.நீதவான் பெ.சிவகுமார் முன்னிலையில் விசார ணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இவ் வழக்கில் சாட்சியமளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் சாட்சியமளிக்கையில்,

எனக்கு லலித்குமாரை மக்கள் விடுதலை முன்னணியில் வேலை செய்துகொண்டிருக்கும் போது 2010ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் தெரியும்.

நாம் இருவரும் யாழ்ப்பாணம், கிளி நொச்சி, வவுனியா போன்ற இடங்களில் பணியாற்றியுள்ளோம். லலித்குமாரை முதலில் நான் சந்தித்தது காவத்தையில் உள்ள மக்கள் முன்னணியின் அலுவலகத்தில்தான்.

லலித்குமார் மக்கள் முன்னணி சார்பாக அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்டதோடு, நலன்புரி முகாம்களிலும், வடக்கில் காணாமற் போனோர்கள் தொடர்பிலும் எம்முடனும் பெற்றோர்களுடனும் சேர்ந்து கடமையாற்றினார்.

இதுதவிர வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்திலும் வேலை செய்திருந்தார். இதற்கு நானும் ஒத்துழைப்பு வழங்கியிருந்தேன்.

2010 ஆம் ஆண்டு லலித்தும் நானும் யாழ்ப்பாணத்தில் சுவரொட்டிகள் ஒட்டிக் கொண்டிருந்த பொழுது யாழ்ப்பாணம் பொலிஸார் எம்மை கைது செய்திருந்தனர்.

அந்த சுவரொட்டியில் அரசியல் கைதிகளை விடுதலை செய், ஜனநாயகத்தை பாதுகாப்போம் என்ற வாசகங்களே அச்சிடப்பட்டிருந்தன.

எம்மை கைது செய்த யாழ். பொலிஸார் உடனடியாக நீதிமன்றில் முற்படுத்தாமல் பொலிஸ் நிலையம் அல்லாத வேறோர் இடத்தில் தடுத்து வைத்துவிட்டு, மறுநாளே நீதிமன்றில் பொய்க்குற்றச் சாட்டுக்களுடன் முற்படுத்தினர். பின்னர் யாழ். நீதிமன்றினால் நாம் விளக்கமறியலில் வைக்கப்பட்டோம்.

இக் கைது தொடர்பில் ஊடகங்களுக்கும் எமது கட்சியினருக்கும் அறிவிக்க வேண்டாம் எனவும், மேலிடத்து உத்தரவினால் நாம் உங்களை கைது செய்தோம், விரைவில் விடுதலை செய்து விடுவோம் எனவும் யாழ். பொலிஸார் எமக்கு கூறினர்.

பின்னர் 5 தடவைகள் நாம் வழக்கிற்கு சென்று வந்த நிலையில் அவ் வழக்கு பொலிஸாராலேயே வாபஸ் பெறப்பட்டது. இதேபோல் மன்னாரிலும் சுவரொட்டிகளை 2010 ஆம் ஆண்டு மே மாதமளவில் ஒட்டிக் கொண்டிருந்த பொழுது மன்னார் பொலிஸார் எம்மை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட பின்னர் புலனாய்வு பிரிவினரால் எமது வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அங்கு எம்மை அரசியல் நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம் எனவும், இங்கு இருக்க வேண்டாம் எனவும் அவ்வாறு மீறி செயற்பட்டால் காணாமற் போய்விடுவீர்கள் எனவும் புலனாய்வு பிரிவினர் எம்மை அச்சுறுத்தியிருந்தனர். யாழ்ப்பாணம் உடுப்பிட்டியிலும் பின்னர் வவுனியா தாண்டிக்குளத்திலும் எம்முடைய அலுவலகங்கள் இருந்தன.

தாண்டிக்குளத்தில் உள்ள அலுவலகத்திற்கு NP-UH-8342 என்ற இலக்கம் உடைய மோட்டார் சைக்கிளில் வந்த சிவிலுடைதரித்த இரகசிய பொலிஸார் தம்மை சந்திரதாஸ், நிஷாம் என இனங்காட்டிக் கொண்டு லலித்குமார் தொடர்பில் விசாரித்தனர்.

அரசிற்கு எதிராக செயற்பட்டால் அரசின் கடுமையான அழுத்தம் உங்களுக்கு இருக்கும் எனவும் கூறினர். இச் சம்பவத்தின் பின்னர் புலனாய்வு பிரிவினர் WP-VI-5449 என்ற இலக்கமுடைய மோட்டார் சைக்கிளில் வந்து தன்னை சுனில் சுராங்க என அடையாளப்படுத்தி 882362662 V என்ற அடையாள அட்டையினையும் எனக்கு காட்டியிருந்தார்.

இவரும் லலித்தின் செயற்பாடுகள் தொடர்பிலும் எங்கு, எந்நேரம் அவர் செல்வார் என்பதையும் கேட்டதோடு, வடக்கில் நடைபெறும் பணியை நிறுத்திவிட்டு கொழும்புக்கு செல்லுமாறும் அச்சுறுத்தியிருந்தார். இதேபோன்று கிளிநொச்சியிலும் சுவரொட்டி ஒட்டும் போது லலித் உட்பட 15 பேர் வரையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

காணாமற் போயுள்ள லலித்குமார் தனது அரசியல் வாழ்க்கையை காணாமற் போனவர்களுக்கே அர்ப்பணித்தவர். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு ஜனநாயக முறைமை வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தியவர்.

ஜனநாயக வழியில் செயற்பட்ட அவருடைய பணிக்கு எதிராக, அரசாங்கமும் பொலிஸாரும், இராணுவமும் செயற்பட்டனர். இதனால் தான் யாழ்.நகரிலும் அவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

நான் இறுதியாக லலித்துடன் தொலைபேசியில் உரையாடிய போது அவருடைய குரலில் மாற்றம் இருந்ததை அவதானித்தேன். குழப்பமான ஒரு சத்தமும் கேட்டது.

நான் நினைக்கிறேன் லலித்குமார் அரசின் தேவைக்கமைவாக பொலிஸார், இராணுவத்தினர் விசேடமாக புலனாய்வு பிரிவினரால் கடத்தப்பட்டுள்ளார் என்று. லலித்தும் நானும் விளக்கமறியலில் உள்ளபோது லலித்தின் நண்பரான குகன் எம்மை பார்க்க வந்தார். இதன் போதே குகன் எனக்கு அறிமுகமானார்.

வடக்கில் பிறந்து வடக்கில் வாழ்ந்தவர் குகன். கொழும்பில் பிறந்து கொழும்பில் வாழ்ந்தவர் லலித். இவர்கள் இருவரும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காகவே சேவையாற்றினர்.

நான் கற்பனை செய்து சொல்லவில்லை. உண்மையைத்தான் கூறுகின்றேன். இவர்கள் இருவரையும் இராணுவத்தினர் தான் கடத்தி வைத்துள்ளனர்.

வடக்கு பிரதேசத்தில் அரச படைகள் இல்லாத ஏனையோரினால் கைது செய்து விசாரணை செய்யப்படாத நிலையில் இக் கடத்தல் சம்பவம் தொடர்பில் நியாயமான விசாரணை இதுவரை இடம்பெறவில்லை. எம்மை அச்சுறுத்திய இராணுவ, பொலிஸ் புலனாய்வு பிரிவினரை நான் அடையாளம் காட்டுவேன் என அவர் சாட்சியமளித்தார்.

குறித்த வழக்கு எதிர்வரும் நவம்பர் 5ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளதோடு, இந்த விசாரணையில் ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெலவினால் MTV, MBC ஆகிய ஊடகங்களுக்கு அளித்த பேட்டியில் லலித்குமார் காணாமற் போகவில்லை என்பது தொடர்பாக ஆராயப்படவுள்ளதோடு, குறித்த ஊடகங்களின் பிரதம ஆசிரியர்களுக்கும் அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டு அமைச்சரின் ஊடகப் பேட்டியையும் மன்றில் சமர்ப்பிக்குமாறு யாழ்.நீதவான் பெ.சிவகுமார் உத்தரவிட்டுள்ளார்.

மேலும் குறித்த வழக்கில் பாதிக்கப்பட்டோர் சார்பில் சட்டத்தரணிகளான நுவான் போப்பகே, நிரான் அன்கிட்டல், அச்சலகுமார சிறிவாத் ஆகியோர் ஆஜராகி இருந்ததோடு, எதிர்த்தரப்பில் சட்டத்தரணிகளான சமிந்த அத்துகொரல, கப்டன் மகேஸ் ஜெயவிக்கிரம ஆகியோர் ஆஜராகி இருந்தனர். (அ-4)

# கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கிழக்கு சனசமூகநிலைய அம்பாள் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 11 பேர் பங்குபற்றும் 10 பந்துப் பரிமாற்றங்களை கொண்ட மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப் போட்டி சுன்னாகம், மல்லாகம், பருத்தித்துறை ஆகிய இடங்களில் நாளை மறுதினம் சனிக்கிழமை முதல் நடைபெறவுள்ளது.

இத் துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியில் பங்கு கொள்ளவிரும்பும் விளையாட்டுக் கழக அணிகள் 0776258088,0772719732 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளமுடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2-5)




# மின்வெட்டு தொடர்கிறது; மக்கள் அசௌகரியம்

(கரணவாய்)

கொடிகாமத்தில் இருந்து அரசடிக்கு செல்லும் வீதியில் உள்ள வீடுகளுக்கு 2 வாரகாலமாக இரவு 7 மணியில் இருந்து 10 மணிவரை மின்சாரம் தடைப்படுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேற்குறித்த வீதியில் உள்ள ஸ்ரீநாரதா கிராமம் உட்பட ஏனைய கிராமங்கள் இதனால் பாதிக்கப்படுகின்றன. பரீட்சைக்கு தோற்றுகின்ற மாணவர்கள் பரீட்சைக்குத் தம்மை தயார்படுத்த முடியாத நிலையில் உள்ளனர்.

அத்துடன் ஏனைய வேலைகளில் ஈடுபடுவோர் தமது வேலைகளை முன்னெடுக்க முடியாத நிலையிலுள்ளனர்.

எனவே, துறைசார்ந்த அதிகாரிகள் இவ் விடயத்தை கருத்திற் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (அ-3-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ் மக்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்படுகின்றனர்

## ஜனநாயக மக்கள் முன்னணி

(கொழும்பு)

**அதிகாரப் பகிர்வு,வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைப்பு என்றால் சிங்கள மக்கள் பயப்படுகிறார்களாம் , சந்தேகிக்கின்றார்களாம். இதில் என்ன நியாயம் இருக்கின்றது. ஏமாற்றமும் சந்தேகமும் ப்யமும் யுத்தத்தின் அழிவும் தமிழருக்கா? சிங்களவருக்கா? என சிங்கள அரசியல் தலைவர்களிடம் கேள்வி எழுப்பியுள்ளார் ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும் மேல்மாகாணசபை உறுப்பினருமான கலாநிதி நல்லையா குமரகுருபரன்.**

இதுதொடர்பில்அவர்மேலும்தெரிவிக்கையில், முக்கிய சிங்கள நடுநிலையாளர்களான அரசியல் தலைவர்கள் சிலர் வடக்கு கிழக்கு இணைப்புப் பற்றி அழுத்திக் கூறவேண்டாம். கூறுவதைத் தவிர்ப்பது நல்லது என்று தமிழ்த் தலைவர்களிடம் கடந்த வாரம் கூறினார்கள்.

அதிகாரப் பகிர்வு வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைப்பு என்றால் சிங்கள மக்கள் பயன்படுத்துகின்றார்களாம். சந்தேகிக்கின்றார்களாம். இதில் என்ன நியாயம் இருக்கின்றதுத ஏமாற்றமும் சந்தேகமும் பயமும் யுத்தத்தின் அழிவும் தமிழருக்கா? சிங்களவருக்கா?

மாகாணசபைகள் அரசியல் தீர்வாக இலங்கை- இந்திய உடன்படிக்கை ஊடாகக் கொண்டு வரப்பட்டது. கால்நூற்றாண்டின் பின்னரும் ஏமாற்றப்பட்டது தமிழினம். திட்டமிட்ட இனக் கலவரங்களால்அழிந்ததுதமிழினம்.எனவேபயப் பட வேண்டியது தமிழ் இனமா?சிங்கள இனமா? எனக் கேட்டார்.தொடர்ந்துஅரசமைப்பின்13ஆவது திருத்தத்தின் ஒவ்வொரு சரத்தும் ஒழிக் கப்படுகின்ற போதும் ஜனாதிபதி வெளிநாடுகளுக்கும் இந்தியாவுக்கும் ஐ.நாக் கும் 13 பிளஸ் என்று கூறி வருகின்றார். யுத்தம் முடிந்து நான்கு ஆண்டுகளாகியும் அரசியல் தீர்வின்றி ஏமாற்றப்படுவது தமிழ் மக்களே.

இந்நிலையில் வடக்கு, கிழக்கு இணைப்புப் பற்றி அழுத்திக் கூற வேண்டாம் என்று தமிழ் தலைவர் களிடம் கூறுவது நீதியா என்று கேள்வியெழுப்பியுள்ளார்குமரகுருபரன். (அ-2)

# பொங்கல் உற்சவம்

(குருமன்காடு)

வவுனியாவில் உள்ள பழைமை யான அருள்மிகு ஸ்ரீலஷ்மி சமேத நரசிங்கர் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

பொங்கல் உற்சவ தினமன்று காலை 9 மணிக்கு பறவைக்காவடி, செடில் காவடி, பாற்செம்பு ஆகியன வவுனியா கந்தசாமி கோயிலில் ஆரம்பமாகி நகர வீதி வழியாக நரசிங்கர் கோவிலை வந்தடையும்.

அன்றையதினம் இரவு ஆலயத்தில் விசேட கலை நிகழ்வுகள் இடம் பெறும். நேர்த்திக்கடன் செலுத்துவோர், கடை அமைப்பதற்கான இடத்தை தெரிவு செய்து கொள்பவர்களை ஆலய நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபை கேட்டுள்ளது. (அ-3-250)

# கல்வியியல் ஆய்வு நடவடிக்கை

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் உள்ள தெரிவு செய்யப்பட்ட 10 பாட சாலைகளில் உள வழிகாட்டல் ஆலோசனை பிரிவின் கல்வியியல் ஆய்வு நடைபெற்று வருகின்றது.

வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயம், பூவரசங்குளம் மகா வித்தியாலயம், வீரபுரம் மணிவாசகர் மகா வித்தியாலயம், பூந்தோட்டம் மகா வித்தியாலயம், தாண்டிக்குளம் பிற மண்டு வித்தியாலயம், திருஞான சம்பந்தர் வித்தியாலயம், குருக்கள் புதுக்குளம் அ.த.க.பாடசாலை, கணேசபுரம் சண்முகானந்தா வித்தியாலயம், முதலியார்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை, ஆண்டியா புளியங்குளம் முஸ்லிம் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலேயே இவ் உள வழிகாட்டல் ஆலோசனை பிரிவின் கல்வியியல் ஆய்வு நடைபெற்று வருகின்றன. (அ-3-266)

# தேர்தலை கண்காணிக்க பத்து கண்காணிப்பாளர்கள்

## பவ்ரல் அமைப்பு தெரிவிப்பு

வடமாகாண சபைத் தேர்தல் கண்காணிப்பில் 5ஆயிரம் கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

வடமாகாண சபைக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டதிலிருந்து தங்களுடைய குழு கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடும் என்றும் பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹான ஹெட்டியாராச்சி குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் 10 பேரை வரவழைக்கவிருப்பதாகவும் அவர்கள் அனைவரும் வடமாகாணத்தி லேயே கண்காணிப்பு பணிகளில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

வடமாகாண சபையுடன் இணைந்து நடத்தப்படும் மத்திய மற்றும் வடமேல் மாகாண சபைகளுக்கான தேர்தல்களில் பாரியபிரச்சினைகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இல்லையென்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)


# வாழ்த்துகின்றோம்



துவாளி வீதி, இமயாணன் மேற்கு உடுப்பிட்டியைச் சேர்ந்த

**கனகரத்தினம் - ஜீவானந்தன்**

(முகாமைத்துவ உதவியாளர் - நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை)

மாவட்ட நீதிபதி கௌரவ ஸ்ரீநிதி நந்தசேகரன் அவர்கள் முன்னிலையில் 30.05.2013 வியாழக்கிழமை அன்று அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டதை முன்னிட்டு வல்வெட்டி வேவில் ஸ்ரீவிக்கினேஸ்வரர் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ வே.பாலச்சந்திரக்குருக்கள் குடும்பத்தினர் மனதார வாழ்த்துகின்றனர்.

(3011) **வாழ்த்துவோர்: வே.பாலச்சந்திரக் குருக்கள் குடும்பத்தினர்**

## முக்கண்ணன்தேவியைத் தொழுதேன்!



பக்தியுடன் பணிபவரைப் பரிவோடு அரவணைப்பாள்
பணம் தந்து பொருள் தந்து பார்புகழ வாழவைப்பாள்
சித்தமதை நெகிழவைக்கும் செந்தமிழ்ப்பா மாலைகட்டித்
திருக்கழுத்தில் சூட்டிவிட்டால் திரையெட்டும் புகழவைப்பாள்
இத்தியுடன் ஆலரசு வேம்பிணைந்த மரநிழலில்
வீற்றிருக்கும் அரியாலை வெட்டுக்குளத் திருப்பதியாள்
முத்திதரும் சக்தியவள் புவனேஸ் வரியாளை
முக்கண்ணன் தேவியினை முப்பொழுதும் நான்தொழுதேன்

சின்னையா சிவபாலன்
செல்வநகர்,மன்னார்.

(3012)

**அரியாலை வெட்டுக்குளம் புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த திருவிழா தற்போது நடைபெறுவதை முன்னிட்டு இக்கவிதை பிரசுரமாகின்றது.**

## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை — இவர்களுக்கு மணமகள் தேவை

| | |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து விஸ்வகுலம்<br>நட்சத்திரம்: சதயம் 2, 7இல் செவ்<br>உயரம் : 5'5"<br>தகைமை/தொழில்: A/L, Technical Course, தொழில் நுட்ப உத்தியோகத்தர்<br>தொ.இ: B -1991 | பிறப்பு: 1982 இந்து (செட்டியார்)<br>நட்சத்திரம்: திருவோணம் 2<br>உயரம்:174 cm<br>கி.பா: 16, 2 இல் செவ்<br>தகைமை/தொழில்: Bsc, MBA (Accounts Assistant) தனியார்<br>தொ.இ: B -1995 |
| பிறப்பு: 1979 இந்து (V)<br>நட்சத்திரம்: சுவாதி 3<br>உயரம்: 5'4"<br>கி.பா:43<br>தகைமை/ தொழில்: GAQ, எழுதுநர் (அரச)<br>தொ.இ: B -1992 | பிறப்பு: 1978 இந்து விஸ்வகுலம்<br>நட்சத்திரம்: பரணி<br>உயரம் : 5'4"<br>கி.பா: 31, 7 இல் செவ்<br>தகைமை/ தொழில்:O/L தச்சுவேலை (சிற்பவேலை) சொந்தம்<br>தொ.இ: B-1996 |
| பிறப்பு: 1981 றோ.க (V)<br>நட்சத்திரம்: திருவாதிரை 1<br>உயரம்: 5'10"<br>கி.பா: 14<br>தகைமை/ தொழில்: A/L முகாமையாளர் (தனியார்)<br>தொ.இ: B -1993 | பிறப்பு: 1982 இந்து (V)<br>நட்சத்திரம்: சித்திரை 1<br>உயரம்: 168 cm<br>கி.பா: 43.5<br>தகைமை/ தொழில்: A/L (UKPR)<br>தொ.இ: B -1997 |
| பிறப்பு: 1983 இந்து (V)<br>நட்சத்திரம்: கார்த்திகை 4<br>உயரம்: 5'5'<br>கி.பா: 62.75, 8 இல் செவ்<br>தகைமை/தொழில்: BSc (Hons) in Quantity Surveying<br>தொ.இ: B -1994 | பிறப்பு: 1990 இந்து (V)<br>நட்சத்திரம்: சதயம் 2, 8இல் செவ்<br>தகைமை/ தொழில்: A/L (கனடா Not PR)<br>தொ.இ: B -1998 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்கள் சுயமாக கற்பதற்குரிய சூழலையும் வாய்ப்புக்களையும் அகலப்படுத்துவது அவசியம்தானா?

அறிமுகம்

எமது சமூகங்களின் செயற்பாடுகளின் நோக்கம் செயன்முறை ஒழுங்குகள், அவற்றில் நிகழ்ந்துவரும் மாற்றங்கள், புதிய திசைகள் நோக்கிய புத்தாக்கச் சிந்தனைகள் என்பனவே சமூக முன்னேற்றங்களை தீர்மானித்து வருகின்றன.

விவசாய வயல்கள், பண்ணைகள், வியாபார நிறுவனங்கள், மருத்துவமனைகள், பாடசாலைகள், பொதுநிர்வாக அலுவலகங்கள், கோவில்கள் போன்ற பலவற்றிலும் மேற்கூறிய அம்சங்கள் நேரிய முறையில் நிகழும் போது சமூகம் வளர்வதைக் காண முடியும். இவை மனிதர்களின் சிந்தனைகளிலும் செயல்களிலும் ஒழுங்கு முறைகளிலும் தங்கியுள்ளன.

சமூகத்தின் இளைஞர்கள் மற்றும் யுவதிகள் எத்தகைய எண்ணங்களுடனும் சிந்தனைகளுடனும் நடத்தைக் கோலங்களுடனும் வளர்வார்கள் என்பது அவர்களது கற்றலும் அனுபவங்களும் எவ்வாறு சிறப்பாக வடிவமைக்கப்படுகின்றன என்பதில் தங்கியுள்ளது. கற்றலும் வாழ்வியல் அனுபவங்களும் முரண்பாடு ஏதுமின்றி எவ்வாறு இணைகின்றன என்பதிலும் அவை தங்கியுள்ளன.

இலங்கையில் 40 இலட்சம் சிறார்கள் வருடாந்தம் பாடசாலைகளில் கற்கிறார்கள். இரண்டு இலட்சம் ஆசிரியர்கள் ஏறக்குறைய 10 ஆயிரம் பாடசாலைகளில் கற்பிக்கிறார்கள். பரீட்சைகளை மையப்படுத்தியும் சித்தியடையும்போதும் தகைமைகளை உத்தரவாதப்படுத்தி வழங்கப்படும் சான்றிதழ்களை இலக்காகக்கொண்டும் இத்தகைய கற்றலும் கற்பித்தலும் நிகழ்கின்றன.

கற்பித்தல் என்பது பாடசாலைகளில் அரச நிதிச்செலவில் நிகழ்கின்றது. மேலதிகமாக அதேபாடங்களை தனிப்பட்ட ரியூசன் வகுப்புக்களிலும் பெற்றோர் சொந்தச் செலவில் கற்பிக்கின்றனர்.

எந்நேரமும் கூட்டம் கூட்டமாக, குழுக்களாக, தனிநபராக மாணவர்களுக்கு எல்லா இடங்களிலும் கற்பித்துக்கொண்டே வருகின்றோம். அவர்களும் வகுப்பறைகளில் மணித்தியாலக்கணக்கில் அமர்ந்திருந்து செவிவழியாகக் கேட்டுக் கொண்டும் உள்ளனர்.

வகுப்பறைகளில் இருந்து கொண்டும் காதால் கேட்டுக்கொண்டும் பாடசாலைகளில் 200 நாட்கள் செலவிடுகின்றனர். ரியூசன் நிலையங்களில் அதேபாடங்களை வேறு வேறு நேரங்களில் 365 நாட்களும் இதே மாதிரியில் கற்கின்றார்கள்

இவ்வாறு வளரும் பருவத்தில் வகுப்பறைகளில் அமர்ந்திருக்கச்செய்து நீண்டநேரம் காதால் கேட்பதன் வாயிலாக கற்கும்படி எதிர்பார்க்கும் எமது கல்வி முறையால் ஏன் பெரிய வெற்றிகளை குவிக்கமுடியவில்லை. சரா சரியாக 1.5 சதவீத மாணவர்கள்தான் க. பொ. த சாதா ரணதரத்தில் எல்லாப் பாடங்களிலும் திறமைச் சித்தி (A) பெறுகின்றனர். இத்தொகையை ஏன் 20 சதவீதமாக அல்லது30 சதவீதமாகஉயர்த்தமுடியவில்லை?

இதற்குப்பலகாரணங்கள் அறிவுமேலாண்மையாளர்களினால் கூறப்பட்டு வருகின்றன.

பிள்ளைகள் கற்பிக்கப்படுகிறார்களே தவிர, அவர்கள் சுயமாகக் கற்பது, சரியாகக் கண்காணிக்கப் படுவதுமில்லை; அதற்கான ஊக்குவிப்புக் கள் ஒழுங்கு முறையிலும் தொடர்ச்சியாகவும் எல்லோருக்கும் வழங்கப்படுவதில்லை. இவை பற்றிய சமூக கண்காணிப்பு (Social Monitoring) என்பது திட்டமிடப்படவில்லை.

ஆசிரியர்கள் மாறிமாறிக் கற்பிப்பதால் மாத்திரம் பிள்ளைகள் கற்றுக்கொண்டு விடுவார்களா?

சிந்தனைவாதியும் பல வரலாற்றுச் சிந்தனைவாதிகளின் ஆசிரியருமான பிளேற்றோ பின்வருமாறு கூறினார்.

நான் சொல்ல முனைவதெல்லாம் மிகவும் சரியான உண்மையாக இருக்கமாட்டாது. ஆனால் பெரும்பாலும் உண்மையை ஒத்ததாக இருக்கமுடியும்.

இக்கூற்று கற்பிக்கும் எல்லா ஆரியர்களுக்கும் பொருந்தும்.

பிள்ளைகள் தாமாக கற்பதற்கும் இயல்பாக உணர்ந்து விளங்கிக் கற்பதற்கும் கற்றல் சார்ந்து ஒத்தவயதினர் தம்மளவில் பரபரப்பில்லாமல் கலந்துரையாடல் செய்வதற்கும் எத்தகைய வாய்ப்புக்களை நாம் வழங்கி வருகிறோம்? இவை பற்றி எந்தளவு சமூக சிந்தனையும்சமூகப்பொறுப்புணர்வும்எம்மிடையே வளர்ந்துள்ளன என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும்.

பிள்ளைகள் கற்பதற்கான- சுயமாக- தாமாகக் கற்பதற்கான ஏற்பாடுகளும் வாய்ப்புக்களும் வசதிகளும் ஊக்குவிப்புக்களும் போதியளவில் வழங்கப்படுகின்றனவா?

இதுபற்றிய சில எண்ணங்கள் இங்கு கலந்தாய்வுக்காக முன்வைக்கப்படுகின்றன.

பிள்ளைகளின் சுய கற்றலின் நிலைமை பற்றி சிறிது கலந்துரையாடுவதன் தேவை இப்போது வலுப்பெற்றுள்ளது.

### சமுதாய கற்றல் மையங்கள் வேண்டும்

இங்கு கற்பித்தல் நிகழாத மையங்களே குறிப்பிடப்படுகின்றன. ஆசிரியர்கள் இல்லாத கற்கும் நிலையங்கள் குறிப்பிடப்படுகின்றன.

பாடசாலைகளிலும் ரியூசன் நிலையங்களிலும் கற்றதை மாணவர்கள் தமது உண்மையான அறிவாகவும் புரிதலாகவும் மாற்றுதற்குரிய வாய்ப்புக்களையும் வசதிகளையும் வழங்கும் அமைவிடங்கள் பற்றி குறிப்பிடப்படுகின்றது.

ஆசிரியர்கள் கற்பிப்பதிலிருந்து மாணவர்களை விடுவிக்கவேண்டும்; கற்பித்தல் மேலாதிக்கப் பொறிமுறையிலிருந்து விடுதலை வேண்டும்; சிறார்கள் சிறார்களாகவே தங்களை உணரவாய்ப்பளிக்கவேண்டும்; இயல்பாகவே தாம் எவ்வாறு கற்பது என்பதை அடையாளம் காணவேண்டும்; தமது கற்றல் இடர்பாடுகள் இவைதான் எனதெளிவாகக் கண்டுபிடிப்பதற்கு வாய்ப்பளிக்கவேண்டும்; சேர்ந்து படிப்பதற்குரிய பொருத்தமான கற்றல் சகபாடிகளை இனங்காண இடமளிக்க வேண்டும். தமது பாட ஆசிரியர் களிடம் தாம் கேட்க வேண்டிய பாடங்கள் பற்றிய ஐயுறவையும் தெளிவாக வும் துல்லியமாகவும் கண்டறிவதற்குரிய சுதந்திரம் மற்றும் நேரஅவகாசம்வழங்கப்பட வேண்டும்.



கல்வித் தரிசனம்

இதற்கான சமு தாய மையங்கள் (Social Learning Students Ce ntres) உருவாக்கப்படுதல் வேண் டும். இதற்கென புதிதாக கட்டடங்களை உரு வாக்கவேண்டியதில்லை. அவ்வாறு உரு வாக்கவும் கூடாது.

எமது நாட்டில் நிறைவான பயன்பாட்டுக்கு உட்படாத பல நிலையங்கள் காணப்படுகின்றன. அவற்றை இனங்காணவேண்டும். அதன் பொறுப்புதாரர்களிடம் கலந்துரையாடவேண்டும். அவர்களது உடன்பாடும் உதவியும் பெறப்படவேண்டும்.

மாலைவேளைகளில் வெறுமையாக- பயன்பாடுஏதுமின்றிக்கிடக்கும்பலபௌதீக உட்கட்டமைப்புக்களை இதற்குப் பயன்படுத்த லாம்.

- ▲ முன்பள்ளிகள்- பிற்பகல்
- ▲ பாடசாலைகள்-மாலையும்வாரவிடுமுறையும்
- ▲ கோவில், தேவாலய மண்டபங்கள்- வைபவங்கள் இடம்பெறாத நேரங்கள்
- ▲ திருமண மண்டபங்கள்- வைபவம் ஏதுமற்ற வேளைகள்

மாநகர சபைகளும் பிரதேச சபைகளும் இவர்களுக்கான ஒழுங்குமுறைகளை மேற்கொள்ளலாம்.

இவை வாரத்தில் ஐந்து நாட்களுக்கு அனுமதிக்கப்படலாம். இங்கு பின்வரும் வசதிகளை வழங்கலாம்.

- ▲ பாடநூல்கள், வினாவிடை நூல்கள், கடந்த கால வினாத்தாள்கள் கிடைத்தல்
- ▲ நல்ல குடிநீர் வசதிகள், கழிப்பறைகள்
- ▲ மானிய முறையில் அல்லது இலவசமாக தேநீர்
- ▲ மின்சார வெளிச்ச வசதிகள்
- ▲ கற்பித்தல் உதவியாளர்கள் (சந்தேகங்களை நீக்க உதவுபவர்கள்)
- ▲ நலன்சார் உதவியாளர்கள் (தொண்டு அடிப்படையில் இளைப்பாறிய ஆசிரியர்கள், தாதியர் மற்றும் அரச ஊழியர்)

முதலில் முன்மாதிரி சமுதாய மாணவர் கற்றல் மையங்கள் சிலவற்றை வெவ்வேறு பிரதேசங்கள் (நகரங்கள், விவசாயக் கிராமங்கள், கடற்கரையோர கிராமங்கள்) தொடக்கி நடத்துதல், பின்பு மதிப்பீடு செய்து சில மாறுதல்கள் செய்தல், அதன்பின் பல பகுதிகளில் உருவாக்குதல்

உள்ளூராட்சி அமைப்புக்களும் வெளிநாடுகளில் வதியும் நலன்விரும்பிகளும் நிதியுதவி வழங்கவேண்டும்.

வீடுகளின்சிரமங்களிலிருந்தும்ரியூசன்முறைமையின் அதீத கற்பித்தல் அழுத்தங்களிலிருந்தும் மாணவர்கள் விடுபட இவை உதவும்.

வகுப்பறைகளில் கற்றதை தமது உண்மை அறிவாக மாற்றவும் இவை துணை செய்யும்.

### படிப்புக்கான சிறுவர் முகாம்கள்

படிப்புக்கான சிறுவர் முகாம்களை பல அரசசார்பற்ற நிறுவனங்கள் நடத்துகின்றன. நடமாடும் சேவைகளை அரச திணைக்களங்கள் நடத்துகின்றன. நகரும் வங்கிச் சேவைகளை வங்கிகள் வழங்குகின்றன.

இதேபோல் சுழற்சி முறையில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் மாதம் ஒரு படிப்புக்கான மாணவர் முகாம்கள் (Students Learning Camps) நடத்தப்ப டவேண்டும்.

இதில் பின்வரும் ஏற்பாடுகள் தேவை.

## புதிதாக சிந்திப்போம்: சமூகத்திற்கான கல்வி

- ▲ மாதிரி வினாவிடை விளக்கம் (ஒரு மணித்தியாலம்)
- ▲ மாணவர் மாதிரி விடை முன்விளக்கத்தின் அடிப்படையில் எழுதுதல் (30 நிமிடம் அல்லது 60 நிமிடம்)
- ▲ மாணவருக்கான உள்ளக விளையாட்டு (ஒரு மணித்தியாலம்)
- ▲ கதைநூல்கள் வாசித்தல்- தாமாக வாசிக்க நூல்கள் வழங்குதல் (ஒரு மணித்தியாலம்)
- ▲ ஊட்டம் நிறைந்த பழச்சாறு, சிற்றுண்டி வழங்குதலும் உண்ணுதலும் (20 நிமிடம்)
- ▲ சிறுவர்களுக்கான இசைகள் கேட்டல் (30 நிமிடம்)/ கார்ட்டூன் படங்கள் பார்த்தல்
- ▲ கற்றல் துறைகள் இலவசமாக வழங்குதல் (30நிமிடம்)

இவ்வாறு இயல்பாக இருப்பதற்கும் ஒன்றுகூடுவதற்கும் குதூகலிப்பதற்கும் கற்பதற்கும் கற்க வழிகாட்டுதற்கும் ஏற்றதாகத் திட்டமிட்டு இவற்றை நடத்தவேண்டும்.

மாகாணக் கல்வியமைச்சு இதற்கான பொறுப்பை ஒரு உப அலகிடம் வழங்க முடியும்.

முன்மாதிரி முகாம் ஒன்றை ஏற்பாடு செய்து பின்னூட்டல் பெற்று திருத்தமான ஏற்பாட்டுக்கு முன்னேறமுடியும்.

### பரீட்சைப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

பாடசாலைகளில் வாராந்தம் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை மேற்கொள்ளவேண்டும். வாரத்தில் ஒருநாள் இரண்டு மணித்தியாலங்களை இதற்கென திட்டமிட்டு ஒதுக்கவேண்டும். ஒவ்வொரு பாடத்திற்குமுரிய முறைமை சுழற்சி முறையில் அமைதல் வேண்டும்.

வினாவிடைப்பயிற்சி தொடர்பாக தற் போது நிலவும் பொருத்தக்கேடான பின்வரும் நடைமுறையை முற்றாகக் கைவிடுதல் வேண்டும்.

- ▲ ஆசிரியர் தாமாக விடையைக் கண்டறிந்து குறிப்பு வழங்குதல்
- ▲ தமது மொழிநடையில் எல்லா மாணவரும் விடை எழுதுவதற்கு அறிவுறுத்தல்
- ▲ ஒரே மாதிரி விடையை சில பாடங்களில் வழங்கமுடியும். எல்லாப் பாடங்களிலும் ஒரு விடையை எல்லோரும் எழுத வழிகாட்டுதல். பல்வகைமையை நிராகரித்தல்
- ▲ விடைகளை சிந்தித்து தேடுவதற்கும் அதில் தவறிழைத்து சரியான விடைநோக்கி படிப்படியாக மாணவர் முன்னேறுவதற்குமான வாய்ப்பை மறுத்து விடுதல். விடைகளைக் கண்டறியும் புலனாய்வுத்திறனை மழுங்கடித்தல்.
- ▲ வினாவுக்குரிய விடைகளுக்கான நேரம் ஒதுக்கல் சுய ஆற்றலை தடை செய்தல், சமமான விடைகளை வழங்க திட்டமிடுவதைத்தடுத்தல்
- ▲ சோதனைகளை நடத்திவிட்டு புள்ளிகளை வழங்காது விடுதல் அல்லது தாமதமாக வழங்குதல்.
- ▲ விடைகளின் தவறுகளை பகுப்பாய்வு செய்தலும் நுட்பமான தவறுகளை தெளிவுபடுத்தலும் தவறு நிகழ்ந்தமைக்குரிய காரணங்களைக் கண்டறிதற்கு உதவுதலும் அவசியமில்லையென நம்புதல்.

இதற்கான தேர்ச்சியில்லாமை அல்லது அதற்கு நேரம் செலவிடமுடியாமை; அல்லது இதில் தெளிவான சிந்தனை இல்லாமை காரணங்களாயுள்ளன.

இத்தவறுகளை அகற்றுவதற்கு பின்வரும் படிமுறை வற்புறுத்தப்படுதல் வேண் டும்.

- ▲ ஒன்று அல்லது இரண்டு கேள்விகளுக்கு மாத்திரம் நேரம் ஒதுக்கிவிடையெழுத வழிகாட்டல்
- ▲ வினாவுக்குரிய பகுதியை முதல் வாரத்திலேயே மாணவர் படிப்பதற்கு உதவியாக அறிவுறுத்தல்
- ▲ விடை எழுதுவதற்கு முன் கேள்வியின் பிரதான எண்ணக்கருக்களை பிரித்துக் காட்டு தல் வேண்டும். ஆனால் விடைக்கான விடயங்களை குறிப்பிடக்கூடாது.
- ▲ விடயங்களைக் கண்டறிதல், முக்கியத்துவத்தின் படி முன்னுரிமைப்படுத்தல், நேரத்துக்கமைய விரிவுபடுத்தல், உரிய கலைச் சொற்களை இடமறிந்து பயன்படுத்துதல் என்பவற்றுக்கு மாணவர்களை பழக்குதல் வேண்டும்.
- ▲ தவறுகளை தெளிவாகப் பிரித்தறிதற்கு பகுப்பாய்வுத்திறனை கவனமாக மாணவரிடம் வளர்க்கவேண்டும்.
- ▲ விடையெழுதுதற்கானபயிற்சிமற்றும்திட்டமிட்ட வழிகாட்டல் மூலம் மொழித்திறன், ஆழநோக்கும் திறன், சரியான விடையைக் கண்டறியும் திறன், விரிவாக்கும் திறன் என்பவற்றையும் மாணவரிடம் வளர்க்க வேண் டும்.
- ▲ விடையெழுதி ஒரு மணித்தியாலத்துள் திருத்திப் புள்ளியிட்டு சரியான வியாக்கியானத்தையும் மாணவர்களுக்கு வழங்கவேண் டும்.

தேவையெனில் விடை திருத்துவதற்கு சக ஆசிரியர்களையோ சிரேஷ்ட மாணவர்களையோ பயன்படுத்தமுடியும்.

பின்னூட்டல் விளக்கங்கள் வழங்கப்படாதவிடத்து சோதனைப் பயிற்சிகளால் எதுவும் பயனில்லை. விடைகளை மனனம் செய் யும் முரண்பட்ட கற்றல் பண்பாட்டிலிருந்து மாணவர்கள் விடுதலை பெறவேண்டும்.

### முடிவுரை

கல்வி அலுவலர்களும் அதிபர்களும் பெற்றோரும்பள்ளிஆசிரியர்களும்உள்ளூராட்சி மன்றத்தினரும் ஒன்றிணைந்து செயற்படுவோம்.

ஆசிரியர் கற்பிப்பதை வினைத்திறன் மிக்கதாக ஆக்குவதற்காக புறக்கணிக்கப்பட்டுள்ளதான சுய கற்றல் பண்பாட்டையும் அதற்கான சூழலையும் கட்டியெழுப்புவோம்.

17



பேராசிரியர் மா.சின்னத்தம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படும் சீர்திருத்தங்களையே முன்னெடுப்போம்

## 13 ஐயும் தெரியும் 15 ஐயும் தெரியும் என்கிறார் அமைச்சர் டலஸ்

(கொழும்பு)

**யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு மக்கள் இன, மத வேறுபாடின்றி சமாதானமாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற நிலையில் 13 ஆவது சீர்திருத்தம் என்ற போர்வையில் சிறுபான்மை இனங்களுக்கு மத்தியில் இனமுறுகலை ஏற்படுத்த சில தரப்பினர் முயற்சிப்பதாக குற்றம் சுமத்தப்பட்டடுள்ளது. அதில் சில தீய சக்திகள் குளிர்காய நினைப்பதாக அமைச்சர் டலஸ் அழகபெரும தெரிவித்துள்ளார்.**

இதற்கு எந்த மதத்தவர்களும் ஒருபோதும் அனுமதி வழங்கக் கூடாது எனவும் அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக் கிராமமான ரிதிதென்னவில் அமைக்கப்படவுள்ள மன்னர் மலிக் அப்துல்லாஹ் பல்கலைக்கழக கல்லூரிக்கான புரிந்துணர்வு உடன் படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று முன்தினம் காத்தான்குடி ஹிஸ் புல்லாஹ் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

இந்த 13 ஆவது சீர்திருத்தம் பலாத்காரமாக திணிக்கப்பட்ட பயத்திற்கும் அச்சத்திற்கும் மத்தியில் இந்திய அரசாங்கத்திடம் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் விடுத்த வேண்டுகோளின் பேரில் இலங்கை அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டு சட்டமாக மாற்றப்பட்டது.

எங்களுக்கு 13 ஐயும் தெரியாது; 15 ஐயும் தெரியாது. மக்களுக்கு அபிவிருத்தியை வழங்குகின்ற எந்த சீர்திருத்தமாக இருந்தாலும் அதை நாங்கள் முன்னெடுப்போம்.

இன்று தமிழ் பேசும் மக்கள் மத்தியில் காணப்படுகின்ற பிரச்சினைகளை எவ்வாறு தீர்வு காண வேண்டுமென்ற ஒரு நிலையைத்தான் உருவாக்கி தருகிறோம்.


அரசியல் ரீதியாக பிரச்சினைகள் உருவாக்கி இனங்களுக்கு இடையில் வைராக்கியத்தை உண்டுபண்ணி பிளவுகளை ஏற்படுத்தி விடாமல் இன, மத, மொழி வேறுபாட்டுக்கப்பால் நாமெல்லோரும் ஒரே தாய் நாட்டு மக்களே என்ற உணர்வோடு வாழவேண்டும்.

இன்று இலங்கை நாட்டை ஆசியாவிலேயே ஆச்சரியமிக்க நாடாக மாற்றுவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முயற்சித்து வருகின்ற வேளையில் விமான ஓடுபாதைகளை அமைத்தல், கப்பல் போக்குவரத்தை அம்பாந்தோட்டையில் அபிவிருத்தி செய்தல், வீதி அபிவிருத்தி என பல்வேறு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த வேளையில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஜெனீவாவிலும் இலங்கை அரசுக்கு எதிராக சிலர் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

நாம் ஒருபோதும் அவ்வாறிருக்கக்கூடாது நம் தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர் என்ற இன வேறு பாடின்றி ஒற்றுமையாக வாழ வேண்டும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் காலகட்டத்தில் நாளுக்கு நாள் கல்வி, பாதை, பாலங்கள் அடிப்படைத் தேவை கள் என பல்வேறு அம்சங்களில் முன்னேற்றப்பாதையை நோக்கி பயணிக்கின்றது என்றார். (அ-2)



# ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம்

**இன்று இரண்டாம் திருவிழா**

**வேழமுகத்தவனே கருணை காட்டிடுவாய்**

விளை தீர்க்கும் விநாயகனே வேழ முகத்தவனே!
பானை வயிற்றோனே உன் பக்தர்களைக் காப்பவனே
உனை நாடிவந்தோமே அருட்காட்சி கண்டிடவே
கணபதியே கரிமுகனே கருணை காட்டிடுவாய்!
எனைச் சேரும் துன்பங்களை எரிவீழும் பஞ்சென மாய்த்து
ஏழை பங்காளனாய் வந்து வாழ வகை செய்வாய்
முனைநாட் பணிந்தேத்த அருளிய முக்கண்ணன் மகனே!
மூசுஷிக வாகனனே உன் மலர்த்தாள் சரணம்! சரணம்!!

கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்

# 13 ஆவது திருத்தச் சட்ட மூல விவகாரத்தில் ஜனாதிபதி யாருடைய கருத்தை கேட்க போகிறார்?

## சுரேஸ் எம்.பி கேள்வி

(கொழும்பு)

**ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச சிங்கள பௌத்த அதிதீவிர கடும் போக்குடைய இனவாதிகளின் கருத்துக்களுக்கு செவிசாய்க்கப் போகின்றாரா? அல்லது நாட்டின் சமாதானத்தை விரும்பும் ஜனநாயகவாதிகளின் கருத்துகளுக்கு செவிசாய்க்கப் போகின்றாரா? என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.**

மாகாண சபைகளின் அதிகாரங்களை ஒழிக்கும் வகையில் 13 ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்தில் மாற்றங்களைச் செய்ய அரசு எடுக்கும் முயற்சி குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாணசபைகளின் அதிகாரங்களை ஒழிக்க அரசு எடுக்கும் நடவடிக்கைகளை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம்.

13 ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு முன்னோடியாக மாகாணசபைகள் திருத்த உத்தேசசட்ட வரைவு கொண்டு வரப்படுவதை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் இடதுசாரிக் கட்சிகள் கடந்த வாரம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கடுமையாக எதிர்த்ததையடுத்து அதனைத் தற்காலிகமாக அரசு ஒத்தி வைத்துள்ளது.

எனினும் சிங்கள இன வாதக் கட்சிகள் சில 13 ஆவது திருத்தச் சட்டத்தை உடனே ஒழிக்குமாறு ஜனாதிபதிக்குத் தொடர்ந்து அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றன. ஜனாதிபதி மகிந்தவின் சகோதரர். கோத்தபாயவும் இந்தச் சட்டத்தை இல்லாமல் செய்வதில் குறியாக இருக்கின்றார்.

ஆனால் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக தமிழர் பிரச்சினைக்கு தீர்வைக் காணுவேன் என ஜனாதிபதி சர்வதேச சமூகத்திற்கு அளித்த வாக்குறுதியை மறக்கக்கூடாது.

எனவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச சிங்கள- பௌத்த அதிதீவிர கடும் போக்குடைய இனவாதிகளின் கருத்துக்களுக்கு செவிசாய்க்கப் போகின்றாரா? அல்லது நாட்டின் சமாதா னத்தை விரும்பும் ஜனநாயக வாதிகளின் கருத்துக்களுக்கு செவி சாய்க் கப்போகின்றாரா?

இந்தக் கேள்விகளுக்குரிய பதில் ஜனா திபதியின் அடுத்த கட்ட நடவடிக்கையில்தான் தங்கியுள்ளது என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரமச்சந்திரன் தெரிவித்தார். (அ-2)

# 13 ஆவது அரசியல் திருத்தம் தமிழர்களுக்கு தீர்வாகாது

## தமிழ் தேசிய மக்கள் முன்னணி

(கொழும்பு)

தமிழர்கள் எதிர்பார்க்கும் நிரந்தர அரசியல் தீர்வுக்கு 13ஆவது திருத்தம் ஆரம்பப்புள்ளியாகவும் அமையாது, அது தமிழர்களுக்கு நிரந்தர தீர்வினையும் பெற்றுத்தராது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்தச் சந்திப்பில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், அக்கட்சியின் ஊடகப் பேச்சாளரும் தேசிய அமைப்பாளருமான மணிவண்ணன் ஆகியோர் பங்கு கொண்டனர்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 26 வருடங்களாக ஒரு நிலைப்பாட்டில் வந்த தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தற்போது தலைகீழாக மாறி மாகாண சபை முறைமைகளை ஆதரித்துதேர்தலில் போட்டியிடுகின்றது.

இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர்களுக்கு தேவையானதை அவர்களின் நலங்களிலிருந்து சர்வதேசத்தை அணுகுவதில்லை. சர்வதேசம் விரும்புவதை தமிழ் மக்கள் மீது திணிக்கிறது. அப்படிப்பட்ட மோசமான செயற்பாடுகளையே தமிழ் தேசியக் கூட்டமைப்பு செய்கிறது என அவர் குற்றஞ் சாட்டினார். அத்தோடு வடக்கு மாகாண சபைத் தேர்தலில் மக்கள் ஆதரவை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பில் போட்டியிட்டு தான் நிரூபிக்க வேண்டுமென்றில்லை. சுயேட்சையாக நின்று நிரூபிக்கலாம் என அவர் மேலும் கூறினார். (அ-6)

# மகாமாரி அம்மன் கொடியேற்றம்

தொல்புரம் வழக்கம்பரை ஸ்ரீ மகாமாரி அம்மன் ஆலய வருடாந்தத் திருவிழா இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பதினொரு நாட்கள் உற்சவம் நடைபெறும்.

இக்காலங்களில் தினமும் மாலை 6 மணிக்கு கந்தன் கருணை எனும் தலைப்பில் நல்லைக்குருமணியின் பிரதம வாரிசு கானகதா வாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்தசர்மா தெய்வீகத் தொடர் இசைப் பேருரையை நிகழ்த்தவுள்ளார். (அ-2)



போதையற்ற மனிதர்கள் வாழ்வின் எழுச்சியால் பூவுலகை பூரிப்படையச் செய்வார்கள் என்பதற்கு அமைவாக சர்வதேச புகைத்தல்-மது எதிர்ப்பு கொடிவாரத்தினை முன்னிட்டு புதிதாக நியமனம்பெற்ற புதுக்குடியிருப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கிராமங்கள்தோறும் மககளிடையே விழிப்புணர்வு கருத்தரங்குகளை ஏற்படுத்தியதுடன் கொடிகளையும் வழங்கி வைததததைப் படத்தில் காணலாம். (படம்:றெட்பானா செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனி மாத இராசி பலன்கள்

# 15.06.2013-16.07.2013



## மேடம்

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

**தெய்வ வழிபாடுகளால் திருப்தி ஏற்படும்! உறுதியான மனதோடும் உற்சாகத்தோடும் செயற்படும் மேஷராசி நேயர்களே!**

## செவ்வாய் தன ஸ்தானத்தில் சஞ்சரித்து யோகம், பணவரவு திருப்தியை வழங்கும்

ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது சனியின் வக்ர நிவர்த்திக்குப் பிறகு சந்தோஷங்கள் அதிகரிக்கும் என்றே சொல்லவேண்டும். மாதத் தொடக்கத்தில் ராசிநாதன் செவ்வாய் தன ஸ்தான்தில் சஞ்சரிப்பது யோகம்தான். பணவரவு திருப்திகரமாக இருக்கும். பக்க பலமாக இருக்கும் நண்பர்கள் வேண்டிய உதவிகளைச் செய்து கொடுப்பர். கூட்டு முயற்சிகளில் மாற்றம் ஏற்படும்.

ஜென்ம கேதுவின் ஆதிக்கத்தால் ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். ராகு, கேதுக்களின் ஆதிக்கத்திற்குள் அனைத்து கிரகங்களும் சஞ்சரிக்கும் விதத்தில் இருப்பதால் இந்த மாதத் தொடக்கத்தில் சில காரியங்கள் முடிவடைவதற்கான சூழ்நிலை அமைவது போல் இருந்து முடிவடையாமல் போகலாம். சந்திரபலம் நன்றாக இருக்கிறது. எனவே, பிள்ளைகள் வழியில் எடுத்த முயற்சி கைகூடும்.

குழந்தைகளின் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவீர்கள். படித்து முடித்துப் பட்டதாரியான மாணவ, மாணவிகள் வேலைக்கு ஏற்பாடு செய்திருந்தால் அவற்றுக்கான வேலை வாய்ப்புகள் கிடைத்துச் சந்தோஷப்படுவீர்கள். சகோதர ஸ்தானத்தில் குரு இணைந்து புனிதப்படுத்துகிறார். எனவே, விலகிச் சென்ற சகோதரர்கள் விரும்பி வந்து இணைவர்.

போட்டிகளுக்கு மத்தியில் உங்கள் முன்னேற்றம் இருப்பது கண்டு உறவினர்கள் ஆச்சரியப்படுவர். பால்ய நண்பர் ஒருவரின் மூலம் நீண்ட நாட்களாக நடைபெறாத காரியம் ஒன்று நடைபெற்று நிம்மதியைக் கொடுக்கலாம். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு அதிகம் பொறுப்புகள் வந்துசேரும். திடீரென ஏற்படும் பதவி உயர்வு உங்களை திக்குமுக்காட வைக்கலாம். புதசுக்ரசூரிய சேர்க்கை பொன்னான சேர்க்கை என்பதால் வழக்குகளில் வெற்றி கிடைக்கும்.

**கடக சுக்ரனின் சஞ்சாரம்!**

ஜூன் 23 ஆம் திகதி கடக இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். 2,7 க்கு அதிபதி நான்கில் சஞ்சரிக்கும் பொழுது அந்நிய தேசத்திலிருந்து அனுகூலச் செய்தி வந்து சேரும். தாயின் வழியில் உள்ள உறவினர்களால் ஏற்பட்ட இடையூறுகள் அகலும். புதிய வாகனங்கள் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். பழைய வாகனங்களில் பழுதுச் செலவுகள் அதிகரிக்கிறதே என்ற கவலை இனி அகலும். வீடு கட்ட எடுத்த முயற்சிக்கு அல்லது மனை வாங்க எடுத்த முயற்சிக்கு நண்பர்கள் கைகொடுத்து உதவுவர்.

**மிதுனச் செவ்வாயின் சஞ்சாரம்!**

ஜூலை 4 ஆம் திகதி மிதுன இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார். இராசிநாதனாகவும் அஷ்டமாதிபதியாகவும் விளங்கும் செவ்வாய் மிதுனத்தில் சஞ்சரித்து குருவுடன் கூடும் பொழுது குரு மங்கள யோகம் உருவாகிறது. எனவே, சகோதர வர்க்கத்தில் யாரேனும் ஒருவருக்கு திருமணம் முடிவாகலாம். நீண்ட நாட்களுக்கு முன்பு வாங்கிப்போட்ட இடம் நல்ல விலைக்கு போவதற்கான அறிகுறிகள் தோன்றலாம்.

**சனியின் வக்ர நிவர்த்தி காலம்!**

தொழில் மற்றும் லாப ஸ்தானத்திற்கு அதிபதியான சனி இதுவரை வக்ர இயக்கத்தில் இருந்து வந்தார். இதனால் பண நெருக்கடிகளும் பக்கத்தில் இருப்பவர்களால் சிக்கல்களும் உருவாகி இருக்கலாம். அந்த நிலை இனி மாறப்போகிறது. தேவைக்கேற்ற பணம் வந்து கொண்டே இருக்கும். ஆயினும் சனியின் பார்வை பலத்தோடு இராசியில் பதிவதால் எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. ஆரோக்கியத்திலும் அக்கறை தேவை. ஜூலை 7 ஆம் திகதி புதனும் வக்ர நிவர்த்தியாவதால் உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வுகள் ஏற்படலாம். இம்மாதம் முருகப் பெருமான் வழிபாடு முன்னேற்றம் தரும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இந்த மாதத் தொடக்கம் மகிழ்ச்சிகரமாக இருந்தாலும் சார்ந்திருப்பவர்களை கொஞ்சம் அனுசரித்துச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகும். பம்பரமாகச் சுழன்று பணிபுரிந்தாலும் உழைப்புக்கேற்ற பலன் கிடைப்பது அரிது. கணவன்– மனைவிக்குள் கனிவு கூட விட்டுக்கொடுத்து செல்வதுதான் உத்தமம். ஜூலை 4 க்கு மேல் உடன்பிறப்புகளின் வழியே உதவிகள் கிடைத்து மகிழ்ச்சியடைவர். வீடு மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். பத்திர பதிவுகளில் இருந்த சிக்கல்கள் விலகும். பணவரவு போதுமானதாக இருக்கும். குழந்தைகளின் சுபகாரியப்பேச்சுக்கள் முடிவடையும். சர்ப்பக்கிரக வழிபாடு சந்தோஷத்தை வழங்கும்.

# சிவல்புரி சிங்காரம்



## இடபம்

**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்**

**தனவரவு தாராளமாக வந்து சேரும்! யோசித்து செயற்படுவதன் மூலம் யோகங்களை வரவழைத்துக் கொள்ளும் இடப இராசி நேயர்களே!**

## ஆறாமிடத்தில் சஞ்சரிக்கும் ராகு, உத்தியோகம், தொழிலில் உன்னத நிலையைக் கொடுக்கும்

ஆனி மாதக்கிரக நிலைகள்ளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது இராசிநாதன் சுக்ரன் தன் ஸ்தானத்தில் தானாதிபதி புதனுடன் இணைந்து சஞ்சரிப்பதால் பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். வாங்கல், கொடுக்கல்கள் ஒழுங்காகும். வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள். தேங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறத் தொடங்கும். தீட்டிய திட்டங்களும் வெற்றி பெறும்.

உங்கள் இராசிக்கு 9,10 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக விளங்கும் சனி இதுவரை வக்ர இயக்கத்தில் இருந்தார். இதனால் நெருக்கடி நிலை ஏற்பட்டு நிம்மதி இழக்கும் சூழ்நிலை ஒரு சிலருக்கு உருவாகி இருக்கலாம். இப்போது இம்மாதம் ஆயுள் காரகன் என்று வர்ணிக்கப்படும் சனி வக்ர நிவர்த்தியாவதால் இனி எதிர்பார்த்த நற்பலன்கள் இல்லம் தேடி வரப்போகிறது. உதிரி வருமானங்கள் வரப்போகிறது. எதிரிகள் விலகுவர்.

பொதுவாக சர்ப்பக் கிரகத்தின் ஆதிக்கத்தில் மற்ற கிரகங்கள் சிக்கி இருக்கும் பொழுது உழைப்பிற்கேற்ற பலன் கிடைப்பது அரிது. மேலும் விரயாதிபதி செவ்வாய் உங்கள் இராசியிலேயே சஞ்சரித்து மாதம் தொடங்குகிறது. சந்திரபலம் நன்றாக அமைந்து மாதம் தொடங்குவதால் கடைசி நேரத்தில் காரியங்கள் கைகூடிவிடும். உடன்பிறப்புகளுக்காக ஒரு தொகையைச் செலவிடும் சூழ்நிலை உருவாகும்.

ஆறாம் இடத்தில் சஞ்சரிக்கும் ராகு உத்தியோகம் தொழிலில் உன்னத நிலையைக் கொடுக்கலாம். ஊதிய உயர்வு போன்றவைகள் கிடைத்து மகிழ்ச்சிக்கடலில் மிதப்பீர்கள். தொல்லை கொடுத்தவர்கள் எல்லையை விட்டு விலகிச் செல்வர். அரசியல்வாதிகளால் அனுகூலம் உண்டு. சனியின் வக்ர நிவர்த்திக்குப் பிறகு ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து போற்றும் விதத்தில் காரியத்தை முடித்துக்கொடுப்பர்.

**கடகச் சுக்ரனின் சஞ்சாரம்!**

ராசிநாதன் சுக்ரன் ஜூன் 23 ஆம் திகதி சகோதர ஸ்தானத்தில் சஞ்சரிக்கப்போகிறார். இதன்விளைவாக உடன்பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவர். உள்ளம் மகிழும் சம்பவங்க்ள் இல்லத்தில நடைபெறும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. அஞ்சல் வழியில் வரும் செய்தி ஆச்சரியப்பட வைக்கும். கரைந்து சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழும் சூழ்நிலை உண்டு. பெண் வழிப்பிரச்சினைகள் அகலும்.

**மிதுனச் செவ்வாயில் சஞ்சாரம்!**

ஜூலை 4 ஆம் திகதி மிதுன இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார். விரயாதிபதி தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது விரயத்திற்கேற்ற லாபம் வந்து கொண்டே இருக்கும். வாங்கிய சொத்துக்களை விற்றுவிட்டோம் என்று கவலைப்பட்டவர்கள் மீண்டும் சொத்துக்கள் வாங்கும் சூழ்நிலை உருவாகலாம். பயணங்களால் பலன் உண்டு. அந்நிய தேசத்திலிருந்து அனுகூலச் செய்தி வந்து சேரும்.

**சனியில் வக்ர நிவர்த்தி காலம்!**

உங்கள் இராசிக்கு 9,10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனிபகவான் ஜூலை 4 ஆம் திகதி வக்ர நிவர்த்தியாகிறார். எனவே, பெற்றோர் வழியில் ஒற்றுமை பலப்படும். பூர்வீக சொத்துக்கள் சம்பந்தமாக ஏற்பட்ட பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவிற்கு வரும். பழைய கூட்டாளிகள் விலகினாலும் புதிய கூட்டாளிகள் தொழிலுக்கு வந்திணைவர். செயற்பாடுகளில் வெற்றி கிட்டும். தேசப்பற்று மிக்கவர்களின் ஒத்துழைப்போடு உங்கள் ஆசைகளை நிறைவேற்றிக்கொள்வீர்கள்.

ஜூலை 7 ஆம் திகதி தானதிபதி புதன் வக்ர நிவர்த்தி ஆகிறார். அதன்பின்னர் தன வரவு தாராளமாக வந்து சேரும். எனவே, நினைத்த காரியத்தை நினைத்தபடி செய்து முடிப்பீர்கள். இம்மாதம் நந்தீஸ்வரர் வழிபாடு நலம் சேர்க்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் ஆதாயம் ஆதிகரிக்கும். ஆரோக்கியம் பற்றிய கவலை அகலும். அடுத்தடுத்து குடும்பத்தில் நல்ல காரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும. பணப்புழக்கம் அதிகரிக்கும். சேர்த்து வைத்த பணம் செலவாகி விட்டதே! என்ற கவலை இனி அகலும். தாய்வழி ஆதரவு பெருகும். கணவன்– மனைவிக்குள் இருந்த பிணக்குகள் தீரும். பிரச்சினைகள் ஓயும். தனக்கென ஒரு தனி முத்திரையை பதிப்பீர்கள். உத்தியோகத்தில் உள்ள பெண்களுக்கு பதவி உயர்வு ஊதிய உயர்வு போன்றவைகள் எதிர்பார்த்தபடி அமையும். அம்பிகை வழிபாடும் அங்காரக வழிபாடும் செங்கரும்பான வாழ்க்கையை அமைத்துக்கொடுக்கும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எனது கேள்விகளுக்கு சித்தர் அளித்த பதில்கள்"




ஆன்மீகம் 31

அன்னை சித்தர் இராஜ்குமார் குருஜி

அடியேன்:- அவரைத்தான் ஒருவன் சுட்டுவிட்டானே?

சித்தர்:- கோமாதா மனம் குளர்ந்தால் மழையால் இந்நாடு குளிரும்! காவேரி பெருகி கனிவன் புடன் தமிழ் மண் தேடி வருவாள்! நாட்டில் தர்மங்கள் குறையக்குறைய மழையும் மறையும், மழை மறைந் தால் நதிகளும் மறைய வேண்டியது தானே! புராணங்களில் கங்கை, யமுனை, சரஸ்வதி என போற்றப் படும்- சரஸ்வதி அப்படித்தானே மறைந்தது. என்ன தடுத்தாலும் என்ன? 2010 க்குப் பின் கங்கையே காவேரியை தேடி வந்து காப்பாளே! அன்று விதித்ததை இன்று மாற்றவா முடியும்? விதியின் வழியே மதி செல்லும் என்பது பொய்யாமொழி அல்லவா. இதன் எதிரொலி! ஈஸ்வர், அல்லா, யேசு என்ற பேதமின்றி மதங்கள் எல்லாம் ஒருவரை ஒருவர் மதித்து ஒற்றுமை யுடன் இந்தியர்களாக வாழவேண் டும் என்று போராடிய மகாத்மாவின் வரலாற்றை மறந்து இன்று மத வெறி, தீவிரவாதம், என்று மதம் பிடித்து அலைகின்ற கூட்டம் நாளுக்கு நாள் அதிகமாகும். தெரு வுக்கு தெரு ஜாதி வெறியால் பகை கொண்டு நாட்டின் அமைதிக்கே அழிவைத் தேடுவர்! தமிழகத்திலும் அவ்வப்போது ஆட்சிகள் மாறி மாறிச் சூழலும்! இதனால் ஆட்சியில் உள்ளோர் மாட்சிமை பெற்று குபேர வாழ்வு வாழ்வதும் மக்கள் மட்டும் மக்களாகவே தேர்தலில் வாக்களிக்க மட்டுமே பிறந்தவர்களாகவே வாழ்ந்து அரசியல்வாதிகளை வாழவைத்து வாழ்வைக் கழிப்பார்கள்! இவர்கள் வளமடையாமல் வறுமையில் இருப் பதுதான் அரசியல்வாதிகளில் வாழ்வு க்கு அவசியம் என்பதால் அவர்களை




கும்பமலை கும்பமுனி சித்தர் இடம்

முன்னேறவிடாமல் ஜாக்கிரதையாய் பார்த்துக்கொள்வது அரசியல்வாதிகள் கொள்கையாகிவிட்டது.

தப்பித் தவறி, தம் ஆட்சியில் யாராவது நல்லது செய்தாலோ, நேர்மையைக் கடைப்பிடித்தாலோ அதை அந்தக் கட்சிக்காரர்களே விரும்பமாட்டர்கள். தாம் சம்பாதிக்க வழியில்லையே என்று அடுத்து வரும் தேர்தல் காலங்களில் ஐந்தாம்படை வேலைகள், ஒதுங்கிக்கொள்ளுதல், பணியாற்றுவதைப்போல பாவனை செய்து தேர்தல் செலவுக்கு கிடைக்கும் பணத்தில் தங்கள் செலவுக்கு எவ் வளவு தேறும் என்று அலைவார்கள்! மக்களும் ராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன? என்று தேர்தலையே அலட்சியப்படுத்துவர்! இதனால் வாக்கு விலைபோகும்! கட்சிகள் மாறும். காட்சிகள் மாறும். பழிவாங்கும் நிகழ்ச்சிகள் அரங் கேறும். அரசியல் கொலைகள் தொடரும் பெருந்தலைவர்களே கொல்லப்படுவார்கள். இதற்கெல் லாம் காரணம் மகாத்மா காந்தியை நாடே மறந்ததுதானாகும். அதோடு மிக விரைவில் அசுரர் ஆட்சி அழியப் போகின்ற காரணத்தால் வழியும் வெள்ளம்- வேகமாக வடிவதைப் போல அணையப் போகும் தீபம், இறுதியில் கொழுந்து விட்டு எரிவதைப்போல வரவர அக்கிராமம் அதர்மம், அராஜகம், அநீதி போன்றவைகள் வளர்ந்து வளமாகி தர்மம் அழிந்து வருடத் துக்கு வருடம் சூனியர் உக்கிரமம் அதிகரித்து பருவமழை குறைந்து குறைந்து தண்ணீருக்காக மக்கள் போராட நீரின்மையால் வயல்களில் செந்நெல் அறுவடையாகி நில நடுக்கம் கண்டு, இறுதியில் இயற்கை அன்னையின் சீற்றத்தால் அசுரர் கூட்டம் அழியும்.

# சிங்கள பெருந்தேசியவாதத்திற்கு பலியாகுமா 13-வது திருத்தம்...?



பேரினவாத சக்திகளின் சுயரூபம் மெல்ல மெல்ல வெளிப்படத் தொடங் - கியுள்ளது

அரசியலமைப்பின் 13-வது திருத்தத்தை எப்படியெல்லாம் பல வீனப்படுத்த முடியுமோ அப்படி யெல்லாம் பலவீனப்படுத்துவதற் கான முயற்சிகளில் அரசாங்கம் தீவிரம் காட்டி வருகிறது. 13-வது திருத்த த்தை பலவீனப்படுத்துவதற்கோ, ஒழிப்பதற்கோ அரசாங்கம் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்று வெளிப்படையாகக் கூறினா லும் அது உண்மையான கருத்தல்ல என்பது இப்போது நிரூபணமாகியுள் ளது. வடக்கு மாகாணசபைக்கான தேர்தலை நடத்துவதற்கு முன்னர், 13- வது திருத்தச்சட்டத்தை, பலவீனப் படுத்தும் உச்சக்கட்ட முயற்சிகள் வெளிப்படையாகவே அரங்கேறுவது இதனை உறுதிப்படுத்தியுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை அலரி மாளிகையில் நடந்த ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில், இதற்கான திட்டம் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. இதையடுத்து, கடந்தவாரம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்திலும் இது தொடர்பான பிரேரணை சமர்ப்பிக்கப் பட்டு, ஆராயப்பட்டுள்ளது. 13வது திருத் தச் சட்டத்தை முற்றாக ஒழிப்பதற்குப் பதிலாக, அதனைச் செயலற்றதாக்கு கின்ற வகையில், இந்தத் திருத்தம், அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட வுள்ளது. வடக்கு மாகாணசபைத் தேர் தல் நடத்தப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டதும், தேசிய சுதந்திர முன்னணி, ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகள் 13-வது திருத்தச் சட்டத்தை ஒழிக்க வேண்டும் என்று கிளம்பின. அதற்குத் தூபம் போட்டுவிட்டவர் வேறு யாருமல்ல பாதுகாப்புச்செயலர் கோத்த பாய ராஜபக்சதான். வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் காணி, பொலிஸ் அதிகாரங்கள் பறிக்கப்பட்டு விடவேண்டும் என்ற அவரது இறுக்க மான போக்கும், விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க போன்றவர்களின் ஆதரவும், அரசாங்கத்தைப் புதிய வழியில் செயற்பட வைத்துள்ளது.

13வது திருத்தச் சட்டத்தை ஒழிப் பது அல்லது காணி, பொலிஸ் அதி காரங்களைப் பறிப்பதற்கு பதிலாக மாகாணசபைகளின் அதிகாரங்களை முடக்குகின்ற திட்டமே இப்போதை யது. மாகாணசபைகளை உருவாக்கிய 13வது திருத்தத்தை ஒரேயடியாக கொலை செய்து விடாமல் அதை நடைப் பிணமாக்குகின்ற திட்டம்தான் இது.

காணி, பொலிஸ் அதிகாரங்களை மட்டும் பறிப்பதற்கு முயன்றாலோ, அல்லது13-வது திருத்தத்தை ஒழிப்ப தற்கு முயன்றாலோ, அரசாங்கம் இந்தி யாவினதும் மேற்குலகினதும் எதிர்ப்பு களைச் சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும். அதேவேளை, இந்த அதி காரங்களுடன் வடக்கில் மாகாணசபை களை உருவாக்க இடமளிக்கப்படவும் கூடாது. எனவேதான் அரசாங்கம், இந்த மாற்றுத் திட்டத்தின் மூலம் மாகாண சபைகளின் அதிகாரங்களை பறிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது.

இப்போது மேற்கொள்ளப்படவுள்ள திருத்தம் இரண்டு முக்கிய விடயங் களை உள்ளடக்கியது.

முதலாவது- ஏதாவது மாகாண சபைகள் ஒன்றாக இணைந்து செயற்படும் தீர்மானத்தை எடுப்பத ற்கு வசதியாவுள்ள சரத்தை நீக்குவது. இரண்டாவது- எல்லா மாகாண சபைகளினதும் ஆதரவைப் பெற்றே ஒரு சட்டமூலத்தை நிறைவேற்றமுடி யும் என்பதை பெரும்பான்மை மாகாண சபைகள் என்று மாற்றுவது. இவை இரண்டுமே, வடக்கு- கிழக்கு மாகா ணங்களின் அதிகாரங்களைப் பலவீனப் படுத்துவதை அடிப்படையாகக் கொண் டவை என்பதில் சந்தேகமில்லை.


வடக்கில் மாகாணசபைத் தேர்தல் நடக்கப்போவதாக அறிவிக்கப்பட்ட பின்னர், அரசதரப்பில் உள்ளவர்களி டம் இருந்து வெளியான அத்தனை கருத்துக்களுமே, அதிகாரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வசம் சென் றால், ஆபத்து என்பதை வலியுறுத்து வதாகவே அமைந்திருந்தன. எனவே, இப்போதைய நகர்வுகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் அதிகாரங் கள் சிக்கி விடக்கூடாது என்பதை அடிப்படையாகக் கொண்டது என்ப தில் சந்தேகமில்லை. அதனால்தான், அமைச்சர் விமல் வீரவன்ச, வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியைக் கைப்பற்றினாலும் கவலையில்லை என்று குறிப்பிட்டி ருந்தார்.

இன்போதத் தமிழ்- தொல்காப்பியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கடமை



## அம்புலிமாமா கதைகள்

வேலனும், லிங்கமும் சிறு வயது முதல் நண்பர்கள். இருவரும் கிராமத்து ஜமீன்தார் வீட்டில் வேலை பார்த்தனர். இருவரும் ஒரே நேரத்தில் திருமணம் புரிய, இருவருக்கும் ஒரே சமயத்தில் ஆண் குழந்தைகள் பிறந்தன. இருவரும் வளர்ந்து ஒரே பள்ளியில் சேர்ந்தனர்.


ஒரு நாள் லிங்கம் வீட்டுக்குத் திரும்பியபோது, அவன் மகன் சோமு தன் தாயிடம் ஏதோ கெஞ்சிக் கேட்டுக் கொண்டிருந்தான். அவனுடைய பிறந்த நாளன்று பள்ளித் தோழர்களுக்கு இனிப்பு வழங்க விரும்புவதாகவும், அதற்குப் பணம் தர அப்பாவிடம் சிபாரிசு செய்யுமாறு தாயிடம் வேண்டிக் கொண்டிருந்தான். அடுத்தநாள் அவனுடைய பிறந்தநாள்.

தன் பிள்ளை சொல்வதைக் கேட்ட லிங்கம் "போடா, போ! உன் பிறந்த நாளுக்கு ஊர்ப்பயல்களுக்கு ஏன் இனிப்புத் தரவேண்டும்? நம்மிடம் பணம் கொட்டியா கிடக்கிறது?" என்று கேட்டான். அதற்கு சோமு, "அப்பா! என் சிநேகிதரின் மகன் சங்கர் அன்று தன் பிறந்த நாளன்று பள்ளியில் எல்லோருக்கும் இனிப்புக் கொடுத்தானே! அவன் அப்பாவும் பெரிய பணக்காரர் இல்லையே!" என்று எதிர்க்கேள்வி கேட்டான்.

அதைக்கேட்டு எரிச்சலுற்ற லிங்கம், "எல்லோருக்கும் வாரி வழங்க எனக்கு இஷ்டமில்லை. அந்தப்பணத்தில் நீ உனக்கு மட்டும் ஏதாவது வாங்கிக் கொள்!" என்று சொல்லிவிட்டான்.

ஆனால், அத்துடன் நிற்கவில்லை சோமு! அடிக்கடி அப்பாவிடம் வேலனின் மகன் சங்கர் ஏழை மாணவர்களுக்கு அதை வாங்கிக் கொடுத்தான். இதை வாங்கிக் கொடுத்தான் என்று ஓயாமல் சங்கர் புராணம் படித்தான். அத்தோடு நில்லாமல் தானும் அந்த மாதிரி தானம் வழங்க ஆசைப்பட்டதுதான் அவன் தகப்பன் லிங்கத்துக்கு எரிச்சல் உண்டாக்கியது.

ஒரு நாள் பொறுக்க முடியாமல் லிங்கம் தன் நண்பன் வேலனைப் பார்த்து, ஏண்டா! நீ கெட்டுப் போவது மட்டுமல்லாமல் ஏன் உன் பிள்ளையையும் கெடுத்து குட்டிச் சுவர் ஆக்குகிறாய். நீ மட்டும் தான் தருமம் செய்தால் போதாதா? உன் பிள்ளையும் எல்லோருக்கும் வாரி வழங்க வேண்டுமா? நீங்கள் என்ன கர்ண பரம்பரையா? என்று திட்டினான்.




அதற்கு வேலன், "அதில் தவறு என்ன லிங்கம்? ஆதரவற்றவர்களுக்கு உதவி செய்யத்தானே நம்மை கடவுள் படைத்திருக்கிறார்! என் பிள்ளையும் என்போலவே தர்மிஷ்டனாக இருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்" என்றான்.

சரி, இது திருந்தாத ஜென்மம் என்று எண்ணிய லிங்கம் அன்று முதல் வேலனுடன் பழகுவதை நிறுத்திக் கொண்டான். தன் பிள்ளையையும் வேலனின் மகனுடன் பழக வேண்டாமென்றும், பழகினால் அவனுடைய தயாள குணம் தொற்று நோய் போல் ஒட்டிக் கொள்ளும் என்றும் எச்சரித்தான்.

காலம் உருண்டோடியது. சங்கர் படித்து முடித்துப் பெரியவனாகி நகரத்தில் வேலை பார்க்கத் தொடங்கினான். வேலனும் தன் மகன் சங்கருடன் சேர்ந்து வசிக்க ஆரம்பித்தான். சிறு வயதிலிருந்தே தகப்பனைப் போல் தயாள குணம் படைத்த சங்கர், தான் வேலை பார்க்கும் போதுதான், தர்மத்துக்கு நிறையப் பணம் அளித்தான். ஒரு சமயம் தனது கிராமத்தில் முதியோர் இல்லம் தொடங்கப்பட்டிருந்ததையறிந்த சங்கர் தான் சேமித்து வைத்திருந்த ஒரு பெருந்தொகையை நன்கொடையாக அளிக்க விரும்பினான். அதைப் பற்றி தன் தந்தையிடம் கூறியபோது, வேலன் அதை முழுமனத்துடன் ஆதரித்தது மட்டுமன்றி, அந்த முதியோர் இல்லத்தைப் பார்வையிட விரும்பினார். சங்கர் அவ்வாறே முதியோர் இல்லத்து நிர்வாகியிடம் தானும், தன் தந்தையும் அங்கு விஜயம் செய்வதாகவும், ஒரு பெரிய தொகையை நன்கொடையாக அளிப்பதாகவும் முன் கூட்டியே தகவல் அனுப்பினான். முதியோர் இல்லத்து நிர்வாகியும் பெரு மகிழ்ச்சியுடன் அவர்களை வரவேற்க ஆயத்தமானர்.

ஒரு நாள் வேலனும், சங்கரும் தங்கள் கிராமத்து முதியோர் இல்லத்துக்குச் சென்றனர். சங்கர் நிர்வாகியிடம் பேசிக்கொண்டு இருக்கையில், வேலன் முதியோர் இல்லத்துத் தோட்டத்தில் காலார நடந்து சென்றார். அங்கு ஒரு கிழவன் பூச்செடிகளுக்குத் தண்ணீர் விட்டுக் கொண்டிருந்ததுடன், பூக்களைப் பறித்து ஒரு கூடையில் போட்டுக் கொண்டிருந்தான். தன் தள்ளாத வயதில் தோட்ட வேலை செய்து கொண்டிருந்த கிழவனை மெதுவாகத் தோளில் தட்டிய வேலன் "அப்பா! நீ யாரோ தெரியாது! ஆனால், இந்த முதிய வயதிலும், மிகுந்த ஆர்வத்துடன் தோட்ட வேலை செய்வதைப் பாராட்டுகிறேன்" என்றார்.

குரல் கேட்டு தலை நிமிர்ந்த தோட்டக்கார கிழவன் வேலனைப் பார்த்து, "ஹா! நண்பன்! நீயா!" என்று விளிக்க, அப்போதுதான் அவன் லிங்கம் என்று வேலனால் அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது. "அட! லிங்கம்! நீயா?" என்று வேலன் லிங்கத்தை அப்படியே மார்போடு தழுவிக் கொண்டார். இருவரும் சற்று நேரம் பழைய நாட்களைப் பற்றி பேசிக் கொண்டபின், லிங்கம் "நான் ஏன் ஆர்வத்துடன் பூக்களைப் பறிக்கிறேன் தெரியுமா? இன்று யாரோ ஒரு புண்ணியவான் பெரிய தொகையை முதியோர் இல்லத்துக்கு நன்கொடையாகத் தரப்போகிறாராம். அதனால்,என்னுடைய உழைப்பில் உருவான பூக்களைத் தொடுத்து மலையாக்கி அந்த கொடை வள்ளலுக்கு அணிவிக்கப் போகிறேன் என்பதை நினைத்து மிகவும் ஆசை ஆசையாகப் பூப்பறிக்கிறேன்" என்றான்.



"அந்தப் புண்ணியவான் வேறு யாருமில்லை லிங்கம்! என்னுடைய பிள்ளை சங்கர்தான்!" என்றார் வேலன்.

"ஆகா! அப்படியா? உன்னுடைய பிள்ளை சங்கர்தான் அந்தக் கொடை வள்ளலா? வேலா! இதில் அதிசயப் பட ஒன்றும் இல்லை. உன்னுடைய மகன் வேறு எப்படி இருப்பான்? உன்னைப் போல் தர்மாத்மாவாக அவன் இருப்பதில் எந்தவிதமான ஆச்சரியமும் இல்லை" என்றான் லிங்கம்.

"அதிருக்கட்டும்! உன் குடும்பம் எப்படி உள்ளது? உன் மகன் சோமு எங்கேயிருக்கிறான்?" என்றார் வேலன்.

"என் மகன் வேறு எப்படி இருப்பான்? என்னைப் போலத்தானே இருப்பான்? சிறு வயது முதல் யாருக்கும் வாரி வழங்காதே என்று நான் திரும்பத் திரும்ப அறிவுரை புகட்டி நான் வளர்த்த பிள்ளை எப்படியிருப்பான்? யாருக்கும் எதுவும் கொடுக்காதே என்று நான் சொல்லிக் கொடுத்த பாடத்தை இன்று எனக்கே திருப்பிக் காட்டி விட்டான். என்னை நடுத்தெருவில் நிறுத்தி விட்டு ,அவன் தன்னுடைய மனைவி, பிள்ளைகளுடன் தனிக் குடித்தனம் நடத்துகிறான். உன்னைப் போன்ற புண்ணியவான்கள் தன்னுடைய பிள்ளைகளை நல்லபடி வளர்த்திருப்பதால்தான், என்னைப் போன்ற பாவப்பிறவிகள் முதிய வயதில் பிழைக்க முடிகிறது" என்று அழுதான் லிங்கம்.

"சேச்சே! அதற்கு ஏன் இப்படி வருத்தப்படுகிறாய், லிங்கம்? உன்னையும் என்னுடைய பிள்ளை என்னுடன் சேர்த்து வைத்துக் காப்பாற்றுவான். இப்போதே வா கிளம்பி என்னோடு என் வீட்டுக்கு!" என்றார் வேலன்.

"பரவாயில்லை, வேலா! நான் இது நாள் வரை செய்த பாவங்கள் அனைத்துக்கும் என்னை தண்டனை அனுபவிக்க விடு! நீ அடிக்கடி என்னை இங்கே வந்து சந்தித்தால் அதுவே போதும். அதுவே என் மனத்திற்கு ஆறுதலாக இருக்கும்" என்றான் லிங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்காளர்களாக பதிவு பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்கிறோம்

## வினோ எம்.பி.யிடம் முறைப்பாடு

(மன்னார்)

மன்னார் பிரதேசத்தில் சில கிராம சேவையாளர் பிரிவுகளில் 2013 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பதிவுகளை மேற்கொள்ளச் செல்கின்ற போது சில கிராம சேவையாளர்கள் பதிவுகளை மேற்கொள்ள மறுப்பு தெரிவிப்பதாக பாதிக்கப்பட்ட வாக்காளர்கள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோதராதலிங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

2012 ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பில் பதிவிலுள்ள வாக்காளர்கள் 2013 ஆம் ஆண்டுக்கான பதிவுகளை மேற்கொள்வதற்காக தற்போது கிராமசேவகர்களிடம் சென்று தமது பதிவுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் 2013 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பதிவுகளை மேற்கொள்வதற்காக கிராமசேவையாளர்களை நாடினால் கிராம சேவையாளர்கள் சிலர் எங்கள் மீது சந்தேகங்களை ஏற்படுத்தி கதைப்பதோடு பதிவில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாகவும் கூறுகின்றனர்.

வாக்காளர் இடாப்பில் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்றால் குறித்த வாக்காளர்கள் சமாதான நீதவான் ஒருவரிடம் தமது இருப்பிடத்தை உறுதிப்படுத்தி கடிதம் கொண்டு வரும்படி கேட்பதாக பாதிக்கப்பட்ட வாக்காளர்கள் தெரிவித்துள்ளனர்.

2013 ஆம் ஆண்டு வாக்காளர் பதிவுகளை மேற்கொள்ள சில கிராம சேவையாளர்கள் உதவியாளர்களை வைத்து வீடு வீடாக பதிவுகளை மேற்கொள்கின்ற போது குறித்த உதவியாளர்கள் உரிய முறையில் வீடுகளுக்குச் செல்லாது அவர்களது சுய விருப்பத்தின் பேரில் பதிவுகளை மேற்கொள்வதனால் பிரச்சினைகள் இடம்பெறுவதாக பாதிக்கப்பட்ட வாக்காளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தலைமன்னார் பியர் பகுதியில் வாக்காளர்களை பதிவு செய்வதில் பல்வேறு பிரச்சினைகள் இடம்பெற்று வருவதாக பாதிக்கப்பட்ட வாக்காளர்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரிடம் முறையிட்டுள்ளனர். (அ-2)

# அவுஸ்.பிரதமரின் நடவடிக்கைகள் திருப்தியளிப்பனவாகவில்லை

## *அவுஸ்.தமிழர்கள் விமர்சனம்*

(கொழும்பு)

அவுஸ்திரேலிய பிரதமர் ஜுலியா கில்லார்ட்டின் நடவடிக்கைகள் அதிருப்தியாக அமைந்துள்ளதாக அந்நாட்டு தமிழர்கள் விமர்சனம் செய்துள்ளனர்.

சமீபத்தில் புகலிடக் கோரிக்கையாளர் படகு ஒன்று கவிழ்ந்தமை தொடர்பில் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் அதிருப்தி அளிப்பதாக அவுஸ்திரேலியா தமிழ் காங்கிரஸ் குற்றம் சுமத்தியுள்ளது.

அவுஸ்திரேலியர்கள் படகு விபத்தில் சிக்கியிருந்ததால் அரசாங்கம் விரைவாக மீட்புப் பணிகளை முடிவுறுத்தியிருக்காது என தெரிவித்துள்ளது.

படகு விபத்தில் பாதிக்கப்பட்டோரை அரசாங்கம் மீட்பதற்கு உரிய முனைப்பு காட்டவில்லை எனவும் காணாமற் போனவர்களைத் தேடும் பணிகள் இடைநிறுத்தப்பட்டதாகவும் தெரிவித்துள்ளது .

படகு விபத்தில் காணாமல் போனவர்கள் மூன்று நாட்கள் கடல் மற்றும் வான் வழியாக தேடப்பட்டனர். இந்தப் படகில் பயணித்த 13 பேரின் சடலங்கள் கிடைக்கப்பெற்றதுடன் ஏனையவர்களைத் தேடும் பணி கைவிடப்பட்டது.

விபத்துக்குள்ளானவர்களை உயிருடன் மீட்க முடியாது என்ற காரணத்தினால் இந்த கடுமையான தீர்மானத்தை எடுத்ததாக பிரதமர் கில்லார்ட் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசாங்கத்தின் நடவடிக்கை அதிருப்தி அளிப்பதாக தமிழ் காங்கிரஸ் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். (அ-2)

# பிரிட்டனின் அதிவேக விசாசேவை அறிமுகம்

பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் இலங்கையில் ஒரு புதிய அதி வேகப்பாதை விசா சேவையொன்றை எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் அறிமுகப்படுத்தவுள்ளது.

இவ்வகையான அதிவேகப்பாதை விசா விண்ணப்பங்களை உள்துறை அலுவலகம் துரிதப்படுத்தி ஐந்து வேலைநாட்களுக்குள் ஆவணங்களைத் திருப்பியனுப்பிவிடும்.


இச் சேவைக்காக 10 ஆயிரம் ரூபா கட்டணமாக அறவிடப்படும் என்று கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

வாடிக்கையாளர்கள் www.visa4 uk.fcogov.lk எனும் இணையத்தளத்தின் ஊடாக தங்களுக்கான நேரத்தை ஒதுக்கிக் கொள்ள முடியும் என்றும் உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது. (அ-2)

# முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சை 16 ஆம் திகதி

வடக்கு மாகாண முகாமை உதவியாளர் சேவையின் III ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை 2013 எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம், நெல்லியடி, சாவகச்சேரி, கிளிநொச்சி, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய பரீட்சை நகரங்களில் நடத்தப்படவுள்ளதாக வடமாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவின் செயலாளர் க.தெய்வேந்திரம் அறிவித்துள்ளார்.

பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டைகள்யாவும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அனுமதி அட்டைகள் கிடைக்க.பெறாதவர்களை 0212219980 என்னும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (அ)




❖ 1871 - லாப்ரடோரில் சூறாவளி தாக்கியதில் 300 பேர் பலியாகினர்.

❖ 1881 - ஜெனட் என்ற அமெரிக்கக் கப்பல் ஆர்க்டிக் பெருங்கடலில் மூழ்கியது.

❖ 1886 -பிரித்தானியக் கொலம்பியாவின் வான்கூவர் நகரத்தின் பெரும் பகுதி தீயினால் சேதமடைந்தது.

❖ 1886 - பாவாரியாப் பேரரசன் இரண்டாம் லுட்விக் மியூனிக்கின் ஸ்டார்ன்பேர்க் ஆற்றில் இறந்துகிடக்கக் காணப்பட்டான்.

❖ 1917 - முதலாம் உலகப் போர்: லண்டன் நகர் மீது ஜேர்மனியப் போர் விமானங்கள் தாக்கியதில் 46 குழந்தைகள் உட்பட 162 பேர் உயிரிழந்தனர்.

❖ 1925 - சார்ல்ஸ் ஜென்கின்ஸ் படங்களையும் ஒலியையும் ஒரே நேரத்தில் அனுப்பும் முறையை முதன்முறையாக வெற்றிகரமாகப் பரிசோதித்தார். 10 நிமிட அசையும் படத்தை 5 மைல்கள் தூரத்திற்கு அனுப்பினார்.

❖ 1934 - ஹிட்லரும் முசோலினியும் வெனிசில் சந்தித்தனர்.

❖ 1944 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனி பறக்கும் குண்டுகளை இங்கிலாந்து மீது வீசியது. மொத்தம் 11 குண்டுகளில் 4 குண்டுகள் இலக்குகளைத் தாக்கின.

❖ 1948 - ஈழத்தின் முதல் எழுத்தாளர் சங்கமான தமிழிலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.

❖ 1948 - மலாயா தொழிற்சங்கங்களின் சம்மேளனம் மலேசியாவில் தடை செய்யப்பட்டது.

❖ 1952 - சோவியத்தின் மிக்-15 போர் விமானம் சுவீடனின் டிசி-3 ரக விமானத்தைச் சுட்டு வீழ்த்தியது.

❖ 1955 - சோவியத் ஒன்றியத்தில் முதலாவது வைரச் சுரங்கம் கண்டுபிடிக்கப்பட்டது.

❖ 1978 - இஸ்ரேலின் பாதுகாப்புப் படையினர் லெபனானை விட்டு விலகினர்.

❖ 1981 - லண்டனில் இடம்பெற்ற அணிவகுப்பு நிகழ்வு ஒன்றில் சிறுவன் ஒருவன் இரண்டாம் எலிசபெத் மகாராணியை நோக்கி வெற்றுத் துப்பாக்கிக் குண்டுகளைத் தீர்த்தான்.

❖ 1983 - பயனியர் 10 சூரியக் குடும்பத்தைத் தாண்டிய முதலாவது விண்கப்பல் ஆனது.

❖ 2006 - நியூ ஹரைசன்ஸ் தனது பயண வழியில் 101,867 கிமீ தூரத்தில் 132524 APL என்ற சிறுகோளை சந்தித்து அதன் படத்தைப் பூமிக்கு அனுப்பியது.

❖ 2007 - திருகோணமலையில் மேர்சி கோப்ஸ் என்னும் பன்னாட்டுத் தன்னார்வல அமைப்பின் பிலிப்பைன்ஸ் பணியாளர் ஒருவர் இலங்கைக கடற்படையினரால் சுடப்பட்டார்.

### பிறப்புகள்

❖ 1831 - ஜேம்ஸ் மாக்ஸ்வெல், ஸ்கொட்லாந்து இயற்பியலாளர் (இ. 1879)

❖ 1897 - ஜெப்ரி ஃபார்ன்பீல்ட், இங்கிலாந்து அணியின் துடுப்பாட்டக்காரர். (இ. 1974)

❖ ***1933 - யாழ்வாணன், ஈழத்து எழுத்தாளர் (இ. 1996)***

❖ 1944- பான் கி மூன், ஐக்கிய நாடுகள் அவையின் எட்டாவது பொதுச் செயலாளர்

❖ 1966 - கிரிகோரி பெரல்மான், ரஷ்யக் கணிதவியலாளர்

❖ 1969 - சார்ல்ஸ் ஃபோர்வார்ட், இங்கிலாந்து அணியின் துடுப்பாட்டக்காரர்.


❖ 1987 - ஜி. வி. பிரகாஷ் குமார், தமிழ்த் திரைப்பட இசையமைப்பாளர்

### இறப்புகள்

❖ 1972 - கியோர்க் வொன் பெக்கெசி, நோபல் பரிசு பெற்றவர் (பி. 1899)

❖ 2012 - மெஹ்தி ஹசன் , ஓர் பாகிஸ்தானிய கசல் பாடகரும் முன்னாள் ஹொலிவுட் திரைப்பட பின்னணிப் பாடகர். (பி. 1927)

### யாழ்வாணன்



யாழ்வாணன் 1933ஆம் ஆண்டு ஜூன்மாதம் 13ஆம் திகதி பிறந்தார். ஈழத்தின் புகழ் பெற்ற சிறுகதையாசிரியர். சண்முகநாதன் நாகலிங்கம் என்பது இவரது இயற்பெயர். யாழ்ப்பாண மாநகரசபை அலுவலகத்தில், நகர மண்டபக் காப்பாளராக கடமையாற்றினார்.

யாழ் இலக்கிய வட்டத்தை உருவாக்கியவர்களுள் யாழ்வாணனும் ஒருவர். ஆரம்ப காலத்திலிருந்தே அதன் செயலாளராகப் பணிபுரிந்து வருகிறார். யாழ். இலக்கிய வட்டத்தின் வளர்ச்சிக்கான காரணங்களுள் இவரது அயராத அடக்கமான உழைப்பு மிகவும் முக்கியமானதொன்று.

யாழ்வாணன் சுகாதாரப் பகுதியினரால் வெளியிடப்பட்ட சுகாதார ஒலி என்ற பத்திரிகையின் ஆசிரியர். 1968ஆம் ஆண்டு நடைபெற்ற சுகாதார குடிநல வார விழாக் குழுவின் செயலாளராகக் கடமையற்றியதுடன் எழில்மிகு யாழ்ப்பாணம் என்ற வாடா மலரையும் வெளியிட்டு அறிஞர் பெருமக்களின் பாராட்டுதல்களையும் இவர் பெற்றுள்ளார்.

அண்ணா அஞ்சலி இவரது மற்றுமோர் தொகுப்பு நூலாகும். கடனுதவிச் சிக்கனச் சங்கத்தின் தலைவராகவும் பணியாற்றினார். இலக்கிய விழாக்கள், நாடக - நடன விழாக்கள், பொதுக் கூட்டங்கள் ஆகியவற்றை செம்மையாக ஒழுங்கு செய்து சிறப்பாக நடத்தி முடிக்கும் யாழ்வாணனின் மந்திர சக்தியையும் பலர் அறிவர். சிறந்த சிறுகதையாசிரியராக யாழ்வாணன் பல பரிசுகளைப் பெற்ற எழுத்தாளர். பரந்த சமூக சேவையாளரான இவர் நிறைந்த நல்லியல்புகளைக் கொண்ட பண்பாளர்.

1987ஆம் ஆண்டு இவர் தனது பணியில் இருந்து ஓய்வு பெற்று சென்னைக்கு இடம் பெயர்ந்தார். 1996 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 5ஆம் திகதி மாரடைப்பால் காலமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றுவாண்டா இனப்படுகொலை- உயிர் தப்பியவரின் அனுபவப் பகிர்வு



03.06.2013, பக்கம் 12 இன் தொடர்ச்சி...

றுவண்டாவில் நிகழ்ந்த இனப் படுகொலையில் தப்பிப் பிழைத்த வர்கள் பல சந்தர்ப்பங்களில் மற்றவர் களின் மனிதத்தன்மை காரணமாகவே உயிர் தப்பினார்கள்.

இன்ரேறகம்வே என அழைக்கப் பட்ட ஹூட்டு இன பயங்கரவாதி கள், தேவாலையத்துள் புகுந்து, துப் பாக்கியால் சுட்டும், அரிவாளால் வெட்டியும் படுகொலைகளைப் புரியத் தொடங்கியபோது லூஜியும் அவள் அம்மாவும் தேவாலையத்துள் தான் இருந்தனர். துற்சிஸ் இன மக்கள், தேவாலையத்தின் பின் கத வால் தப்பிச் செல்ல முயன்றபோது பலர் அந்த இடத்திலேயே கொல்லப் பட்டனர். லூஜியின் தாத்தாவும் அவ்வாறு அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார். ஏனையவர்கள் பிடிக்கப்பட்டு ஆணிகள் பதிக் கப்பட்ட தைத்தடிகளை, கையில் வைத்து வீசி ஆட்டிக் கொண்டிருந் தவர்களால் கொல்லப்படுவதற் காக, வரிசையாக அழைத்துச் செல் லப்பட்டனர். அந்நாளின் முடிவில் ஏறத்தள 11,500 பேர் தேவாலயத்தை யும் அதனைச் சுற்றிய பிரதேசங்களி லும் கொல்லப்பட்டனர். மறுநாள் இன்னும் ஒரு 10,000 பேர் இந்த நகரத்தில் உதைப்பந்தாட்ட மைதானத் தில் கொல்லப்பட்டனர்.

லூஜியையும் அவ்வளது அம்மா வையும் பொலிஸ்காரன் ஒருவன், அவர்களைக் கொலை செய்யக் கூட் டிச் செல்வதாகக்கூறி நடித்து அழைத் துச் சென்று காப்பாற்றினான். அவன் அவர்களை அழைத்துச் செல்லும் வழியில் மடலேனா (லூஜின் தாய்) பற்றைக் காட்டுக்குள் இருந்து ஒரு குழந்தையின் அலறலைக் கேட்டாள். "நாங்கள் மிகுந்த அச்சமடைந்தோம் ஏனெனில் இந்த அலறல் ஹூட்டு தீவிரவாதிகளை அழைத்து வந்து விடுமென்று நினைத்தோம். நான் மனதுக்குள் அட குழந்தையே சத்தம் போடாதே! அல்லது செத்துப்போ" என நினைத்தேன்

பொலிஸ்காரன் ஒருவனால் காப்பாற்றப்பட அழைத்துச் செல்லப் பட்ட அந்தக் குழந்தை- தான் செத் துப்போவெனச் சபித்த அக்குழந்தை- தனது எட்டு வயதான மகன் மௌரி- ஸ்சே எனப் பிற்பாடு மடலேனா அறிந்து கொண்டாள். அன்றைக்கு காப்பாற்றப்பட்ட அவளது மகன் இன்று ஒரு இராணுவ உத்தியோகத் தராக இருக்கிறான்.

மடலேனாவை அவளது அயல வர்கள் தங்களால் முடிந்தவரை காப் பாற்றிவந்தனர். அதுவும் முடியாத நிலை என்று தோன்றிய போது மட லேனாவும் அவளது பிள்ளைகளும் வாழைத் தோட்டத்தினுள் சென்று தங்களை எவரும் காணமாட்டார்கள் என்ற நம்பிக்கையில் பதுங்கி இருந் தார்கள். ஆனாலும், சில கிழமை களில் அவள் கைப்பற்றப்பட்டு பாலி யல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட் டாள். ஆனால், துணிவுமிக்க வங்கி வேலையாள் ஒருவனின் சொந்த முயற்சியால், அவளும் அவள் பிள்ளை களும் மீண்டும் காப்பாற்றப்பட்டனர். குறித்த வங்கியாளன் தனது சொந் தப்பணத்தை ஹூட்டு இன பயங்கர வாதிகளுக்கு லஞ்சமாக வழங்கி அவ ளைக் காப்பாற்றினான்.

தற்பொழுது 62 வயதாகும் மட லேனா இனப்படுகொலைக்குப் பிறகு, தனது விரிந்த உறவு வ்ட்டத்தில் இருந்து ஆறு அநாதைக்குழந்தைகளை எடுத்து வளர்க்கிறாள். அவர்களின் ஒருத்தியான சவேரா முகசரங்கோ, 15 வயதாக இருக்கும்போது தற்கொலை செய்துகொண்டாள். வீதியில் தனது தந்தையைக் கொலை செய்தவனை நேரில் கண்டதால் ஏற்பட்ட மன வேதனையை தாங்காது, அவள் ஏரிக்குள் பாய்ந்து தற்கொலை செய்துகொண்டாள்.

இன்றைக்கு நாங்கள் எங்கள் குடும்பங்களைக் கொன்றவர்களுடன் சேர்ந்து வாழும்படி கேட்கப்பட்டுள் ளோம். அவர்கள், மன்னிப்புக் கேட் கிறார்கள். எனவே, அவர்கள் இனி மேலும் இப்படிச் செய்யமாட்டார் கள் என எங்களுக்குக் கூறப்பட் டுள்ளது; சிலர் இதனை நம்பு கிறார்கள். ஆனால், நான் இதை நம்பவில்லை என்கிறாள் மடலேனா.

இனப்படுகொலை நடந்து சில வருடங்களின் பின்பு நான் அந்த பிராந்தியத்திற்குப் புதிதாக நியமிக் கப்பட்ட, வழக்குத் தொடுப்பவரான தர்சிஸ்செயுடன் கிபுஜேயே பிரதேசத் தினூடாகப் பயணம் செய்திருந்தேன். தர்சிஸ்சேயும் அங்கவீனப்படுத்தப் பட்டு அநாதையாக்கப்பட்ட சிறுவன் ஒருவனைத் தத்தெடுத்திருந்தார். ஹூட்டு இன பயங்கரவாதிகள் அந் தச் சிறுவனின் கைகளை வெட்டி அங்கவீனப்படுத்தியிருந்தனர்.

வருடங்களின் போக்கில் வழக்குத் தொடுப்பவராக இருந்த தர்சிஸ்செய், நீதிபதியாகிப் பின் தலைமை நீதிபதி யாகித் தற்போது நுவாண்டாவின் நீதி அமைச்சராகி இருந்தார். இப்போது அவருக்கு [illegible] ஒன்று உள்ளது. இனப்படுகொலை யில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப் பட்ட 150 ஆயிரம் ஹூட்டுக்கள் றுவாண்டாவின் சிறைகளை நிரப்பி யிருந்தனர்.

இனப்படுகொலையில் இருந்து தப்பியவர்கள் தங்களது குடும்பங் களுக்கு இழைக்கப்பட்ட அநியாயத் துக்கு நீதிகோரி இருந்தனர். ஆனால், அரசாங்கத்திடம் குற்றம் சாட்டப் பட்டவர்களை விசாரித்துத் தண்டனை அளிப்பதற்குப் போதுமான நீதிபதி களோ நீதிமன்றங்களோ சட்டத்தரணி களோ இருக்கவில்லை.

முறையான விசாரணை இன்றி ஒருவரைத் தடுத்துவைப்பதும் முடி யாது. அதேவேளை, ஒருவர் புரிந்த குற்றங்களுக்கு தண்டனை அளிக்கா மல், அவரை விடுவிப்பதும் முடியாது. இந்த முரணுக்குள் அரசு சிக்கிக் கொண்டது. இரண்டிலும் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்தாலும் அது இனப்படுகொலையின் பின்னான விளைவுகளை இன்னமும் மோச மாக்கிவிடும் என்பதை அரசு உணர்ந்து கொண்டது.

இந்த நிலையில் றுவாண்டாவின் தற்போதைய ஜனாதிபதியான காகமே, ஹூட்டு அல்லது துற்சிஸ் என்கின்ற அடையாளங்களைச் சாராத ஒரு புதிய அடையாளத்தை உருவாக்க வேண்டும் என்று விரும்பினார். இந்த விருப் பத்தை நிறைவேற்றுவதற்காக றுவாண் டாவின் மரபுவழியான நீதிமுறை ஒன்றைக் கண்டுபிடித்து அதனை அறிமுகப்படுத்தினார். அது ககாகா என அழைக்கப்படுவதாகும். அதன் படிக்கு உண்மையைப் பேசுதல், நல் லிணக்கத்தை ஏற்படுத்தல் என்ற இரு கருத்தாக்கங்களின் கலவையை முதன் மைப்படுத்துகின்ற- உள்ளூர் மட்டத் தில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டன.

இந்தப்பொறிமுறை ககாகா என அழைக்கப்பட்டது.

இப்பொறிமுறையில் குற்றவாளி களைக் குற்றத்தை ஒப்புக்கொள்ளச் செய்வது பெரும் சவாலாக இருந்தது. பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களது அன்புக்குரியவர்கள் எங்கு எப்படிக் கொல்லப்பட்டார்கள்; எங்கு புதைக் கப்பட்டு இருக்கிறார்கள் என்பதை அறிவிப்பது தேவையாக இருந்தது. குற்றம் செய்தவர்களின் வாயாலேயே அதனை ஒப்புவிக்க செய்வது தேவை யாக இருந்தது. அதுமட்டுமல்ல நாட் டுக்கு வெளியே வசிக்கும் ஹூட்டு இனத் தீவிரவாதிகளினதும் ஆதர [illegible]- இங்கு இனப்படு கொலை ஒன்று நிகழவே இல்லை என்ற பிரசாரத்தினையும் நிலைப் பாட்டையும் முறியடிப்பதற்கும் இது தேவையாக இருந்தது.

ககாகா நடைமுறைக்கு வந்ததும் அரசு இவ்விடயத்தில் தேவாலயத்தின் உதவியைப் பெற்றுக்கொள்ளத் தலைப்பட்டது. மதகுருக்கள் வேதாக மத்தில் சொல்லப்படுகிற பாவமன் னிப்புக் கோரலையும் மன்னித் தலையும் மிகவலுவாக முதன்மைப் படுத்தித் தேவாலயங்களில் பிரசா ரத்தில் ஈடுபட்டனர்.

சொர்க்கம், நரகம், செய்த பாவச் செயலுக்கான தண்டனைகள் மற்றும் அதன் விளைவுகள் பற்றி அங்கு பேசப்படத் தொடங்கியபோது மக்களும் பேசத் தொடங்கினர் என தர்சிஸ்சே கூறினார்.

சிலர் தாமாக முன்வந்து தாம் யார்யாரை எல்லாம் கொலை செய்தனர் என்பது தொடங்கி, அவர்கள் எங்கு புதைக்கப்பட் டிருக்கிறார் என்பதுவரை சொல் லத் தொடங்கினர். இதனைத் தொடர்ந்து மூடப்பட்டிருந்த இனப் படுகொலை தொடர்பான தகவல் களின் கதவுகள் திறந்துகொண்டன.

நாடு முழுவதும் உள்ள சமூகங் களுக்கிடையில் இருந்து 250ஆயிரம் சிவில் நீதிபதிகள் தெரிவு செய்யப் பட்டனர். விரும்பிய ஒவ்வொரு வரும் அந்த நீதிபதிகளின் முன்னால் தாங்கள் விரும்பியவர்களுக்கு ஆதர வாகவோ எதிராகவோ வாதாட அனுமதிக்கப்பட்டனர்.

மேலும், குற்றம் சாட்டப்பட்ட வர்கள் தங்களது குற்றங்களை ஒப்புக்கொள்ள ஊக்கிவிக்கப்பட்ட துடன், அவர்கள் தங்களுடன் இணைந்து குற்றங்களில் ஈடுபட்ட வர்கள் செய்த குற்றங்களை வெளிப் படுத்தினால், தண்டனைக் குறைப் பைப் பெறுவதற்கு வழிவகையும் செய்யப்பட்டது. இதன்மூலம் றுவாண்டாவின் மிகமோசமான சிறைகளில் இருந்து இவர்கள், விரைவில் வெளியேறுவதற்கான சாத்தியமும் ஏற்பட்டது. இது குளத்தின் மடையைத் திறந்தது போலாயிற்று. இனப்படுகொலைக் காலத்தில் என்ன என்ன நடந்தன, என்கிற தகவல்கள் பெருமளவில் வெளிவரத் தொடங்கின. யார் என்ன குற்றங்களை எங்கே எப்பொழுது செய்தார்கள் என்ற உண்மை வெளிச் சத்திற்கு வந்தது.

-தேவ அபிரா-
குளோபல் தமிழ் நியூஸ் நெற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13ஆவது அரசியலமைப்பை திருத்துவது முறையானதல்ல

## அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் கொண்டுவரவுள்ள இரண்டு திருத்தங்கள் தொடர்பாக, அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் எமது கட்சியின் அதிருப்தியை வெளியிடவுள்ளோம் என்று ஆளும் கூட்டணியின் பங்காளிக் கட்சியான லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

இதுவரை காலமும் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை நீக்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தாலும் அந்த விடயம் தற்போது வலுவிழந்துள்ளது. எவ்வாறெனினும் 13 ஆவது திருத்தத்தில் அதிகார குறைப்பு செய்வது சரியாகாது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஒன்றுக்கு மேற்பட்ட மாகாண சபைகள் இணைவதைத் தடுக்கவும் நோக்கிலும், மாகாண சபைகள் தொடர்பான சட்டமூலங்களை பாராளுமன்றத்தில் நிறைவேற்றும் போது, அனைத்து மாகாண சபைகளினதும் அங்கீகாரத்தைப் பெற வேண்டும் என்ற பிரிவை 13 ஆவது திருத்தச் சட்டத்திலிருந்து நீக்கவும் அரசாங்கம் அவசர சட்டமூலத்தை கொண்டுவரவுள்ளது.

இது தொடர்பில் விபரிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்ட விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், சட்டமூலம் தொடர்பான பிரேரணையின் நகல் ஆளும் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளுக்கு வழங்கப்பட்டதுடன், அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தின்போது கட்சிகளின் யோசனைகளை முன்வைக்குமாறு ம் கோரப்பட்டுள்ளது.

இந் நிலையில் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தின்போது 13 ஆவது திருத்தத்தில் கொண்டுவரப்படவுள்ள திருத்தங்கள் குறித்து இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது.

அந்த வகையில் அமைச்சர் இந்த விடயம் குறித்து தெரிவிக்கும் போது,

அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள 13 ஆவது திருத்தச் சட்டத்தில் இரண்டு முக்கிய திருத்தங்களை செய்வதற்கு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தீர்மானம் எடுத்துள்ளது.

ஆளும் கூட்டணியின் பங்காளிக் கட்சியான எமது லங்கா சமசமாஜக் கட்சி இந்த திருத்தங்கள் குறித்து இன்று நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தின் போது தனது அதிருப்தியை வெளியிடவுள்ளது.

காரணம் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் அதிகாரக் குறைப்புக்களை செய்வது சரியாக அமையாது. எனவே, அந்த திருத்த யோசனை தொடர்பில் எமது அதிருப்தியை நாங்கள் வெளியிடவுள்ளோம்.

இதுவரை காலமும் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை நீக்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டாலும் அந்த விடயம் தற்போது வலுவிழந்துள்ளது என்றார்.

கடந்த வியாழக்கிழமை இந்தத் திருத்தச் சட்டமூலம் தொடர்பில் அமைச்சரவையில் ஆராயப்பட்ட போது, அமைச்சரும் லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளருமான திஸ்ஸ விதாரண கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கவில்லை. வெளிநாட்டு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த அமைச்சர் திஸ்ஸ விதாரண கடந்த அமைச்சர வைக் கூட்டத்தின் பின்னரே நாடு திரும்பியிருந்தார்.

அந்த வகையில் கட்சி மட்டத்தில் திருத்த யோசனை தொடர்பில் ஆராய்ந்த பின்பே இவ்வாறு அதிருப்தியை வெளியிட தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது இவ்வாறு இருக்க, திருத்தங்கள் குறித்து கருத்து வெளியிட்டிருந்த அரசாங்கத்தின் பிரதம கொறடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன, ஆளும் கூட்டணி என்ற வகையில் தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டால், அதற்கு கூட்டணிக் கட்சிகள் ஆதரவு வழங்கவேண்டும். இது கூட்டணிக் கட்சிகளின் கூட்டுப் பொறுப்பாகும் என்று குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை, ஒற்றையாட்சி முறைமையின் கீழுள்ள இந்த நாட்டில் இரண்டு அரசாங்கங்கள் உருவாகுவதைத் தடுக்கும் நோக்கிலேயே ஒன்றுக்கு மேற்பட்ட மாகாண சபைகள் விரும்பினால் இணைய முடியும் என்ற 13 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரிவை நீக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்தது என்று அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல கடந்த வியாழக்கிழமை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## நான் பதவி துறப்பேன் அமைச்சர் அமரவீர

தன் அமைச்சு மீது குறைகண்டு பிடிக்கப்பட்டால், தான் அமைச்சு பதவியை துறப்பேன் என்று அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

சீரற்ற காலநிலை தொடர்பில் முறையாக எதிர்வுகூறப்படாமை குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதியினால் அண்மையில் குழு வொன்று நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். (அ-2)


## தேரர் மீது தாக்குதல்; 17 பிக்கு மாணவர்கள் கைது

(கொழும்பு)

பகிடிவதைக்கு எதிர்ப்பு தெரிவித்த மாத்தறை சுதர்ஷி பிரிவெனா உயர் கல்லூரி தேரர் ஒருவர் தாக்கப்பட்டுள்ளார். இத்தாக்குதலை கல்லூரியைச் சேர்ந்த பிக்கு மாணவர்கள் 17 பேர் மேற்கொண்டதாக கூறி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி பகிடிவதைக்கு எதிர்ப்பு தெரிவித்த தேரரை, அவர்கள் காலால் உதைத்து, குடையினால் தாக்கினார்கள் என்று மாத்தறை பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

சம்பவத்தில் தாக்குதலுக்கு இலக்கான அக்குரஸ்ஸ தம்மபால தேரர், மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மாத்தறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)





உலக சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் நடத்தப்பட்ட மீள் எழுச்சித் திட்டம் மற்றும் பாடசாலை மட்டத்திலான சித்திரப் போட்டி என்பன நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை யா/ குளமங்கால் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது. இதன் போது சுற்றுச் சூழல் உத்தியோகத்தர், மீள் எழுச்சித் திட்ட வாழ்வாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், கண்காணித்தல் மதிப்பீட்டு உத்தியோகத்தர், நிதி உத்தியோகத்தர், சமூகவலுவூட்டல் உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர். மேற்படி திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு சித்திரப் போட்டி இடம் பெறுவதையும், பாடசாலையின் அதிபருக்கு நிதிவள உத்தியோகத்தரால் மரக்கன்று வழங்கப்படுவதையும் மரக்கன்றுகளை பெற்றுக் கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

## 13ஐ ஒழிக்க 8 பௌத்த அமைப்புக்கள் இணைவு

(கொழும்பு)

13 ஆவது திருத்தச் சட்ட விவகாரத்தில் மாகாணசபை முறைமையை முற்றாக இல்லாதொழிப்பதற்கான புதிய அமைப்பொன்று களத்தில் குதித்துள்ளது.

''மாகாணசபை முறைமையை இல்லாதொழிப்பதற்கான ஒன்றிணைந்த தேசிய அமைப்பு'' என்றஇந்த அமைப்பு கடும்போக்குடைய சிங்கள அமைப்புகளால் உருவாக்கப்பட்டுள்ளது.

8 பௌத்த அமைப்புகளின் கூட்டுடன் உருவாக்கப்பட்டுள்ள இந்த மாகாணசபை முறைமைக்கு எதிரான அமைப்பின் முதலாவதும், விசேடமானதுமான ஊடகவியலாளர் மாநாடொன்று நேற்றுமுன்தினம் காலை கொழும்பில் இடம்பெற்றது.

13ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழிக்கவேண்டும் என்று தனித்தனியே குரல் கொடுத்துவந்த பௌத்த இனவாத அமைப்புகள், தற்போது 13 விவகாரத்தால் நாட்டில் ஏற்பட்டுள்ள சர்ச்சை நிலையை சாதகமாகக்கொண்டு அதை முற்றாக இல்லாதொழிக்கவேண்டும் என்று ஓரணியில் திரண்டுள்ளன.

இதற்கமைய அகில இலங்கை பௌத்த சம்மேளனம், தேசிய புத்திஜீவிகள் சபை, தேசிய பிக்குகள் சம்மேளனம், பொதுபலசேனா, சிஹலராவய, தர்மவிஜே அமைப்பு, தேசப் பற்றுள்ள தேசிய இயக்கம், மௌபிம அமைப்பு முதலான 8 பௌத்த அமைப்புகளே இந்த மாகாணசபை முறைமையை இல்லாதொழிப்பதற்கான ஒன்றிணைந்த தேசிய அமைப்பில் அங்கம் வகிக்கின்றன.

13ஆவது திருத்தச் சட்டத்தைப் பாதுகாப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக மக்கள் முன்னணி, நவ சமசமாஜக் கட்சி, ஐக்கிய சோஷலிச கட்சி, தேசிய ஐக்கிய முன்னணி முதலான கட்சிகள் கூட்டிணைந்து அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவதற்கான இயக்கம் என்ற ஒரு இயக்கம் இயங்கிவரும் நிலையில், 13 ஐ எதிர்த்து பௌத்த அமைப்புகளின் கூட்டணியொன்று களத்தில் இறங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## 35 இலட்சம் ரூபா செலவில் வைத்தியசாலை நிர்மாணிப்பு

(யாழ்ப்பாணம்)

35 இலட்சம் ரூபா செலவில் நயினாதீவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஆயுர்வேத வைத்தியசாலையை நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த சுதேச வைத்தியத்துறை அமைச்சர் சாலிந்த திஸாநாயக்க மற்றும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

நயினாதீவிலுள்ள வேலணை பிரதேச சபையின் உப அலுவலக வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட இந்த ஆயுர்வேத வைத்தியசாலையில் போசனை நிலையமும் அமைக்கப்பட்டுள்ளது.

முன்னதாக நினைவுக்கல் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து புதிய கட்டடத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சகிதம் அமைச்சர் சாலிந்த திஸாநாயக்க





சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்து மக்கள் பயன்பாட்டிற்காக கையளித்தார்.

அத்துடன், சுதேச வைத்தியத்திற்கான உபகரணங்களும், மருந்துப் பொருட்களும் வைத்தியசாலை சமூகத்திடம் கையளிக்கப்பட்டதுடன் வைத்தியசேவையையும் அமைச்சர்கள் ஆரம்பித்து வைத்தனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வழிகாட்டலுக்கு அமைவாகவும், சுதேச வைத்தியத்துறை அமைச்சரின் ஆலோசனைக்கு அமைவாகவும், கடற்படையினரின் ஆதரவிலும் நயினாதீவு தேசிய வைத்திய முறைகளை மேம்படுத்தும் நோக்கில் 35 இலட்சம் ரூபா செலவில் மேற்படி கட்டடம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நிகழ்வில் சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் லலித் கன்னங்கரா, வடபிராந்திய கடற்படைத் தளபதி ரியல் அட்மிரல் சிரந்த உடவத்த, வேலணை பிரதேச சபைத் தவிசாளர் சிவராசா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ-2)

## பல்கலை. மாணவன் மீது தாக்குதல்

மட்டக்களப்பு கிழக்குப் பல்கலைக் கழகத்தின் கல்லடி சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கை நெறி மாணவன் இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டுள்ளார்.

கிழக்குப் பல்கலைக்கழக அழகியல் கற்கைநெறி 3 ஆம் வருடமாணவன் மீது நேற்றுமுன்தினமிரவு கல்லடி பிரதேசத்தில் வைத்து இனந்தெரியாத நபர்கள் சிலர் தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளதாகவும் காயங்களுக்குள்ளான மாணவன் தற்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சக மாணவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், தாக்குதலுக்கு இலக்கான மாணவன் இன்றைய தினம் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கல்லடி சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைநெறி மாணவர் ஒன்றியத் தேர்தலில் தலைமை வேட்பாளராக போட்டியிடவிருப்பதாகவும் இதனடிப்படையில் மாணவர்களுக்கு இடையே ஏற்பட்ட முன்விரோதம் காரணமாகவே இவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்க லாம் எனவும் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சி திட்டம், வடக்கின் துரித மீட்சி திட்டம் ஆகியவற்றினூடாக மாணவர்கள் இடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சுற்றாடல் தின சித்திர போட்டி வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட மீள் எழுச்சி திட்டத்தின் மேலதிக திட்ட பணிப்பாளர் வி.பீரிஸ், பாடசாலை அதிபர் எம்.எஸ்.பத்மநாதன், பிரதித் திட்டப் பணிப்பாளர் டி.ஏ.டி. ரஞ்சித் உட்பட அதிதிகள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்கள் போட்டியில் பங்கேற்றுள்ளதையும் படங்களில் காணலாம். (படங்கள் :-பூந்தோட்ட செய்தியாளர்)

# முறிப்பு சலோம் நகரில் மருத்துவ முகாம் நாளை

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மருத்துவ வசதிகள் எதுவும் அற்ற முறிப்பு, செல்வா நகர், கோணாவில், ஊற்றுபுலம் ஆகிய கிராமங்களை சேர்ந்த மக்களின் வைத்திய நலன் கருதி தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாண ஆதீனத்தால் மருத்துவ முகாம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இம்மருத்துவ முகாம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை முறிப்பு சலோம் நகர் திருச்சபை ஆலய மண்டபத்தில் (பாற்பண்ணை) நடைபெறவுள்ளது.

இதில் டாக்டர் தயாழினி தியாகராசா தலைமையிலான வைத்தியக்குழுவின் சகல நோய்களுக்குமான வெளி நோயாளர் பிரிவுக்கான சகல சிகிச்சையும் வழங்கவுள்ளனர்.

இவ்வைத்திய முகாமில் இக்கிராம மக்களை கலந்து கொண்டு பயன் பெறுமாறு வைத்திய சேவை ஏற்பாட்டாளர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-84)

# ஆரம்ப சுகாதார கட்டட நிர்மாணம் இடை நிறுத்தம்

## மக்கள் விசனம்

(ஆனையிறவு)

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் உள்ள குமரபுரம் கிராம சேவையாளர் பிரிவில் நிர்மாணிக்கப்பட்டு வரும் ஆரம்பசுகாதாரநிலைய வேலைகள் பூர்த்தியாகாது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த ஆரம்ப சுகாதார நிலைய நிர்மாண வேலைகள் ஆமை வேகத்திலேயே இடம் பெற்று வந்தன.

தற்பொழுது ஒரு மாதத்திற்கு முன் அந்நிர்மாண வேலைகள் முற்றாக இடைநிறுத்தப்பட்டு விட்டன.

எனவே துறைசார்ந்த அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுத்து நிர்மாண வேலைகள் துரிதப்படுத்த வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-264)

# மாற்றுவலுவுள்ளோருக்கு மருத்துவ பரிசோதனை

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் வாகனம் ஓடக்கூடிய மாற்றுவலுவுள்ளோருக்கு சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொடுப்பதற்கான மருத்துவப் பரிசோதனை எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு கரைச்சி, கண்டாவளை, பளை, பூநகரி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவு ஊடாக விண்ணப்பித்தவர்கள் குறித்த தினத்தில் சமுகமளிக்குமாறு மாவட்டச் செயலக சமூக சேவைகள் அலுவலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2-254)

# ஆரம்ப பிரிவுக்கு ஆசிரியர்கள் இல்லை

## பெற்றோர் விசனம்

(றெட்பானா)

முல்லைத்தீவு கல்வி வலயத்திற்குட்பட்ட மு/பாரதி வித்தியாலய ஆரம்பக்கல்வி மாணவர்களின் கல்வி நிலை பாதிப்படைந்துள்ளதாக பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, இப்பாடசாலை கடந்த சில மாதங்களாக நிரந்தர அதிபர் இன்றி இயங்கி வருவதுடன் ஆரம்ப கல்வி மாணவர்களுக்கான ஆசிரியர்கள் இன்றியும் காணப்படுகின்றது. இதனால் மாணவர்கள் அனைவரையும் முழுமையாக கவனிக்க முடியாத நிலையுள்ளது.

இந்த நிலை தொடருமானால் சிறார்களின் கல்வியில் அது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என பெற்றோர்கள் தெரிவித்து வரு கின்றனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அசமந்தப் போக்கினாலேயே தொடர்ந்து இந்நிலை நீடிப்பதாக பல குறைபாடுகளும் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

எனவே இப்பாடசாலையில் நிலவும் அதிபர்கள் குறைபாட்டையும் வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு கல்வி அதிகாரிகள் முன்வரவேண்டும் என்பதே இம்மக்களின் மேலான வேண்டுகோளாகவுள்ளது. (அ-3-260)

# வாகன விபத்தில் ஊழியர் காயம்

(கனகபுரம்)

வடிவாகனம் -மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை பெண் ஊழியர் ஒருவர் படுகாயமடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். இச்சம்பவம் நேற்றுக் காலை 6.55 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.





சம்பவம் தொடர்பில் தெரிய வருவது, முறிகண்டியில் இருந்து தனது கடமைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலைக்கு சென்று கொண்டிருந்த குறித்த பெண் வைத்திய சாலைக்குள் செல்வதற்காக மோட்டார் சைக்கிளை திருப்பிய வேளை பின்னால் வந்த வடிவாகனம் மோதியுள்ளது.

இச்சம்பவத்தில் வசந்தபுரம் முறிகண்டியை சேர்ந்த விக்கினேஸ்வரராசா பத்மேஸ்வரி (வயது35) என்பவரே படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகிறார்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-3-259)

# இராஜகோபுரம் அமைப்பதற்கு நிதியுதவி கோரப்பட்டுள்ளது



(சிவநகர்)

கிளிநொச்சி கந்தசுவாமி தேவஸ்தான இராஜகோபுர அமைப்பு பணிகள் மிக மும்முரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இத் தேவஸ்தானத்தில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

மேற்படி தேவஸ்தான இராஜ கோபுர அமைப்பு திருப்பணிக்கு நிதி உதவிகளை வழங்க விரும்புவோர் மக்கள் வங்கியில் திறக்கப்பட்டுள்ள இராஜகோபுர கணக்கு இலக்கமான 048200110066995 என்ற கணக்கிலக்கத்தில் வைப்பிலிட முடியும். பொருள் உதவிகளை வழங்க ஆலய நிர்வாகத்திடம் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ-5-254)

# மோ. சைக்கிள் விபத்தில் நபர் படுகாயம்

ஹயஸ்வாகனம் -மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் படுகாயமடைந்து கிளிநொச்சி மா வட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை 11.30 மணியளவில் பரந்தனில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, குறித்த நபர் யாழ்ப்பாணத்தில் இருந்து நெடுங்கேணி நோக்கி பயணித்துக் கொண்டிருக்கையில் ஹயஸ் வாகனத்துடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானார்.

இச்சம்பவத்தில் நெடுங்கேணியை சேர்ந்த பொன்னையா வேலாயுதம் (வயது 63) என்ற நபரே படுகாயமடைந்து அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-3-259)

# 7.2 மில்லியன் ரூபா செலவில் கமநல சேவை நிலையம்

## கிளிநொச்சியில் திறந்து வைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அக்கராயன்குளம் மற்றும் பளை பிரதேச கமநல சேவை நிலைய அலுவலகங்கள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் விரைவில் அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். நாம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய இதற்கான உத்தரவாதத்தை பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் சந்திரசேன வழங்கியுள்ளார் என பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த 8 ஆம் திகதி சனிக்கிழமை பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 7.2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் புனரமைக்கப்பட்ட கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள கமநல சேவைகள் நிலைய அலுவலகத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டம் விவசாய மாவட்டம் என்ற வகையில் இங்கு விவசாய நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் பொருட்டு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மீள்குடியேறியபோது ஒரு மண்வெட்டிகூட இல்லாமல் மீள்குடியேறிய விவசாயிகளின் வாழ்வில் இன்று பெரும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இரண்டு சக்கர உழவு இயந்திரங்கள், நான்கு சக்கர உழவு இயந்திரங்கள், நீர் இறைக்கும் இயந்திரம் என மாவட்ட விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்தும் வகையில் அரசினாலும் அரச சார்பற்ற நிறுவனங்களினாலும் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன என்றார். (அ-2)

# மாதாந்த ஒன்றுகூடலும் ஆதரவுக்குழு கலந்துரையாடலும்

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு வலய பாடசாலைகளில் ஆலோசனை வழிகாட்டல் சேவையில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கான மாதாந்த ஒன்று கூடலும் சகபாடி ஆதரவுக்குழு கலந்துரையாடலும் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு வவுனியா தெற்கு வலயக்கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.அன்ரன் சோமராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் ஒன்றுகூடலில் வழிகாட்டுநர்களாக யாழ்ப்பாணம் சட்ட வைத்திய அதிகாரி எஸ்.சிவரூபன், வடமாகாண உள சமூக வள நிலைய உதவி முகாமையாளர் உதயகலா, வவுனியா தெற்கு வலய தொழில் வழிகாட்டல் அதிகாரி திருமதி நந்தினி கிறேமியர், ஆலோசனை வழிகாட்டல் ஆசிரிய ஆலோசகர் ஆ.சுபாஸ்கரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-3-266)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ நலன்புரி குழுவொன்றை அமையுங்கள்

## கைதிகளின் உறவினர்கள் கூட்டமைப்புக்கு பகிரங்க மடல்

**சிறைச்சாலைகளில் பல வருடங்களாக எவ்விதமான விசாரணைகளுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் சார்பாக அவர்களுடைய பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு பகிரங்க கடிதமொன்றை எழுதியுள்ளனர். தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுத் தலைவர் இரா.சம்பந்தனுக்கு அவர்களால் இந்த கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,**

கடந்த மூன்று தசாப்த காலங்களுக்கு மேலாக நடைபெற்ற கொடிய யுத்தத்தில் வடக்கு, கிழக்கை சேர்ந்த தமிழ்மக்களாகியநாம்சொல்லொணா துன்பங்களையும் பாதிப்புக் களையும் இழப்புக்களையும் அடைந்து ஏதுமற்ற ஏதிலிகளாய் நடைபிணங்களாக இருக்கின்றோம் என்பது நீங்கள் அறிந்ததேயாகும்.

எதிர்காலம் இருள் என்ற நிலையில் சிறையில் நாம் இருப்பதனால் பொருளாதார ரீதியாக அடிமட்ட பிரச்சி னைகள், பிள்ளைகளின் கல்வி ரீதி யான செலவுகள் மற்றும் வாழ்விடம் என்பவைகளுடன் சட்டத்தரணி தொடர் பான உதவிகள் என பல உதவிகள் தொடர்பாக நாம் பலமுறைகூட்டமைப்பின்கவனத்திற்கு கொண்டு வந்திருக்கின்றோம்.

இவ்விடயம் தொடர்பாக கூட்டமைப்பு எதுவிதமான முன்னேற்றமான நடவடிக்கைகளையும் இது வரையிலும் மேற்கொள்ளவில்லை.

வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்களாகிய நாம் உங்களிடம் எதிர்பார்த்திருப்பது அரசியல் கைதிகளினுடைய அடிப்படை விடயங்களான குடும்ப நலன் மற்றும் சட்டரீதியான உதவிகளையேயாகும். இது தொடர்பாக கூட்டமைப்பிடம் ஏதாவது திட்டங்கள் உண்டா?

தமிழ் அரசியல் கைதிகளில் திருமணமானவர்களின் எண்ணிக்கை, உடல் பாதிப்பானவர்களின் விபரங்கள் உள்ளிட்ட தரவுகள் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டனவா?

இவ்விடயங்கள் தொடர்பில் தங்களின் அலுவலகங்களில் முறையிடும் போது அதற்கான நிவாரணங்களை பெற்றுக் கொள்ள முடியாததையிட்டுமிக வேதனையாகவுள்ளது.

பல கைதிகளின் பிள்ளைகள் கல்வியை தொடர புத்தகம், பயிற்சி கொப்பிகள், எழுதுகருவிகள் இன்றியும் ஒருவேளை உணவுக்கே கஷ்டப்படும் பொருளாதாரமற்ற நிலையில் கல்வியையும் இடைநிறுத்தியுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சட்டத்தரணிகள் பலர் இருந்தும் கூட எங்களுடைய பிள்ளைகளின் சட்ட நடவடிக்கைக்கு உதவ அவர்கள் ஏன் முன்வரவில்லை?.

தேர்தல் காலங்களில் மட்டும் வாக்குகளை பெற்றுக் கொள்வதில் காட்டுகின்ற அக்கறை இந்த விடயத்தில் கூட்டமைப்பிற்கு இல்லாது போனது ஏன்?

கடந்த கால கசப்பான அரசியல் சூழ்நிலையே இன்று இவர்களின் நீண்ட கால சிறை வாழ்க்கைக்கான காரணமாகும். இதனை நீங்கள் கூட பல சந்தர்ப்பங்களில் தெரிவித்திருக்கின்றீர்கள்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நலன்புரி குழுவொன்றை நியமிக்க வேண்டும். அந்த நலன்புரி குழுவுக்கு உள்ளூர் மற்றும் வெளிநாடுகளிலிருந்து உதவிகள் கிடைக்கும்.

அந்த உதவிகளை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க வேண்டும் என்பதே எங்களுடைய எதிர்பார்ப்பாகும் என்றும் அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கடிதத்தின் பிரதிகள் மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப், நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (அ-2)

# பகிரங்க விவாதத்திற்கு வாருங்கள்

## அருந்திக்க எம்.பியை அழைக்கிறார் எக்னெலிகொடவின் மனைவி

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அருந்திக்க பெர்னாண்டோவை பகிரங்க விவாதத்திற்கு அழைத்துள்ளார்.

பிரான்ஸில் எக்னெலிகொட மறைந்து வாழ்ந்து வருவதாகவும் தான் அவருடன் தொடர்பிலிருப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் அருந்திக்க பெர்னாண்டோ கூறியுள்ளது தொடர்பில் விவாதம் நடத்துவதற்கே அவர் இவ்வாறு பகிரங்கமாக அழைப்பு விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் கடந்த வாரம் அருந்திக்க பெர்னாண்டோ எம்.பி.யின் உரையை கேட்டதன் பின்னர் தான் பாராளுமன்ற உறுப்பினரை தொலைபேசிமூலமாக தொடர்பு கொள்வதற்கு பலமுறை முயன்றதாகவும் அவரது தொலைபேசி தொடர்ந்தும் துண்டிக்கப்பட்டிருந்ததாகவும் திருமதி எக்னெலிகொட தெரிவித்துள்ளார். எக்னெலிகொட பிரான்ஸில் இல்லை என்பதனை பிரான்ஸ் தூதரகம் உறுதி செய்துள்ளதாகவும் அவர் கூறினார்.

பிரகீத் எக்னெலிகொடவை பிரான்ஸில் அருந்திக்க பெர்னாண்டோ அறிமுகம்செய்ததாக கூறப்படும் ஊடகவியலாளர் மஞ்சுள வெடிவர்த்தன தன்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டதாகவும் அருந்திக்க பெர்னாண்டோவின் கூற்று உண்மையானது அல்லவென தன்னிடம் அவரும் கூறியதாகவும் திருமதி எக்னெலிகொட தெரிவித்தார்.

தன் கணவன் காணாமற் போயுள்ளது தொடர்பான சர்ச்சையை எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாட்டிற்கு முன்னர் மழுங்கடிக்கவே அருந்திக்க பெர்னாண்டோ இவ்வாறு கூறினார் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். பாராளுமன்ற உறுப்பினர் எக்னெலிகொடவுக்கும் எனக்கும் எவ்விதமான பிரச்சினையும் இல்லை.எனினும் இவரைப் போன்றவர்கள் எனது பிள்ளைகளின் வாழ்க்கையை அழிக்கின்றனர்.இதனை நான் அனுமதிக்க மாட்டேன் என்றும் அவர் கூறினார். (அ-2)

# இன, மதவாதத்தை தூண்டுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் வகையில் சட்ட திருத்தம்?


இன, மதவாதத்தை தூண்டும் வகையில் செயற்படுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக்கூடிய வாறான சட்ட திருத்தங்கள் செய்யப்படவுள்ளன. பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் இது தொடர்பான சரத்துக்களை சேர்க்க தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இனவாத அல்லது மதவாதத்தின் ஊடாக பிரச்சினைக்களை ஏற்படுத்தும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கக்கூடிய வகையில் சட்ட திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டுமென யோசனைத் திட்டமொன்றை முன்வைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்

இந்த வார அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த உத்தேச பிரரேணை குறித்துகவனம்செலுத்தப்படவுள்ளது.

இன மற்றும் மத ஐக்கியத்தை மேம்படுத்தும் நோக்கில் சில சட்டங்கள் இயற்றப்பட வேண்டுமென உண்மையைக்கண்டறியும்ஆணைக் குழுவின் பரிந்துரைகளில் குறிப்பிடப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-2)

# மணிபல்லவத்தில் மஹோற்சவம்




## இன்று முத்துச்சப்பறம்

### ஏழை முகம் பார்ப்பவளே

சப்த தீவின் நடு நாயகியே
ஆயிரம் கண் கொண்ட திருநாயகியே
பசித்தோர் முகம் பார்க்கும் அமுதேஸ்வரியே
குஞ்சு வரம் கொடுக்கும் நாகபூஷணியே
தாயே ஏழை முகம் பாரம்மா

ச.சிவரூபன்,
காரைநகர்.

### காத்திடுவாய் அன்னையே!

அலைகடல் நடுவினிலே
அழகுடனே வீற்றிருக்கும்
அம்மா நாகபூஷணியே!
அஞ்சு தலை நாகமுனை
அன்புடனே குடைபிடிக்க
அக்கறையுடன் காத்திடுவாய்
அடியவர்கள் எம்மையே!
அல்லல் எம்மை சூழ்ந்திடாமல்
ஆசி தந்து அருள்வாயம்மா
நயினை பதி வாழும்- அம்மா
நாகபூஷணி தாயே!

ம.திபிஜா,
சங்கையூர்

### வினை கடிய வேணுமம்மா

நந்தி முகம் பார்க்க நாகத்தின்
குடை நிழலமர்ந்து
வந்தனை செய்வோருக்கு வரமதனை
ஈய்ந்திடுவாய்
சிந்தனை நின் தனதாக்கி வாழும்
உயிர்களுக்கு
வெந்த துயர் நீக்கி வினை கடிய
வேணுமம்மா

தேசிகன்,
கந்தர்மடம்.

### வேண்டுதலுக்கு செவிசாய் அம்பிகையே!

அருட் பெருங்கருணையினால்
அகிலத்தில் வாழும் உயிர்களுக்கெல்லாம்
அருளை அள்ளி வழங்கும் அம்பிகையே
நம்முடைய வாழ்வில் எமக்குத் தேவையானவற்றை
நாம் கேட்காமலேயே நமக்கு
நாள்தோறும் வழங்குபவள்
அன்னையாம் அம்பிகைத் தாயவளே
கலையாத கல்வியும் குறையாத வயதும்
கபடு வராத நட்பும் சலியாத மனமும்
அன்பகலாத மனைவியும் தவறாத சாந்தமும்
தாழாத கீர்த்தியும் தடைகள் வராத கொடையும்
மாறாத வார்த்தையும் தொலையாத நிதியமும்
துன்பமில்லாத வாழ்வும் வாழ்த்த வாயும்
நினைக்க மட நெஞ்சும்
தாழ்த்த சென்னியும் தந்த தலைவியாக
விளங்கும் அம்பிகையே
எம்முடைய வேண்டுதலுக்கிரங்கி
அருள் புரிந்திடம்மா

வனிதா நகுலேஸ்வரன்,
வடலியடைப்பு,பண்டத்தரிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்சன் மண்டேலா நிலை தொடர்ந்து கவலைக்கிடம்

தென்னாபிரிக்கா முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா உடல் நிலை தொடர்ந்து கவலைக்கிடமாக உள்ளது.

தென்னாபிரிக்காவில் இனவெறிக்கு எதிராக போராடம் நடத்தி நீண்டநாள் சிறைத் தண்டனை அனுபவித் தவர் நெல்சன் மண்டேலா. 1994-99இல் தென்னாபிரிக்காவின் ஜனாதிபதியாக பதவி வகித்தார்.

நுரையீரல் தொற்று காரணமாக சுவாச கோளாறு ஏற்பட்டு கடந்த மார்ச் மாதம் மண்டேலா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். தொடர் சிகிச்சைக்கு பின்பு ஏப்ரல் 6ஆம் திகதி அவர் வீடு திரும்பினார்.

இந்த நிலையில் கடந்த 8 ஆம் திகதி மண்டேலாவிற்கு திடீரென்று மூச்சு திணறல் ஏற்பட்டு பிரிட்டோரியா மெடி கிளினிக் ஹார்ட் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். நேற்று 5ஆவது நாளாக மண்டேலாவிற்கு தீவிர சிகிச்சையளிக்கப்பட்டது. அவரது உடல் நிலை தொடர்நது கவலைக்கிட மாக உள்ளது.



## விரைவில் குணமடைய நாடெங்கும் தொடர் சிறப்புப் பிரார்த்தனைகள்

மண்டேலாவின் மனைவி கிரேஸ் மெக்கேல் வைத்திய சாலையில் உடன் இருந்து கவனித்து வருகிறார்.

தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் சூமா வைத்திய சாலைக்குச் சென்று மண்டேலாவை பார்வையிட்டதுடன் வைத்தியர்களிடம் அவருக்கு அளிகைப்பட்டு வரும் சிகிச்சை விபரங்களை கேட்டறிந்தார்.

வைத்தியசாலையில் மண்டேலாவை பார்வையிட்ட பின்னர் சூமா கூறுகையில், 'மண்டேலாவிற்கு சிகிச்சையளித்து வரும் மருத்துவ குழு மீது மிகுந்த நம்பிகை வைத்துள்ளேன். மண்டேலா உடல் நிலை தொடர்ந்து கவலைக்கிடமாக உள்ளது. இருப்பினும் அவர் அபாய கட்டத்திற்கு போகவில்லை என்றார். மண்டேலா விரைவில் குணமடைய தென்னாபிரிக்க மக்கள் தொடர்ந்து பிரார்ததனைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். கிறிஸ்தவ தேவாலயங்களில் சிறப்பு பிரார்த்தனை நடைபெற்று வருகிறது. அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவும், அவரது மனைவி மிட்செலும் மண்டேலா விரைவில் குணமடைய இறைவனை வேண்டிக் கொள்கிறோம் என்று தெரிவித்துள்ளதாக அமெரிக்க வெள்ளை மாளிகை செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளது.


2 ஆம் உலகப் போரில் பங்காற்றிய இராணுவ வீரர்

## 97 வயதில் டிப்ளோமா

அமெரிக்காவில் இரண்டாம் உலகப்போர் முன்னாள் வீரர் 80 ஆண்டுகளுக்கு பின்னர் டிப்ளோமா பட்டம் பெற்றது பலரையும் ஆச்சரியப்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரின் வடக்கே வாடர்டவுண் பகுதியைச் சேர்ந்தவர் பிரரெடரிக் கிரே (வயது 97), இவர் கடந்த 1934ஆம் ஆண்டு வாட்டர் டவுண் பாடசாலையில் சேர்ந்தார். ஒரு வருடம் கல்வி கற்றார்.

எனினும் குடும்ப பிரச்சினையால் பாடசாலைப் படிப்பை




பாதியில் கைவிட்டார். 1942 ஆம் ஆண்டு, அமெரிக்க இராணுவத்தின் 24ஆவது இன்ஃபான்ட்ரி படைப்பிரிவில் பணியில் சேர்ந்த இவர் இரண்டாம் உலகப்போரில், முக்கிய பங்காற்றிய ஒய்வு பெற்றார். எனினும் அவருடைய ஆசை எப்படியாவது படித்து பட்டம் வாங்கிட வேணடும் என்பதுதான்.

ஓய்வுபெற்ற பின்னர் தனியார் தொழிற்சாலையில் பணியாற்றி வந்தாலும், பாதியில் விட்ட படிப்பை மீண்டும் தொடர்ந்து அதனைப் பூர்த்தி செய்தார். இந்நிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் அவருக்கு பாடசாலை நிர்வாகம் பட்டம் வழங்கி கௌரவித்தது.

இது குறித்து பிரரெட்ரிக் கிரேகூறுகையில்,

80 ஆண்டுகளுக்குபின்னர் தனது ஆசை நிறைவேறிவிட்டது என்றார். 97 வயதிலும் இடைவிடாத முயற்சியால் பட்டம் (டிப்ளோமோ) பெற்றது பலரையும் அதிசயிக்க வைத்துள்ளது என்றார்.

# ஜி-8 மாநாட்டுக்கு எதிராக போராட்டங்கள்

உலகின் எட்டு பணக்கார நாடுகள் இணைந்து ஜி8 (அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா, பிரான்ஸ், மேற்கு ஜேர்மனி, ஜப்பான், கனடா மற்றும் இத்தாலி) மாநாட்டை நடத்துகின்றன.

பொருளாதார, வர்த்தக மேம்பாடுகள் குறித்து நடைபெறும் இந்த மாநாடு எதிர்வரும் 17,18 ஆகிய திகதிகளில் வடக்கு அயர்லாந்தில் உள்ள லோ எர்னே என்ற இடத்தில் நடைபெற உள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் அரசு தரப்பில் நடைபெற்றுக் கொண்டிருக்க, அதனை எதிர்ப்போரின் ஆர்ப்பாட்டங்களும் ஆரம்பித்துள்ளன.

முதலாளித்துவத்திற்கு எதிரான திருவிழா என்று கூறிக்கொண்டு ஜி-8 மாநாட்டினைத் தடை செய்யுமாறு தர்ணாவில் ஈடுபட்ட கும்பல் ஒன்றினை நேற்றுமுன்தினம் பொலிஸார் விரட்டியடித்தனர்.

கலவரங்களை அடக்குவதற்காக சிறப்பு பிரிவினர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள், ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்கியிருந்த இடங்களில் சோதனை இட்டனர். இதில் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாரைத் தாக்கியதற்காகவும், மற்றைய குற்றங்களுக்காகவும் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# சீனாவில் 127 வயதான பெண் காலமானார்

உலகின் வயதான பெண்ணான சீனாவைச் சேர்ந்த லூவோ மெய்ழன் தனது 127ஆவது வயதில் காலமானதாக அவரது குடும்பத்தார் தெரிவித்துள்ளனர்.

சீனாவின் தெற்கு பகுதியில் உள்ள குவாங்சி மாகாணத்தில் இருக்கும் லாங் ஹாங் கிராமத்தைச் சேர்ந்தவர் லூவோ மெய்ழென். சீன அரசு ஆவணங்களின்படி அவர் பிறந்த வருடம் 1885. அப்படி என்றால் அவருக்கு வயது 127. முறைப்படி அவருக்கு தான் உலகில் வயதானவர் என்ற பெருமை கிடைத்திருக்க வேண்டும். ஏனென்றால் உலகின் வயதானவராக தற்போது கருதப்படும் ஜப்பானின் ஜீரோமோன் கிமுராவுக்கு வயது 116 தான்.

லூவோ பிறந்து பல ஆண்டுகள் கழித்து தான் சீனாவின் பிறப்பு திகதிகளை முறையாக பதிவு செய்யும் திட்டம் வந்துள்ளது. அதனால் லூவோவின் வயதை சீன அதிகாரிகள் 127 என்று கூறினாலும் அதை சர்வதேச அதிகாரிகள் அங்கீகரிக்க வில்லை. இந்நிலையில் லூவோ தனது 127ஆவது வயதில் காலமானார். அவருக்கு 5 பிள்ளைகள், ஏராளமான பேரக் குழந்தைகள் உள்ளனர். அவர் தனது 61 ஆவது வயதில் குழந்தை பெற்றதாக அவரது மகன் தெரிவித்தார்.

# பாகிஸ்தான் வான்பரப்பினுள் இந்திய விமானங்கள் அத்துமீறி நுழைந்தன?

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாண வான்வெளியில் இந்திய ஜெட் போர் விமானங்கள் செவ்வாய்க்கிழமை அத்து மீறி நுழைந்ததாக அந்நாட்டின் சிவில் விமானப் போக்குவரத்துத் துறை குற்றஞ்சாட்டியுள்ளது. இதை இந்திய விமானப் படை மறுதுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக பாகிஸ்தானின் சிவில் விமானப் போக்குவரத்துத் துறையை சேர்ந்த அதிகாரி ஒருவர் கூறுகையில்,

இந்திய விமானப் படைக்குச் சொந்தமான 2 ஜெட் போர் விமானங்கள், பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணம் பாக்பத் தன் மாவட்டத்தில் உள்ள ஹெட்சுலேமான்கி என்ற இடம் வரை அத்துமீறி நுழைந்துள்ளன. எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டிலிருந்து 7 கி.மீ. வரை இந்திய விமானங்கள் அத்து மீறி நுழைந்துள்ளன. ஒரு நிமிடம் பாகிஸ்தான் பகுதியில் பறந்த அந்த இரு விமானங்களும், பின்னர் இந்தியப் பகுதிக்கு திரும்பிச் சென்றன. இதைத்தொடர்ந்து சம்பந்தப்பட்ட பகுதிக்கு போர் விமானங்களை பாகிஸ்தான் விமானப் படை அனுப்பி வைத்தது என்றார். இத்தகவலை ஜியோ நியூஸ் தொலைக் காட்சி வெளியிட்டுள்ளது.

ஆனால், இந்தச் சம்பவத்தை மறுத்துள்ள இந்திய விமானப் படை அதிகாரிகள், 'போர் விமானங்கள் எதுவும் பாகிஸ்தான் வான் எல்லைக்குள் அத்துமீறி நுழையவில்லை' என்று தெரிவித்துள்ளனர்.

## 11 பேர் பலி

சீனாவின் கிழக்குப் பகுதியில் ஷங்காய் நகரில், ஒரு வீட்டில் இருந்த காஸ் சிலிண்டர் வெடித்ததில் கட்டடம் சரிந்து விழுந்து 11 பேர் பலியானார்கள். இந்த விபத்தில் சிக்கிய 9 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

## மாட்டெரு விமான எரிபொருளாக...

புதுவித விமானங்கள் வடிவமைப்பு (டிசைனிங்) போட்டி அமெரிக்காவில் உள்ள வாஷிங்டனில் நடைபெற்றது. அதில் பல நாடுகளைச் சேர்ந்த நிபுணர்கள் பங்கேற்று தங்கள் வடிவமைப்புகளை காண்பித்திருந் தனர்.

இதில், அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த பொறியியல் பிரிவு மாணவர்கள் பசு சாண எரிவாயு மூலம் இயங்கும் விமானத்தை வடிவமைத்திருந்தனர். பெற்றோலுக்கு பதிலாக மீதேன் மூலம் இயங்கும்படி தயாரித்து இருந்தனர்.

விமானத்தில் என்ஜினுக்கு அருகே பசு சாணம் கழிவு தாங்கி அமைக்கப்பட்டுள்ளது. அதில் இருந்து மீதேன் தயாராகி விமானத்தை இயக்கும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளது.

மேலும் பிரேசில் நாட்டைச் சேர்ந்தவர்கள் விமான பயணிகளின் உடலில் இருந்து வெளியேறும் வெப்பம் மூலம் இயங்கும் விமானத்தை வடிவமைத்திருந் தனர்.



20 வயது மாணவி ஒருவர் கற்பழித்து கொலை செய்யப்பட்டதை கண்டித்து, கொல்கத்தாவில் பெண்கள் போராட்டம் நடத்தினார்கள். அப்போது ஒரு பெண் தடுப்பை தாண்டி ஆவேசமாக பாய்வதையும், பொலிசார் அவரை சிரமப்பட்டு தடுக்க முயல்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் சுதந்திரத்தோடு பிறக்கிறான். ஆனால் எங்கும் அடிமைத்தளையில் பிணைப்புண்டு கிடக்கிறான்

-ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கூப்பாடுகளும் கோசங்களும் நாட்டில் அழிவைத்தான் தரும்.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடக்குமா? என்ற கேள்வி இப்போது வலுவான நிலையில் உள்ளது.

வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துகின்ற எண்ணம் அரசுக்கு இம்மியும் கிடையாது என்பதில் ஐயுறவுக்கு இடம் இல்லை.

ஆனால், சர்வதேசத்தின் அழுத்தங்கள் காரணமாக, வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த நிர்ப்பந்தம் தவிர்க்கப்படக்கூடியது அல்ல என்றளவில், வடக்குமாகாண சபைத் தேர்தலை நடத்த முற்பட்டாலும்,

மாகாண சபைக்கான அதிகாரங்களை வலுக்குறைத்து விடவேண்டும் என்பதில் அரசும்-சிங்களப் பேரினவாதக்கட்சிகளும் கங்கணம் கட்டி நிற்கின்றன.

வடக்கு மாகாண சபைக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைக் கொடுத்தால், அது தமிழர்களின் கையோங்குவதற்கு வழிவகுக்கும் எனப் பேரினவாதிகள் கடும் பயம் கொள்கின்றனர். எனினும் இவர்களின் பயம் எந்த வித அர்த்தமும் அற்றது.

உண்மையில் இனப் பிரச்சினைக்கு சரியான தீர்வை முன்வைக்காது விட்டால், மீண்டும் ஒரு போராட்டத்தை தமிழ் மக்கள் ஆரம்பித்து விடுவார்கள் என பேரினவாதிகள் பயம் கொள்ள வேண்டும்.

ஆனால் அஞ்சவேண்டியதற்கு அஞ்சாமலும் அஞ்சத்தேவை இல்லாததற்கு அஞ்சுவதுமான பேதமை சிங்களப் பேரினவாதிகளிடம் இருப்பதானது,

இலங்கை அமைதியான நாடு என்ற நிலைக்கு எக்காலத்திலும் வரமுடியாது என்ற அனுமானத்திற்கு வித்திடுகின்றது.

சிலர் நினைக்கிறார்கள் தங்களின் கூப்பாடும் கோசங்களும் தான் இந்த நாட்டின் இறையாண்மைக்கும் ஒற்றுமைக்கும் உதவும் என்று.

ஆனால் நிதர்சனம் வேறாக உள்ளது.

அதாவது பேரினவாதிகளின் கூப்பாடுகளும் கோசங்களும் தான் இந்த நாட்டின் ஒற்றையாட்சிக்கு குந்தகமாக இருக்கின்றது.

இதைப் புரியாமல் புலம்புவதால் ஆபத்தும் அமைதி இன்மையும் தான் மிஞ்சும்.

இதைத் தான் உலகம் நமக்கு கால காலமாகப் புகட்டுகின்றது.

இதைப் புரிந்து கொள்வதில் இருக்கக்கூடிய பஞ்சத்தனங்களும் கஞ்சத்தனங்களும் மேடையேறி கூத்தாடுகின்றன.

என்ன செய்வது?

இலங்கையில் வன்செயலுக்கும் இனமோதலுக்கும் குறைவே இல்லை என்று விதி எழுதப்பட்டு இருந்தால்,

பொது பல சேனா, ஹெல உறுமய போன்ற கட்சிகள் கத்தத்தான் செய்யும்.

அந்தக் கத்தல்களுக்கு உள்ளார்ந்தமாக ஆதரவு கொடுத்தால் அதுவும் அழிவுக்கு என்றே உணருமின்.

# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மாநாட்டில் கலந்து கொள்ளப்போவதில்லை

## யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் இன்றும் நாளையும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மீளிணக்கப்பாடு தேசிய மாநாட்டில் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் பங்கு கொள்வதில்லை என முடிபெடுத்துள்ளது என யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் எ.இராசகுமார் தெரிவித்துள்ளார்.

இதில் பங்குகொள்ளாமைக்கான காரணத்தை யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தெரிவிக்கையில்,

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்திடமோ விரிவுரையாளர்களுடனோ கலந்தாலோசிக்காது யாழ்.பல்கலைக்கழகம் இம் மாநாட்டில் கலந்துகொள்ளும் என நம்பிக்கை வெளியிட்டது.

அத்துடன் எம்முடைய முடிபு கோரப்படாமலே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இதனை வெளியிட்டிருந்தது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இத்தேசிய மாநாட்டின் நோக்கம் பற்றி தெரிவிக்கையில்,

நாட்டில் பயங்கரவாதம் வேரறுக்கப்பட்டு விட்டது. ஆயுதம் தாங்கியவர்கள் அழிக்கப்பட்டு விட்டார்கள்.

நாம் மீள்கட்டுமானம் தொடர்பில் தற்போதைய சமாதான சூழலில் சிந்திக்க தலைப்பட்டுள்ளோம் என தெரிவித்திருந்தனர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு கூறுவது போல் இங்கு பயங்கரவாதம் இடம்பெறவில்லை. அவர்கள் கூறுவதுபோல் பயங்கரவாதம் தோற்கடிக்கப்படவுமில்லை. இங்கு விடுதலைப்போராட்டமே நடைபெற்றது அதுதான் தற்போது முறியடிக்கப்பட்டுள்ளது.

கல்வியியலாளர்கள் விடுதலை போராட்டமொன்றினை பயங்கரவாதம் எனச் சித்திரிப்பது ஏற்றுக்கொள்ள முடியாததாகும். அரசு மீள் கட்டுமானம் தொடர்பில், போர்முடிபுற்று 4 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

மீள்குடியேற்றம், வாக்காளர் பதிவு போன்ற போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வியல் நடவடிக்கைகளில் இராணுவத்தின் தலையீடு தற்போதும் காணப்படுகின்ற நிலையில், மீள்கட்டுமானம் தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எதனைப் பேசப்போகிறது.

இவ்வாறான கெடுபிடிகளுக்கு மத்தியில் நாம் மீள்கட்டுமானம் தொடர்பில் யோசிக்கமுடியாது.

யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தை பகடைக்காயாக்கி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தன்னிச்சையாக எடுக்கும் முடிபுக்கு எம்முடைய ஆதரவையும் பெற்றுக்கொள்ள முயற்சிக்கின்றது.

எமது சமூகத்திற்காக கடமையாற்றுபவர்கள், எமது சமூகத்திற்கு தீங்கு விளைவிக்கும் எவ்வித மாநாட்டிலும் நாம் கலந்துகொள்ளமாட்டோம்.

அந்தவகையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இம்மாநாட்டை யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் முற்றாக நிராகரிக்கின்றது.

மேலும் இம்மாநாட்டில் மூவின உணவு பரிமாறப்பட்டு ஒரு களியாட்ட நிகழ்வு போன்றே ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. எனவே இதில் நாம் கலந்து கொள்ளவேண்டுமென்ற அவசியமில்லை.

எமது இம்முடிபை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பியுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-4)

## சத்திய தரிசனம்



உன்னுள் புதைந்துள்ள தெய்வீகத்தை வெளிக்கொண்டு வருவதைத்தவிர வேறு எந்தக் குறிக்கோளும் இல்லை என்பதை நீ திடமாக உணர்ந்து கொள். இது போன்ற நல்ல வாய்ப்பு ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் என்று எண்ணமுடியாது. உனக்கு இந்த அரிய வாய்ப்பு கிடைத்திருக்கிறது. பலநூறுகோடி மக்கள் கொண்ட இந்த உலகில் எத்தனை பேருக்கு இந்த இடத்தில் தெய்வீகத்தை உணரும் பாக்கியம் கிடைத்திருக்கிறது? அப்படிப்பட்ட வாய்ப்பு பெற்ற ஆசீர்வதிக்கப்பட்டவர்களில் நீயும் ஒருவன். கடவுளின் அன்புக்கு உட்பட்டவர்களில் ஒருவனாக நீ உன்னை மாற்றிக்கொள்ளத் தயாராகு.

இறைவனது பிம்பம் நிறுவப்பட்டுள்ள இந்தக் கட்டடம் மட்டுமல்லாமல் உயிர்வாழும் ஜீவனது உடலும்கூட கோவிலே. ஏனெனில் இறைவன் தன்னையே அங்கு நிறுவிடச் செய்து தன்னை உணர்ந்து, மரியாதைமிக்க வழிபாட்டினைத் தான் பெறுவதற்காக காத்திருக்கிறார். அந்த அறிந்துகொள்ளுதலானது எல்லையற்ற பேரானந்தத்தினை நமக்கு அளித்திடும். எந்த ஒரு உலகின் பொருட்டு சொத்துக்களையும்விட அதிக அளவிலான எந்தவொரு வெற்றியும் வழங்கக் கூடியதனையும் விட தூய்மையான ஆனந்தத்தைத் தந்திடும். பிரச்சினை யாதெனில் நாம் பணிக்கு சோம்பல்படுகிறோம். பேசி அறிவுரை புகட்டும் வாய்ப்புக்களை நாம் வரவேற்கிறோம். ஆனால் பேச்சு, வெறுமையான வயிற்றை நிரப்பாது. பணி பணி அர்ப்பணிக்கப்பட்ட பணி, அறிவுத்திறன் நிரம்பிய பணி. அதுவே தேவையாகும். இடையறாது பணி செய்திடுங்கள்.


## தங்கம்மா அப்பாக்குட்டியின் ஐந்தாவது குருபூசை தினம்

கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் ஐந்தாவது ஆண்டு குருபூசை தின நிகழ்வுகள் எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9மணிக்கு தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் நடைபெறவுள்ளன.

செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில், வரவேற்புரையை துர்க்கா தேவி ஆலய உப தனாதிகாரி சு.ஏழூர்நாயகம், பிரார்த்தனை உரைகளை துர்க்காதேவி தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ வா.அகிலேஸ்வரக்குருக்கள், சுந்தர ஆஞ்சநேயர் ஆலய ஆதீன கர்த்தா சிவஸ்ரீ. இ.சுந்தரேஸ்வரக் குருக்கள், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய பரமாச்சரிய சுவாமிகள் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

தொடர்ந்து மூத்த சிவாச்சாரியர்களை கௌரவித்தலும், திருவாசகம், திருக்கோவையார் நூல் வெளியீடும் இடம் பெறவுள்ளதுடன் வெளியீட்டுரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் இளைப்பாறிய விரிவுரையாளர் கலாநிதி செ.திரு நாவுக் கரசு ஆற்ற முதற் பிரதியை துர்க்கா தேவி ஆலய உபதலைவர் ச.ஆறுமுகநாதன் பெற்றுக் கொள்ளவுள்ளார். (அ)

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்



## மோட்சம்

ஒருமுறை ஸ்ரீ இரமண பகவானிடம் வந்திருந்த மாது ஒருவர் சுவாமி எனக்கு ஒரு கோரிக்கை இருக்கிறது சொல்லலாமா என்றாள். என்ன வேண்டும் என்றார் பகவான். எனக்கு மோட்சம் வேண்டும் என்றாள். ஓகோ அப்படியா? என்று கேட்டுப் பகவான் சும்மா இருந்தார். ஆம் சுவாமி வேறொன்றும் வேண்டாம். மோட்சம் ஒன்று கொடுத்தால் போதும் என்று திரும்பவும் அந்த அம்மாள் சொன்னாள். பகவான் உதடுகளை மீறிவரும் சிரிப்பை அடக்கிக்கொண்டு சரி சரி நல்லதுதான் என்றார். எப்போதோ கொடுக்கிறேன் என்றால் போதாது. இப்போதே கொடுக்கவேண்டும் என்றாளவள். சரியாகப்போச்சு என்றார் பகவான். கொடுக்கிறீர்களா? போய் வருகிறேன் என்று சொன்னாள் அம்மாது. உம் உம் என்று பதிலளித்தார் பகவான்.

அவள் வாயிலைத் தாண்டியவுடனே பகவான் உரக்கச் சிரித்துக்கொண்டே எங்களைப் பார்த்து மோட்சம் ஒன்று கொடுத்தால் போதுமாம். வேறொன்றும் வேண்டாமாம் என்றார். என் பக்கத்தில் இருந்த சுப்புலட்சுமி அம்மாள் தொடர்ந்து, நாங்களும் அதற்கே வந்திருக்கிறோம். வேறொன்றும் வேண்டாம். மோட்சம் கொடுத்தால் போதும் என்று மெதுவாகச் சொன்னாள். ஓகோ அப்படியா? வேறெதுவும் வேண்டாம் என்று எல்லாவற்றையும் விட்டுவிட்டால் மிஞ்சியது மோட்சம்தான். ஒருவர் கொடுப்பானேன்? எப்போதும் இருப்பது தானே? என்றார் பகவான்.

அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது. பகவான்தான் எங்களுக்கு மோட்சம் கொடுக்கவேண்டும் என்று சொல்லிவிட்டு சுப்புலட்சுமி அம்மாள் போய்விட்டாள்.

பக்கத்திலிருந்த தொண்டர்களிடம் பகவான் என்ன ஓய்! இவர்களுக்கு மோட்சம் கொடுக்கணேடுமாம். அதென்ன மூட்டையா, முடிச்சா கட்டிக் கொடுப்பதற்கு? வேறு ஒன்றும் கோரமாட்டார்களாம் ஓய்! மோட்சம் ஒன்று கொடுத்தால் போதுமாம். அது மாத்திரம் கோரிக்கையில்லை போலிருக்கு. இருப்பவற்றையெல்லாம் விட்டுவிட்டால் என்ன மிஞ்சுகிறதோ அதுதான் மோட்சம். அவற்றையெல்லாம் நீக்குவதற்குத்தான் சாதனை செய்யணும் என்றார் பகவான்.

நன்றி: சிவதொண்டன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## ஐ.பி.எல்.போட்டியில் சர்ச்சைகளைத் தவிர்க்க

# புதிய தீர்மானங்கள்

ஐ.பி.எல் இல் நடைபெற்ற சூதாட்ட சர்ச்சையால் இந்தியக் கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ) மீது பல்வேறுபட்ட குற்றச்சாட்டுகள் எழுந்தன. இதனால் பி.சி.சி.ஐ.யின் தலைவர் சீனிவாசன் ஒதுங்க புதிய தலைவர் டால்மியா பொறுப்புக் களை ஏற்றுக் கொண்டார்.

டால்மியா கிரிக்கெட் சபையை பொறுப்பேற்றபின் டில்லியில் நடைபெற்ற கூட்டத்தில் 12 முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. அவையாவன,

1. போட்டிகளின்போது ரசிகர்களை உற்சாகப் படுத்தும் சியர் லீடர்ஸ் (மங்கை யர்களின் நடனம்). போட்டிக்குப் பின்பு இரவுவிருந்து ஆகியவற்றுக்கு அனுமதியில்லை.
2. வீரர்கள், அணியின் உரிமையாளர்கள் ஆகியோர் நடத்தை விதிமுறைகளை கடுமையாகப் பின்பற்ற வேண்டும்.
3. போட்டியின்போது வீரர்கள் அமர்ந்துள்ள இடத்துக்கும், ஓய்வறைக்கும் செல்வதற்கு வீரர்கள் மற்றும் அணி உரிமையாளர்க ளுக்குக் கட்டுப்பாடு.
4. ஐபிஎல் போட்டி தொடங்கும் முன் வீரர் கள், உரிமையாளர்கள் ஆகியோர் தங்க ளது செல்போன் எண்கள் குறித்த தகவல் களை பிசிசிஐயிடம் அளிக்கவேண்டும்.
5. மைதானம் மற்றும் வீரர்கள் தங்கும் ஹோட்டல் அறை ஆகிய இடங்களில் ஊழல் தடுப்பு பாதுகாப்பு அமைப்பு அதி காரிகள் அதிகம்பேரை நியமிப்பது.



### மாசுக்களை களைந்து கிரிக்.சபையை புனிதமாக்குகிறார் டால்மியா

6. போட்டியின்போது மைதானத்தில் செல்போன் செயலிழப்புக் கருவிகளைப் பொருத்துவது.
7. ஆலோசனைகள் பெறவும், விரிவான செயற்றிட்டம் தயாரிப்பது தொடர்பாகவும் அனைத்து அணிகளின் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்ட வேண்டும்.
8. தேசிய தேர்வுக் குழுவில் இடம் பெற்றுள்ள நபர்கள் ஐபிஎல் அணியில் எந்தப் பதவி யும் வகிக்கக்கூடாது.
9. வீரர்கள் அனைவரும் தங்களது பண பரிவர்த்தனை விபரங்களை அணி உரிமை யாளர்களிடம் அளிக்கவேண்டும்.
10. வீரர்கள் மற்றும் உதவியாளர்க ளுக் கான ஊதியம் மற்றும் ஒப்பந்தங்களை அணி உரிமையாளர்கள் சமர்ப்பிக்க வேண்டும்.
11. மைக்ரோபோன் மற்றும் காதில் அணிந்து பேசும் கருவி உள்ளிட்டவற்றை வீரர்கள் பயன்படுத்தக் கூடாது.
12. பாதுகாப்பு கட்டுப்பாடு கொள்கை களை விரைவில் உருவாக்குவது உள்ளிட்ட திட்டங்களை பிசிசிஐ அறிவித்துள்ளது.

## உதைபந்திலும் சூதாட்டம்; நடுவருக்கு 6மோதச் சிறை!

உதைபந்தாட்டப்போட்டியில் சூதாட்டத்தில் ஈடுபட்ட லெபனான் நாட்டைச் சேர்ந்த நடுவர் அலி சபாக்குக்கு 6 மாதம் சிறைத் தண்டனை விதித்து சிங்கப்பூர் நீதிமன்றம் தீர்ப்பளித் துள்ளது. அலி சபாக் சர்வதேச காற்பந்து கூட் டமைப்பின் அங்கீகாரம் பெற்ற நடுவராகக் கடமையாற்றுகிறார்.

கடந்த ஏப்ரல் மாதம் ஏஎஃப்சி கிண்ணக் காற்பந்து போட்டி சிங்கப்பூரில் நடைபெற்றது. இதில் இந்தியாவின் ஈஸ்ட் பெங்கால்-தம் பின் ரோவர்ஸ் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் நடுவர் அலி சபாக், லைன் மேன் கள் அலி ஈத், அப்துல்லா தலீப் ஆகி யோர் சூதாட்டம் செய்ய உடன்பட்டதாக பொலிஸா ருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து போட டிக்கு முன்பாக அவர்கள் கைது செய்யப்பட்ட னர். வேறு நடுவர், லைன் மேனை வைத்து போட்டி நடத்தப்பட்டது.

விசாரணையில் அந்த மூவரும், சூதாட்



டத் தரகர்களுடன் தொடர்பு இருப்பதையும், சூதாட்டம் செய்ய உடன்பட்டதையும் ஒப்புச் கொண்டனர். இந்த வழக்கில் நடுவர் அலி சபாக்குக்கு 6 மாத சிறைத் தண்டனை விதித்து சிங்கப்பூர் நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை தீர்ப்பளித்தது. லைன்மேன்கள் இருவருக் கும் ஏற்கனவே 6 மாதம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுவிட்டது.

## பாகிஸ்தான் – மே.தீவுகளின் ஆட்டம் அமெரிக்காவில்

பாகிஸ்தான் - மேற்கிந்தியத்தீவுகள் பங்கேற்கும் இரு 20 ஓவர் கிரிக்கெட் போட்டியை அமெரிக்காவில் நடத்த இருநாட்டு கிரிக்கெட் சபைகளும் ஒப்புக் கொண்டுள்ளன.

அமெரிக்காவில் கிரிக்கெட்டை பிரபலப்படுத்தும் நோக்கில் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஜூலை மாதத்தில் மியாமி, ஃபுளோரிடாவில் இப்போட்டி நடைபெறவுள்ளது.

இலங்கை, நியூஸிலாந்து, மேற்கிந்தியத்தீவுகள் ஆகிய நாடுகள் ஏற்கனவே மியாமி, ஃபுளோரிடாவில் கிரிக்கெட் போட்டியில் பங்கேற் றுள்ளன. ஆனால் அங்கு ஆடுகளம் சரியில்லாததால் போட்டிகள் சிறப்பாக நடைபெறவில்லை.

பாகிஸ்தான் அணி ஜூலை 7ஆம் திகதி மேற்கிந்தியத்தீவுகளுக்குச் செல்கிறது. அங்கு 5 ஒருநாள் போட்டிகளில் விளையாடுகிறது. அதைத் தொடர்ந்து இரு அணிகளும் அமெரிக்கா செல்கின்றன்.

**சம்பியன்ஸ் கிண்ணம்**

**இன்றைய ஆட்டம்**

**இங்கிலாந்து Vs இலங்கை**



பர்மிங்காமில் நடைபெற்ற தென்னாபிரிக்கா-பாகிஸ்தான் அணிகளுக்கிடை யிலான சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் 5 ஆவது லீக் ஆட்டத்தின்போது ரசிகர்கள் இடையே மோதலில் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டனர்.


## தீவுகளின் விக்கெட் காப்பாளருக்கு அபராதம்

மேற்கிந்தியத் தீவுகள் அணி யின் விக்கெட் காப்பாளர் டினேஷ் ராம்டினுக்கு இரண்டு ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்று வதற்குத் தடை விதிக்கப்பட்டுள் ளது. அத்தோடு, அவரது போட்டி ஊதியத்தின் 100 சதவீதமும் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் அணிக்கெதிராக இடம்பெற்ற சம்பியன்ஸ் கிண்ணப் போட்டியில் மிஸ்பா உல் ஹக் வழங் கிய பிடியொன்றைப் பிடித்ததாகத் தவறாகத் தெரிவித்தார் என்ற குற் றச்சாட்டிலேயே அவருக்கு இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மிஸ்பா உல் ஹக் வழங்கிய பிடியைப் பிடித்த டினேஷ் ராம்டின், அந்தப் பிடியை முழுமை செய்யும் முன்னரே பந்து அவரது கைகளிலி ருந்து நழுவிக் கீழே விழுந்தி ருந்தது. இது கிரிக்கெட் விதிகளின் படி அவர் பிடியைப் பூர்த்தி செய்ய வில்லை என்பதாகவும்.

எனினும், அந்தப் பிடியைத் தான் பிடித்து விட்டதாக டினேஷ் ராம்டின் தெரிவித்து, மிஸ்பா உல்



ஹக் ஆட்டமிழந்ததற்கான கொண் டாட்டங்களில் ஈடுபட்டிருந்தார்.

இதன்படி, கிரிக்கெட் உணர்வு களுக்கெதிரான நடத்தையை வெளிப படுத்தினார் எனத் தெரிவித்து டினேஷ் ராம்டினுக்கு எதிராக விசாரணை நடாத்தப்பட்டு, 2 ஒருநாள் சர்வதே சப் போட்டித் தடையும், 100 சதவீத அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மேற்கிந்தியத் தீவு கள் அணியின் எஞ்சியுள்ள குழுநி லைப் போட்டிகள் இரண்டிலும் அவர் பங்குபற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

## ஸ்ரீசாந்த் பிணையில் விடுதலை

ஐ.பி.எல். சூதாட்டத்தில் ஈடுபட்டு கைதான ராஜஸ்தான் ராயல்ஸ் வீரர்கள் ஸ்ரீசாந்த், சண்டிலா மற்றும் சூதாட்ட தரகர்கள் 16 பேருக்கு டில்லி உச்ச நீதிமன்றம் பிணை வழங்கியது.

27 நாட்கள் சிறைக்கு பின்பு டில்லி திகார் சிறையில் இருந்து ஸ்ரீசாந்த் தனது சொந்த ஊரான கேரளாவுக்கு நேற்று சென்றார். நேற்று காலை கொச்சி வந்த ஸ்ரீசாந்தை விமான நிலையத்தில் ரசிகர்களும், உறவினர் களும் வரவேற்றனர். அங்கு அவர் பத்திரிகையாளர்களுக்கு கண்ணீர் மல்க அளித்த பேட்டியில்,

சூதாட்ட வழக்கில் நான் சுத்தமானவன், குற்றமற்றவன் என்பதை நிரூபிப்பேன். எனது எதிரிக்கு கூட இது மாதிரியான நிலைமை வரக் கூடாது. நான் எந்தவித தவறும் செய்யவில்லை. என்னை நம்புங்கள் எனது பயிற்சி தொடரும். கேரளா திரும்பியது எனக்கு மகிழ்ச்சியை தருகிறது. எனது மக்களை சந்திப்பேன். கடந்த சில நாட்களுக்கு முன்பு நடந்த சம்பவங்களை மறக்க நினைக்கிறேன். பெற்றோர், நண்பர்கள் ரசிகர்களுடன் இனி எனது பொழுதை கழிப்பேன். இவ்வாறு கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஆஸி-நியூசிலாந்து போட்டி மழையால் கைவிடப்பட்டது

அவுஸ்திரேலியா- நியூசிலாந்து அணிகள் மோதிய சம்பியன்ஸ் கிண்ணத் தொடரின் லீக் போட்டி மழையால் ரத்து செய்யப்பட்டது.

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் சாம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடரில் நேற்று நடந்த ஏ பிரிவு லீக் போட்டியில் நியூசிலாந்து- அவுஸ்திரேலியா அணிகள் மோதின. நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலியா அணியின் அணித் தலைவர் ஜார்ஜ் பெய்லி துடுப்பாட்டத்தை தெரிவு செய்தார்.

அவுஸ்திரேலியா அணிக்கு வோட்சன், வேட் ஜோடி தொடக்கம் கொடுத்தது. மெக்லினகன் வீசிய 2வது ஓவரில் வோட்சன் 5 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இதன் பின்னர் களம் கண்ட பெய்லி ஆட்டத்தை தன் வசப்படுத்தினார். மறுமுனை யில் வேட் ஒன்றிரண்டு ஓட்டங்களாக சேர்த்தார். நேதன் மக்கலம் பந்தில் வேட் 29 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அரை சதம் கடந்த பெய்லி 55 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.




வில்லியம்சன் பந்துவீச்சில் 2 பவுண்டரி விளாசிய மார்ஷ் 22 ஓட்டங்களிலும் வோக்ஸ் 71 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

50 ஓவர் முடிவில் அவுஸ்திரேலியா அணி 8 விக்கெட்டுக்கு 243 ஓட்டங்கள் எடுத்தது. பந்து வீச்சில் நியூசிலாந்து அணியின் மெக்கிளின்கன் 4 விக் கெட் வீழ்த்தி னார். இதனையடுத்து 244 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 15 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 51 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலை யில் மழை பெய்ததால் போட்டி ரத்து செய்யப்பட்டது.

இதனால் இரு அணிகளுக்கும் தலா 1 புள்ளி வழங்கப்பட்டது.

## சிங்களமொழி அத்தாட்சிப் பத்திரப் பரீட்சை
## (Diploma in sinhala Languag e)

இந்து பௌத்த கலாசாரப் பேரவையால் நடாத்தப்படும் சிங்கள, ஆங்கில மொழி கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கான பரீட்சை எதிர்வரும் ஆடி மாத இறுதியில் நடைபெறவுள்ளது. வெளிவாரியாக சிங்களமொழியைக் கற்றவர்களும் சான்றிதழ் பெற விரும்பினால் இப் பரீட்சைக்குத் தோற்றமுடியும் விரும்புபவர்கள் பின்வரும் முகவரிகளில் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

1. இந்து பௌத்த கலாசாரப் பேரவை 29, பழம் வீதி, கந்தர்மடம். தினமும் காலை 9.00 மணி - பிற்பகல் 4.30 மணி வரை
2. இந்து பௌத்த கலாசாரப் பேரவை A9 வீதி,சாவகச்சேரி (அமிர்தாம்பிகை பாடசாலைக்கு அருகில்) வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் காலை 9.30-பிற்பகல் 4.30 மணிவரை
3. யா/நெல்லியடி மத்திய கல்லூரி சனி,ஞாயிறு தினங்களில் காலை 9.00 மணி நண்பகல் 12.00மணிவரை
4. யா/இராமநாதன் கல்லூரி சனி, ஞாயிறு தினங்களில் 9.00 மணி- நண்பகல் 12.00மணிவரை

(சி-3609)

# இலங்கை மீதான...

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நியூயோர்க்கில் ஐநா செயலகத்தில் உத்தியோபூர்வ ஊடகமான இன்னர்சிற்றி பிரஸ் செய்தியாளருக்கு அளித்த செவ்வி ஒன்றி லேயே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட் டுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு தண்டனை விதிக்கப்படுவதனை இலங்கை அரசாங்கம் உறுதிசெய்ய வேண் டும் என போர்க்குற்ற விவகாரங்களைக கையாளும் அமெரிக்கத் தூதுவர் ஸ்டீபன் ராப் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், இவ்விவகாரம் தொடர்பில் தேவையான அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுப்பது குறித்து முடிவு செய்வதற்காக இலங்கையை அமெரிக்கா உன்னிப்பாக அவதானித்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் செயலகத்தில் இன்னர் சிற்றி பிரஸ் ஊடகவியலாளருக்கு நேற்று முன்தினம் வழங்கிய செவ்வியின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இச்செவ்வியின் போது இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் பொறு ப்புக்கூறுவது குறித்து ஸ்டீபன் ராப்பிடம் இன்னர் சிற்றி பிரஸ் கேள்வி எழுப்பியிருந்தது.

இக்கேள்விக்குப் பதிலளித்த ஸ்டீபன் ராப், "இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறப்படாமை மற்றும் உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படாமை ஆகியவை குறித்த எமது ஏமாற்றத்தை வெளிப்படுத்தும் வகையில் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கை மீது இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யத் திட்டமிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கத்துடனான இடைவெளிகளை நிரப்புவதற்காக ஐ.நா மனித வுரிமைகள் ஆணையாளர் மற்றும் அதன் சிறப்பு பிரதிநிதிகளை மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும் படி ஐ.நா மனித வுரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கை மீது கடைசியாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்நிலையில் இலங்கை விவகாரம் தொடர்பில் ஐ.நா மனித வுரிமைகள் ஆணைககுழுவின் அடுத்த அமர்வுகளில் தேவையான நடவடிக்கைகளை எடுப்பது குறித்து முடிவு செய்வதற்காக இலங்கையை அமெரிக்கா உன்னிப்பாக அவதானித்து வருகின்றது" எனத் தெரிவித்துள்ளார். (எ-11)

# அதிகாரத்துடன் கூடிய...

உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தநாட்டில் தொடர்ந்து ஆட்சிக்கு வரும்சகல அரசாங்கத்தினாலும் திட்டமிடப்பட்டு, ஒருங்கமைக்கப்பட்டு அவற்றினது முழு அதிகாரங்களையும், வளங்களையும், பயன்படுத்தி கொலைகள் மூலமும் எமது கட்டுமானங்களை சிதைப்பதன் மூலமும் செயற்படுத்தப் பட்டுவரும் தமிழ் இன அழிப்பிலிருந்து எப்படி தப்பிப்பது என்பதுதான் எப்போதும் தமிழர்களின் முக்கிய பிரச்சினையாகயிருந்து வருகிறது..

இந்தக்கொடூரமான இன அழிப்பிலிருந்து தப்பித்து எப்போதும் தமிழ் இனமாக,தமிழ்த் தேசமாக நிலைத்திருக்க வேண்டும் என்பதே எங்கள் விருப்பம்.

அதற்காகத்தான் கடந்த 60 வருடங்களாக நாங்கள் பல்வேறு வழிகளிலும் போராடி வருகின்றோம்.

எங்களது தேசிய இருப்புக்கான உயிரினும மேலான இந்த ஆவலை 13வது திருத்தமோ, அதன் கீழ்வரும் மாகாணசபைத் தேர்தலோ, அதில் வெற்றிபெற்று நாம் அமைக்கக்கூடிய மாகாண சபையோ ஒரு போதும் சொற்ப அளவில் தானும் பூர்த்தி செய்யப்போவதில்லை. அதனால் 13வது திருத்தத்தை தமிழரின் பிரச்சினைக்குத் தீர்வாக நான் ஒருபோதும் கருதவில்லை.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் வழி உருவாகிய இந்த 13வது திருத்தம் ஆரம்பத்தில் இருந்தே தமிழ்த்தேசத்தின் அபிலாஷைகளையும் நியாயமான அச்சங்களையும் சற்றேனும் கருத்திலெடுக்கவில்லை. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த தமிழருக்கு சாதகமான ஒரு சிலசரத்துகள் கூட 13வது திருத்தத்தில் உள்ளடக்கப்படவில்லை.

தமிழ் மக்களின் அபிலாஷைகள் என்ன என்பதை உலகுக்கு வெளிப்படுத்தும் வகையில் மீண்டும் ஒரு தடவை மிகத் தெளிவான ஆணையைப் பெற இத் தேர்தலை பயன்படுத்த முடியும். தமிழரின் தேசிய அபிலாஷைகளான தமிழருக்கு ஒருதாயகம் உண்டு. தமிழர் ஒரு தேசம. அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை உள்ளது என்பவற்றை அடிப்படையாகஏற்றுக்கொண்டு அவற்றைப் பாதுகாக்கக் கூடிய அதிகாரங்கள் உள்ள, தமிழர்கள் தம்மைத்தாமேஆளக்கூடிய அதிகாரங்களைத் தரக்கூடியஒருதீர்வே தமிழர்களின் அபிலாஷையாகும் அதற்கேற்றவாறான ஒருகாத்திரமான, வெளிப்படையான பிரகடனமாக தேர்தல் விஞ்ஞாபனத்தை நாம் மக்களின் ஆணைக்காக முன் வைப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

# மரண அறிவித்தல்

## கதிர்காமு இளையதம்பி



வேம்படி உடுத்துறையைப் பிறப்பிடமாகவும் விசுவமடு மேற்கு விசுவமடுவை வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு இளையதம்பி அவர்கள் 11.06.2013 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற இளையதம்பி தெய்வமணி அவர்களின் அன்புக் கணவரும் தனபாலசிங்கம் (E.T.J), ஹாட்வெயார் புதுக்குடியிருப்பு), திருமதி மு.தமிழ்ச் செல்வி (வேம்படி உடுத்துறை), விஜயசிங்கம் (நிசல்யா வாணிபம் விசுவமடு, கிளிநொச்சி), கதிர்காமநாதன் (நோர்வே), அமிர்தநாதன் (டென்மார்க்), திருமதி சா.தெய்வரஞ்சிதம் (புன்னைநீராவி), திருமதி சி.தெய்வசோதி (நோர்வே), திருமதி இ.தெய்வராணி (சுவிஸ்), திருமதி ஜெ.தெய்வரஜனி (ஆசிரியர் ,மு/விசுவமடு ம.வி), ரகுநாதன் (லண்டன்), திருமதி உ.தெய்வமதி (லண்டன்), திருமதி நி.தெய்வசிறி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.


அன்னார் திருமதி த.புனிதவதி (புதுக்குடியிருப்பு) த.முத்துராஜா (T.M.R) திருமதி வி.இராஜலட்சுமி(கிளிநொச்சி) திருமதி க. இந்திராணி(நோர்வே) திருமதி வி.விஜயரஞ்சனா (டென்மார்க்), ந.சாந்தகுமார் (புன்னைநீராவி), வே.சிவசோதி(நோர்வே), ம.இராஜகுமார் (சுவிஸ்) வை.ஜெயபாலன் (ஆசிரியர், மு/விசுவமடு ம.வி) திருமதி இ.வசந்தி (லண்டன்) செ.உதயன்(லண்டன்), நி.நிர்மலன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

இவரது இறுதிக் கிரியைகள் விசுவ மடுவில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் இடம் பெற்று 13.06.2013 இன்று காலை 10.00 மணியளவில் 12-ம் கட்டை விசுவமடுவில் அமைந்துள்ள இந்து மயானத்திற்கு தகனத்திற்காக பூதவுடல் எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத் தருகிறோம்.

தகவல் :
குடும்பத்தினர்.
T.P : 0770858197

(3021)

# கண்ணீர் அஞ்சலி



உருத்திரபுரம் - சிவநகர், இல.16/1 இல் வசித்து வந்த எமது சங்கத்தின் மூத்த உறுப்பினர்

**பொன்னம்பலம் கதிரவேலு**

12.06.2013 இல் அமரத்துவம் அடைந்துவிட்டார். எமது சங்கத்தின் சார்பில் கண்ணீர் அஞ்சலியை தெரிவிப்பதோடு அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**மூதியோர் சங்கம், சிவநகர்.**

(சி-3605)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பனையால்...

பின் சடலம் இரவு 7.45 மணியளவில் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (எ-6,11)

## அரச ஆதரவு...

ளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தனவும் பொறுப்புக்கூற வேண்டும் என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தாக்குதல்களை நடத்துவோரையும் கொலைகளை செய்வோரையும் தங்களுடன் வைத்துக் கொண்டு நீதிநெறிமுறைகள் பற்றி கதைப்பதையிட்டு அரசாங்கம் வெட்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஏற்பட்ட சூறாவளி மற்றும் சீரற்ற காலநிலை காரணமாக உயிரிழந்த மீனவர்களின் குடும்பத்தினருக்கு அனுதாபம் தெரிவிப்பதற்காக எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பலப்பிட்டிக்கு நேற்று முன்தினம் மாலை விஜயம் மேற்கொண்டிருந்தபோது அவரது வாகன தொடரணியின மீது கல்வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (எ-11)

## குருதிக் கொடை...

500 பேர் அழைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து 137 பேருக்கு அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டுள்ளது. ஆகவே அழைப்பிதழ்கள் கிடைக்கப் பெற்றவர்கள் தங்கள் பயண ஒழுங்குடன் இன்று இரவு 7.00 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்குச் சமுகம் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

அவர்களுக்கான போக்குவரத்து, தங்குமிட ஒழுங்குகள் எம்மால் செய்யப்பட்டுள்ளது என்பதனை மகிழச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல. 0772105375 என யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியின வைத்திய அதிகாரி அறிவித் துள்ளார். (எ)

## மீனவர்களுக்கு...

யான வேகத்தில் காற்று வீசுவதற்கான சாத்தியம் உள்ளதால் மீனவர்கள் மிகவும் அவதானமாக செயற்படுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை வரையான கடல் மற்றும் கடற்கரையோரப் பிரதேசங்களிலும் சீரற்ற காலநிலை நிலவும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, புத்தளம் மற்றும குருணாகல் மாவட்டங்களிலும் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும். அத்துடன் கிழக்கு, மத்திய, ஊவா, வட மத்திய மாகாணங்களில் கூடிய மழை வீழ்ச்சிகளுடன் இடைக்கிடை மழை அல்லது இடியுடன் கூடியமழைபெய்யும் எனவும் அந்நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (எ-11)

## பேராயர் சம்மேள...

சட்டம் இலங்கை மீது பலவந்தமாக திணிக்கப்பட்டது. அப்போது மேற்படி அமைப்புகள் அமைதியாக இருந்தன எனவும் அந்த அதிகாரி கூறியுள்ளார்.

உலகில் எந்த தொரு நாடும் தமது நாட்டின் தேசிய பாதுகாப்பு தொடர்பான விடயத்தில், தனது பாதுகாப்பு பேரவையின் ஆலோசனைகளை பின்பற்றுமேயன்றி அரச சார்பற்ற நிறுவனங்களின் கோரிக்கைக்கு தலை வணங்காது.

அமெரிக்காவின் பாதுகாப்பு மற்றும் இணக்கப்பாடுகளை ஏற்படுத்தி கொள்ளவில்லை என அமெரிக்க அரசாங்கம் அண்மையில் தெரிவித்திருந்தது எனவும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை தேசிய பாதுகாப்பு தொடர்பில் இணககப்பாடுகளை ஏற்படுத்தி கொள்வதை பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அண்மையில் நிராகரித்திருந்தார்என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)


வேலையாள் தேவை

யாழ்ப்பாணம் நல்லூர் வீதியில் உள்ள ஸ்ரார் சிற்றி பான்சி கடைக்கு பெண் வேலை ஆள் தேவை

தொடர்பு-0776141928 (C-3025)

பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளிற்கு 20-50 வயது வரையான ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். சனி, ஞாயிறு வேலை நாளாகும். வெள்ளி ஓய்வாகும்.
யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் பிரதேசத்தவர்கள் மாத்திரம் நேரில் வரவும்.

✪ முகாமையாளர்
பல்கலைக்கழக பட்டம் ஒன்று. அத்தோடு சேவை முன்னனுபவம் மேலதிக தகைமையாகும். ஆங்கில சிங்கள மொழியாற்றல் முக்கியம். மாதாந்த வேதனம் 35 000.00 முதல் இணைந்த படிகளும்.

✪ முகாமைத்துவ உதவியாளர்/ Clerk
க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி . அத்தோடு சேவை முன்னனுபவம் மேலதிக தகைமையாகும். ஆங்கில சிங்கள மொழியாற்றல் முக்கியம். வேதனம் நேரில் தீர்மானிக்கப்படும்.

✪ அலுவலக சிற்றூழியர் (பீயோன்)
8 ஆம் தரச்சித்தி. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
நேர்முகப்பரீட்சை சனி 15.06.2013 மு.ப. 10 மணிக்கு நடைபெறும்.

திசைகாட்டி பிறைவேற் லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். (சி-3601)

முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் மற்றும் செலுத்துநர்களுக்கு......

முச்சக்கரவண்டிகளுக்கான மீற்றர்களைப் பொருத்தும் முன்னோடி நிறுவனமாகிய நாம் காலத்தின்தேவைகருதியும் கட்டணக் கணிப்பானின் (Fare Meter) பாவனையை பரவலாக்கும் நோக்குடன் கட்டணக் கணிப்பான்களின் விலைகளில் கழிவுகள் வழங்கப்பட்டுள்ளன என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருவதில் பெரும் மகிழ்ச்சி கொள்கிறோம்...
எமது Win Digital Auto Fare Meter ஆனது புதிய Budget Meter ஒன்றினையும் அறிமுகப்படுத்தியுள்ளோம்...

புதிய Budget Meter இன் பெறுமதி




- ✔ குறைந்த விலை
- ✔ மின்கலம் (Battery) அவசியம் இல்லை
- ✔ தவணைமுறைக்கொடுப்பனவு வசதி
- ✔ ஒப்பீட்டு அளவில் மற்றைய Meterகளை விட கூடுதல் வசதிகள்
- ✔ உயர் தொழில்நுட்பம்
- ✔ முற்றுமுழுதாக இலங்கையில் தயாரானது
- ✔ ஒருவருடகால உத்தரவாதம்
- ✔ விற்பனைக்குப் பிந்திய சேவை

இம்மாதம் மட்டுமே கட்டணக் கழிவு வழங்கப்படும் உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

மேலதிக விபரங்களுக்கு :
Pearl Technology (PVT) Ltd
இல. 130, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இ. 021 221 9898 (3014)

FRENCH LANGUAGE CENTRE
CENTRE FOR FRENCH
FRENCH CLASSES (சி-3575)

France,Canada,Swiss,Belgium செல்வோர், ஆர்வமுள்ளோர் French கற்று International Certificates இனை பெற்றுக் கொள்ளலாம்...
ஆசிரியர் : Mr. V. Jegan (Teaching Training in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்)
இது வரைக்கும் 710 க்கும் மேற்பட்டோர் French கற்றுள்ளனர்...
ஆரம்பம் : 22.06.13 Sat at 2pm. No. 23, Palaly Road, ஆரியகுளம். (அப்பலோ Hospital க்கு அண்மையில்).
: 24.06.13 Mon at 11am. No. 181, 1st Floor, Main Street, Nelliady. (சோதி வீதி முன்பாக)
0779 789 456
English, Deutsch, Italian, & Sinhala வகுப்புக்களும்...

வேலையாட்கள் தேவை

மல்லாகம் றோட் கே.கே.எஸ் றோட் - மல்லாகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அதிநவீன கணனி, தொலைத் தொடர்புச் சாதனங்கள் விற்பனை ஸ்தாபனத்திற்கு சக ஊழியர்கள் பலர் தேவை.

க.பொ.த உயர்தரம், கணனியியல், இலத்திரனியல் தகைமையுடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். (3017)

ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பம், தராதரச் சான்றிதழ்களுடன் 15.06.2013 காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரையில் தேர்வுக்காக விண்ணப்பம் மற்றும் தராதரச் சான்றுகளுடன் நேரில் சமுகமளிக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு:
077 009 5119
திருஞானம்
ISHI TECHNOLOGY
K.K.S.Road, Mallagam Road
Puliyamthoddam (Near Court)
Mallagam

ALLIANCE FRANÇAISE DE JAFFNA

French மொழி கற்பிப்பதற்கு French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட வட மாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Francaise de Jaffna மட்டுமே. இது ஓர் அரிய சந்தர்ப்பம். மேலும் தரமான Certificate ஐ பெறுங்கள்.
புதிய வகுப்புகள் விரைவில்... T.P: 0212228093
61, Kachchery-Nallur Road, Jaffna.
(றக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்) (3015)

வெளிநாடுகளுக்கு பொதிகள், ஆவணங்கள் அனுப்பும் முதல்தர சேவை

10 கிலோவிற்கு மேற்பட்ட பொதிகளுக்கு வியப்பூட்டும் விலைக்கழிவுகள்
லண்டன்- 725/- பிரான்ஸ், ஜேர்மன்- 800/- அவுஸ்ரேலியா, டென்மார்க்- 850/- கனடா , சுவீஸ் , நோர்வே- 950/-
5 நாட்களில் உங்கள் இருப்பிடம் தேடி கொடுக்கப்படும்
யாழ், கிளிநொச்சி, முள்ளியவளை, வவுனியாவில் (சி-3608)

பிரவீணன் என்ரபிறைசஸ் 35/1, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா (C-3537)
பிரணவன் என்ரபிறைசஸ் 365, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
பிரணவன் என்ரபிறைசஸ் தொண்டமான் நகர், கிளிநொச்சி
தொடர்புகளுக்கு- 0773818799

OFFER Mega OFFER SALES
DUAL CORE RS-48,500/=
3rd.Gen,intel m/b,500GB,2GB,DVD,Keyboard,Mouse,19'LED,Ups
CORE i3 RS-56,900/=
3rd.Gen,intel m/b,500GB,2GB,DVD,Keyboard,Mouse,19'LED,Ups
CORE i5 RS-68,500/=
3rd.Gen,intel m/b,500GB,2GB,DVD,Keyboard,Mouse,19'LED,Ups
FREE H.PHONE MOUSE PAD
FOR 3 DAYS
எமது சுன்னாக கிளையில்

OFFER Mega OFFER SERVICE
for 1 month
CHECKING CHARGE FREE
SYSTEM SERVICE ONLY RS 100/=
எங்கும் இல்லாத மிகக் குறைந்த கட்டணத்தில்
♣ System Repair ♣ Printer Repair
♣ Laptop Repair ♣ CCTV Installation
♣ Network Installation ♣ Intercom Installation (சி-3610)

NALIN Information Technologies Pvt Ltd
Mega OFFER NALIN Show Room
116 G, K.K.S Road, Chunnakam.
TP:- 021-2242222 ,0777-140431


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.06.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.